Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

30°c 28°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 262 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 30, வியாழன் 15.08.2013

பேசுவதில் பயனில்லை பாகிஸ்தானிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தது இந்தியா 06

நட்பு நாடல்ல இந்தியா பாகிஸ்தான் நிதி அமைச்சர் ஆவேசம் 07

ஹீதர் நைற், மார்ஷ் அபாரம் பலமடைந்தது இங்கிலாந்து 23

# துப்பாக்கி ஆட்சி நடத்தும் அரசை விரட்டியடிப்போம்

## கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் சுமந்திரன் எம்.பி. ஆவேசம்

கொழும்பு, ஓக. 15

"துப்பாக்கி, வெடிகுண்டுகளினூடாக ஆட்சி நடத்தும் மஹிந்த அரசை ஆட்சிபீடத்திலிருந்து விரட்டியடிப்பதற்காகத் தொடர்ந்தும் போராடுவோம்."

- இவ்வாறு நேற்று சூளுரைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். வெலிவேரிய தாக்குதலுக்கு எதிராகக் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கில் தொடர்ச்சியாக அரங்கேறிவரும் இராணுவ ஆட்சி, தற்போது தெற்குப் பக்கமும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. சுத்தமான நீரைக் கோரிய மக்களுக்கு துப்பாக்கி ரவைகளை வழங்கியுள்ள அரசு, கட்டுநாயக்க ஆர்ப்பாட்டத்தையும் இவ்வாறு தான் கலைத்தது. அதில் ரொசான் சானக என்பவர் கொல்லப்பட்டார்" என்றும் அவர் கூறினார்.

"மக்களுக்கு எதிரான இந்த அரசை இனியும் விட்டு வைக்க முடியாது. எனவே, அரசையும், அரச குடும்பத்தையும் ஆட்சிபீடத்திலிருந்து முற்றாக அகற்றவேண்டும். இதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும். எமது போராட்டத்தின் ஆரம்பமாக இது அமையவேண்டும்" என சுமந்திரன் மேலும் கூறினார். (த-சி)




## கிளிநொச்சியில் தேர்தல் அத்துமீறல் எதுவுமில்லை

கிளிநொச்சி, ஓக. 15

கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்தல் அத்துமீறல் தொடர்பாக இதுவரை முறைப்பாடு எதுவும் தெரிவிக்கப்படவில்லையென கிளிநொச்சி மாவட்டத் தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது. நேற்று நண்பகல் வரை தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் தெரிவிக்கப்பட்டுள்ளனவா எனக் கேட்டபோதே தேர்தல் அலுவலகம் மேற்கண்டவாறு தெரிவித்தது. (க-18)

## ஆள் கடத்தலில் கடற்படைக்கு தொடர்பு

கொழும்பு.ஓக.15

ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் தமிழ் அகதிகளை அனுப்பி வைத்து ஏமாற்றும் மோசடிகளில் இலங்கைக் கடற்படைக்குத் தொடர்புகள் இருப்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

மீன்பிடிப் படகுகளில், தமிழ் அகதிகளை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கும் குழுவைச் சேர்ந்த 16 பேரை இலங்கைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களில் நான்கு பேர் இலங்கைக் கடற்படையினராவர். அவர்களில் ஒருவர் இலங்கைக் கடற்படையில் பணியாற்றும் சிவில் அதிகாரி என்று பொலிஸ் உயர் அதி

தொடர்ச்சி: பக்கம் 21

# 'கொலையாளி ராஜபக்ஷ' கொழும்பில் நேற்று கோஷம்

## நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் திரண்டது சனத் திரள்

கொழும்பு, ஓக. 15

வெலிவேரிய தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக பொது எதிரணி நேற்று மாபெரும் ஆர்ப் பாட்டமொன்றை முன்னெடுத் தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு வந்து, இதில் பங்கேற்று அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

ரணில் விக்கிரமசிங்க, மனோ கணேசன், சுமந்திரன், விக்கிரமபாகு, சிறிதுங்க ஜயசூரிய, சரத் மனமேந்திரா, ஹேமகுமார நாணயக்கார ஆகியோர் உட்படப் பல அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். அத்துடன், தொழிற்சங்கங்கள், ஊடக அமைப்புகள் ஆகியனவும் ஆர்ப் பாட்டத்துக்குத் தமது ஆதரவை வழங்கும் வகையில் பங்கேற்றிருந் தன.

பல அம்சங்கள் அடங்கிய கோரிக்கைகளை முன் வைத்து பிற்பகல் 3 மணியளவில் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பேரணியாக ஜனா

தொடர்ச்சி: பக்கம் 21

## காணாமற்போனோரை கண்டறிய குழுவை நியமித்தார் ஜனாதிபதி

கொழும்பு,ஓக 15

காணாமற்போனவர்கள் பற்றி விசாரணை செய்யும் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

போர்க் காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற்போனவர்களைப் பற்றி விசாரிப்பதற்காகவே மூன்று பேரைக் கொண்ட இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகமவைத் தலைவராகக் கொண்ட இந்தக் குழுவில் திமின்கு படாதுருகே பிரியந்தி சுரஞ்சனா வைத்தியரத்ன அம்மையார் மற்றும் மனோ ராமநாதன் அம்மையார் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்த ஆணைக்குழுவுக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கும் தேவைப்பட்டால் புலனாய்வு செய்வதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழு 6 மாதங்களுக்குள் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

ஆள்கள் கடத்தப்பட்ட அல்லது காணாமற்போகச்செய்யப்பட்ட சம்பவங்கள் கண்டறியப்படுமிடத்து அதற்குப் பொறுப்பானவர்களை அடையாளம் காண்பது அவசியம் எனவும் அந்த நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆணைக் குழுவுக்கு வழங்கிய அறிவுறுத்தலில் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பு, நல் வாழ்வு என்பவற்றுக்காகவும் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறுவதைத் தடுப்பதற்கும் இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

## இந்தியாவுக்கு ஆயுதங்களை இலங்கை விற்கவேயில்லை

### அந்தோனியின் கூற்றை மறுக்கிறது ராணுவம்

கொழும்பு.ஓக 15

இந்தியாவுக்கு இலங்கை ஆயுதங்கள் எதனையும் விற்பனை செய்யவில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் றுவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையிடம் இருந்து இந்தியா ஆயுதங்களை வாங்கியதாக வெளியான செய்திகளை அவர் அடியோடு நிராகரித்துள்ளார்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே அந்தோனி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியாவின் முப்படைகளுக்காக, ரஷ்யா, இஸ்ரேல், பிரிட்டன், அமெரிக்கா, சுலோவாக்கியா, போலந்து, பின்லாந்து, இலங்கை ஆகிய

தொடர்ச்சி: பக்கம் 21

## கூட்டமைப்பு ஆதரவாளர்கள் வவுனியாவில் நேற்றுக் கைது

வவுனியா, ஓக. 15

வவுனியா கனகாரயன் குளம் பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் இருவர் கனகராயன் குளம் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் பயன்படுத்திய வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

வடமாகாண சபைத் தேர்தலில் வவுனியா மாவட் டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிடும்

தொடர்ச்சி: பக்கம் 21

# நல்லிணக்க முயற்சிகளையே அரசிடம் எதிர்பார்க்கிறது ஐ.நா.

## இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு,ஓக 15

நல்லிணக்க முயற்சிகளை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் என்றே ஐ.நா எதிர்பார்க்கிறது என்றும், அதை இலங்கை மீது திணிக்க முடியாது என்றும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி சுபைனே நண்டி தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க அனைத்துலகக் கற்கைகள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நல்லிணக்கம் வெளியில் இருந்து வரமுடியாது. ஏனென்றால் நல்லிணக்கத்துக்கான தீர்வை இலங்கை வைத்திருக்கிறது. நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மிகச் சிறந்த ஆலோசனைகளாக உள்ளன. அரசின் தேர்தல் விஞ்ஞாபனமான மகிந்த சிந்தனையில் கூட நல்ல ஆலோசனைகள் உள்ளன. அவை உள்ளகத் தீர்வுகள். அவற்றை நடைமுறைப்படுத்த ஐ.நா. ஆதரவளிக்கிறது. (த)

## வடக்குத் தேர்தல் குறித்து பிரிட்டனில் கூட்டங்கள்

### சம்பந்தன் கலந்துகொள்கிறார்

லண்டன் , ஓக.15

'வடமாகாண சபைத் தேர்தலும் புலம்பெயர் தமிழ் மக்களின் பங்களிப்பும்' என்னும் தொனிப்பொருளில் பிரிட்டனில் கூட்டங்களை நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிட்டன் கிளை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.'

இந்தக் கூட்டங்கள் இன்று வியாழக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும இரு இடங்களில் நடைபெறவுள்ளன. இந்தக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றவுள்ளார்.

முதலாவது கூட்டம் இன்று வியாழக்கிழமை லண்டன் நேரப்படி மாலை 6.30 மணிக்கு மிடில் செக்ஸ் என்ற இடத்தில் நடைபெறவுள்ளது. இரண்டாவது கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஈஸ்றதாம் என்ற இடத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டங்களில் பிரிட்டனில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-4)

அதிசயம்!
ஆனால் உண்மை
செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் உதயன்
வாசகர்களுக்கு மட்டும்
ஆவலுடன் எதிர்பாருங்கள்

# தலைமறைவான 'மன்மதராசா'

யாழ்ப்பாணம், ஒக.15
இரண்டு பெண்களைத் திருமணம் செய்து பத்துப் பிள்ளைகளுக்குத் தந்தையாகவுள்ள ஒருவர் தனது வேலைத்தளத்தில் பணியாற்றி வந்த ஒருவரின் மனைவியை-ஒரு பிள்ளையின் தாயை மூன்றாவது மனைவியாக்கும் நோக்கில் அவரைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டார்.

பலரிடம் கடன் வாங்கியிருந்த நிலையில் அவர் இப்போது. தலைமறைவாக இருக்கிறார். இதனால் வருமானமின்றி வறுமையால் வாடும் இரண்டாவது மனைவி சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பாக யாழ். நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 48 வயதுடைய மன்மதனே மூன்றாவது மனைவியாக்கும் நோக்கில் பெண்ணொருவரைக் கூட்டிச் சென்றுள்ளார்.

இவர் ஓட்டுமடம் பகுதியில் இரும்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார். முன்னர் வல்வெட்டித்துறையில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து ஏழு பிள்ளைகளுக்குத் தந்தையாகவுள்ளார்.

ஆனைக்கோட்டையில் தங்கியிருந்து வியாபாரம் செய்து வந்த வேளை அதே இடத்தைச் சேர்ந்த பெண்ணை இரண்டாவது மனைவியாக்கிக் கொண்டார். இரண்டாவது மனைவியின் மூலமாக 3 குழந்தைகள் பிறந்தன. அவர்கள் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.

ஓட்டுமடத்தில் அவரது கடையில் சுமார் 25 வயதுடைய மற்றொருவர் வேலை செய்து வருகிறார். அவரது மனைவிக்கு 23 வயது. ஒரு பெண் குழந்தையும் உள்ளது. ஸ்ரீஸ்குமாருக்கு அவருடன் தொடர்பு ஏற்பட்டது. இதற்கு இரண்டாவது மனைவி கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். இதனால் ஒரு முறை இரண்டாவது மனைவியுடன் மோசமாக நடந்து கொண்டதனால் மன விரக்தியடைந்து தவறான முடிவுக்குச் சென்று வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியிருந்தார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோதே யாழ்ப்பாண பொலிஸாரினால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு நீதி மன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. தாபரிப்பு வழக்காக அது விசாரணை தொடர்கிறது.

இந்நிலையில் முதலாவது மனைவியிடமிருந்து சற்று விலகி பின்னர் இரண்டாவது மனைவியிடமிருந்தும் விலகி ஒரு பிள்ளையின் தாயான - குறித்த 23 வயதுப் பெண்ணை மூன்றாவது மனைவியாக்கிக் கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் அந்த மன்மதனை இன்னும் கைது செய்யவில்லை.

இது தவிர அவரிடம் இலட்சக் கணக்கில் பணம் கடனாகக் கொடுத்தவர்கள் இரண்டாவது மனைவியின் வீட்டுக்குச் சென்று பணத்தைத் தருமாறு வற்புறுத்தி வருகின்றனர் என்றும். அதனால் தனது பிள்ளைகளுக்கு ஏதாவது கெடுதல் ஏற்படுமோ என்றும் அவர் அச்சம் வெளியிட்டுள்ளார். (த-4)

# புத்தகாயா தாக்குதல்; இந்துப் பூசகர் கைது

புதுடில்லி, ஒக. 15
இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் உள்ள புத்தகாயா பகுதியில் அமைந்துள்ள மகாபோதி விகாரை பிரதேசத்தில் நடந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்தியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் இந்துப் பூசகரான அருப்பிரக் மாச்சாரி என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் பின்னர், இந்த நபர் பொலிஸாரிடம் சிக்காது தலைமறைவாக இருந்து வந்துள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் புத்தகாயா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரைணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் இந்தியப் பொலிஸார் பலரிடம் விசாரணைகளை நடத்தி வந்தனர்.

புத்தகாயா மகாபோதி விகாரை இலங்கை மகாபோதி சங்கத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. புத்தகாயா மகாபோதி விகாரை மீது கடந்த ஜுலை மாதம் 7ஆம் திகதி குண்டுத் தாக்குதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த)

## திரைப்படங்கள் காட்சிக்கு

யாழ்ப்பாணம், ஒக.15
யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள்மற்றும்பயிற்சிமையத்தில் இன்று வியாழக்கிழமை உலகப் புகழ் பெற்ற சர்வதேச திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இந்த நிகழ்வு யாழ்.நகர் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள பயிற்சி மைய மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் சத்தியஜித் றே இயக்கத்தில் உருவான "பாதேர் பாஞ்சாலி", "சாத்ராங் கி கிலாரி" மற்றும் ஜப்பானிய இயக்குநர் யசுஜிறோ ஒசுவின் இயக்கத்தில் உருவான "டோக்கிய ஸ்டோரி லைட்" ஆகிய மூன்று படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. திரைப்பட ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஜ-10)

## ஐவரை வெளியேற்றியது மு.கா.

கொழும்பு, ஒக. 15
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய அரசியல் உயர்பீட உறுப்பினர்கள் ஐவர் கட்சி அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் எனக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

இது தொடர்பில் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்ததாவது: நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியல்களில் ஆப்தீன் எஹியா, ஏ.எல்.எம்.மில்ஹான், எஸ்.எச். ஏ.ஹரீம், எம்.கே.எஸ்.முனாஜித், எம்.எச்.எம்.நஜாத் ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் புத்தளம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் போட்டியிடக் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து மரச் சின்னத்தில் போட்டியிடுவதாக எடுத்த முடிவை மேற்கூறிய ஐவரும் மீறியுள்ளதுடன் கட்சியின் யாப்பினையும் கட்டுப்பாட்டையும் உதாசீனம் செய்துள்ளனர்.

இந்த ஐவரையும் அரசியல் உயர்பீட உறுப்பினர் பதவியிருந்து நீக்குவதுடன், அங்கத்துவத்திலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்-என்றார். (த-10)

## தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிக் கண்காட்சி இன்று

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிகளின் வலயமட்ட ஆக்கத்திறன் கண்காட்சி இன்று வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் கண்காட்சிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினமும், சிறப்பு விருந்தினராக வேள்ட் விஷன் நிறுவனப் பிரதிநிதி ஏ.ஜி.றொசைநோவும் கலந்துகொள்ளவுள்ளனர். (9-400)

## பள்ளிவாசல் மீதான தாக்குதல்; பிரதேச சபைகளும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக.15
முஸ்லிம் மக்களின் பள்ளிவாசல்கள் அடிக்கடி தாக்குதல்களுக்கு உள்ளாவது குறித்து நல்லூர் பிரதேச சபை, சாவகச்சேரி நகர சபை ஆகியன கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற நல்லூர் பிரதேச சபையின் விசேட கூட்டத்தில், முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்படுவது குறித்த கண்டனப் பிரேரணையை சபையின் தலைவர் ப.வசந்தகுமார் சபையில் சமர்ப்பித்தார். முஸ்லிம் மக்களின் வழிபாட்டுத் தலமான பள்ளிவாசல்களும் இந்து, கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டுத் தலங்களும் அடிக்கடி தாக்குதல்களுக்கு உள்ளாவதாகவும், அரசு சம்பந்தப்பட்டவர்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுப்பதுடன் மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் ஆவன செய்ய வேண்டும் எனவும் தெரிவித்து உறுப்பினர்கள் ஒட்டுமொத்த ஆதரவுடன் பிரேரணையை நிறைவேற்றினர்.

இதேவேளை - சாவகச்சேரி நகர சபை கூட்டத்திலும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முஸ்லிம்களின் புனித நாள்களில் ஒன்றான ரம்ழான் தினத்தன்று கூடியிருந்த முஸ்லிம் சகோதரர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட வன்முறையானது இனங்களுக்கிடையில் உள்ள சமூக உறவினை சீர்குலைக்கும் செயலாகும்.

இதற்குக் காரணமானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென உறுப்பினர் சி.சிறிதரன் முன்மொழிந்த பிரேரணையை அனைத்து உறுப்பினர்களும் ஆதரித்து உரையாற்றினர். இதனையடுத்து இவ்வாறான வன்முறைகள் இடம்பெறுவதை நகர சபை கண்டிப்பதாகவும், மீண்டும் இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் இடம்பெறாதிருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை கூறினார். (த-7-9)

## வாஸுக்கும் மகனுக்கும் விளக்கமறியல் நீடிப்பு



கொழும்பு, ஒக. 15
பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் சியாம் கொலைவழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவுக்கும் அவரது மகனுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

வாஸ் குணவர்த்தன அவரது புதல்வர் ரவிந்து குணவர்த்தன உள்ளிட்ட 9 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஏ.எம்.சஹாப்தீன் நேற்று உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 9ஆவது சந்தேகநபர் எதிர்வரும் 21ஆம் திகதி காலி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள வழக்கில் முன்னிலையாக வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த)

## நூலை வெளியிட ஒரு மணிநேரம் காத்திருப்பு

யாழ்ப்பாணம், ஒக.15
யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சமூகவியல் சிந்தனைகள் நூல் வெளியீட்டு விழாவுக்குச் சென்ற கூட்டுறவாளர்கள் பலர் சில மணி நேரம் மண்டபத்துக்கு வெளியே காத்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வுக்கு முன்னர் இதே மண்டபத்தில் மற்றுமொரு நிகழ்வு வடமாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு காலை 9 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து ஒரு மணித்தியாலம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. சரியாகத் திட்டமிடப்படாத நிகழ்ச்சி நிரல் நிகழ்வுகள் நேரம்பிந்தி ஆரம்பமாகின. நூல் வெளியீட்டு விழா ஒரு மணி நேரம் தாமதித்தே ஆரம்பமாகியது. நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்த அனேகமான கூட்டுறவாளர்கள் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகக் காத்திருந்து சிலர் திரும்பிச் சென்றனர். (த-17)

# இலங்கைக்கு வருகிறார் தென் கொரியப் பிரதமர்

கொழும்பு, ஒக. 15
தென் கொரியா பிரதமர் ஜுங்-ஹொங்-வோன் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வருகிறார். அவர் எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாகவும் 30 ஆம் திகதி வரை அவர் அங்கு தங்கியிருப்பார் எனவும் தென் கொரியப் பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதேவேளை இலங்கை தொழிலாளர்களுக்குவழங்கும்வேலை வாய்ப்புகளை அதிகரிக்குமாறு இலங்கை தென் கொரியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தென் கொரியாவுக்கு பயணம் செய்திருந்த போது, அந்த நாட்டின் வெளிவிவகார முதலாவது பிரதியமைச்சர் கிம் கியூ ஹெயூனைச் சந்தித்த போது இந்தக் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. (த)



## காணி அமைச்சர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஒக. 15
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் திடீரெனச் சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தம்புள்ள வைத்தியசாலையிலேயே அவர் அனுமதிக்கப்பட்டார். யாப்பாகமவிலுள்ள தனது வீட்டிலிருந்த போதே அவர் திடீரெனச் சுகவீனமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சுகவீனமடைந்த அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனை விசேட ஹெலி மூலம் உடனடியாகக் கொழும்பு வைத்தியசாலைக்கு அழைத்துவருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ விமானப்படைத்தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார். (த)

## பிரதேச சபை உறுப்பினர்கள் எம்.பிக்களுடன் இன்று சந்திப்பு

வலி.தென்மேற்கு, ஒக. 15
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரத்திலுள்ள வலி.தென்மேற்கு - வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசசபைகளின் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை மாலை அந்தந்தப் பிரதேச மண்டபங்களில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சகல உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (த-115)

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரரின்
நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை

புதியவரவு சல்வார் 1200/= தொடக்கம்,
கொட்டன் சாறி 440/= தொடக்கம்
ஆண்களுக்கான சேட் -390/= தொடக்கம்,
இந்தியன் றொப்- 400/= தொடக்கம்.
இன்னும் பல விதமான ஆடைகளையும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள



(31281)
114, நாவலர் றோட், யாழ்ப்பாணம். T.P:- 021 2219393

## டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டம்

தென்மராட்சி, ஓக.15
தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் டெங்கு ஒழிப்புக் குழு உறுப்பினர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.
கடந்த வாரம் தென்மராட்சிப் பிரதேசத்தில் கடும் மழை பெய்ததையடுத்து பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் டெங்கு நோய் பரவும் அபாய நிலை தோன்றியுள்ளது. இந்த நோய் வருமுன் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இயங்கும் டெங்கு ஒழிப்புக் குழுக்களின் பிரதிநிதிகளை கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

## மருத்துவ பரிசோதனை தென்மராட்சியில் சனியன்று

தென்மராட்சி, ஓக.15
தென்மராட்சி பிரதேச மக்களுக்கான மருத்துவ பரிசோதனை முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறும்.
மருத்துவ பரிசோதனை முகாமில் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகியவற்றின் விசேட வைத்திய நிபுணர்கள் கலந்து கொண்டு கண், குழந்தைகள் நோய், நீரிழிவு, குருதி அமுக்கம், பல், காது, மூக்கு, தொண்டை, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகளை மேற்கொண்டு மருந்துகள் வழங்குவுள்ளனர்.
கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவச மாக வழங்கப்படும்.
நடைபெறவுள்ள மருத்துவப் பரிசோதனை முகாமில் பிரதேசத்தின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-9)

## சில்பா கண்காட்சி கொழும்பில் இன்று


யாழ்ப்பாணம் ஓக.15
தேசிய அருங்கலைகள் பேரவையின் ஏற்பாட்டில் 2013 ஆம் ஆண்டுக்கான சில்பா கண்காட்சி இன்று வியாழக்கிழமை கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன.
நாடளாவிய ரீதியில் உள்ள கைத்தொழிலாளர்களை ஒன்றிணைத்து அவர்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இதன் போது உற்பத்திப் பொருள்கள் விற்பனையும் செய்யப்படவுள்ளன.
உள்ளூர் உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்தி செய்யப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. மரங்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்கள் மற்றும் பனை உற்பத்திப் பொருள்கள், இயற்கைப் பொருள்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்கள் என முற்றுமுழுதாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
உள்ளூரில் சிறந்த உற்பத்தியாளர்கள் இதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கண்காட்சி தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறவுள்ளதுடன் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட வெளிநாடுகளில் இருந்தும் முதலீட்டாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். முதலீட்டாளர்கள் ஊடாக ஏற்றுமதிகளை மேற்கொள்வதற்கும் இந்தக் கண்காட்சி வாய்ப்பாக அமையவுள்ளது. (வ-14)

## வைத்தியர் வருகைக்காக காத்திருக்கும் நோயாளர் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் முறைப்பாடு

தென்மராட்சி, ஓக.15
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் வைத்தியர்கள் இல்லாததால் நோயாளர்கள் மணிக்கணக்கில் வைத்தியர்களின் வரவுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது. இவ்வாறான முறைப்பாடுகள் பல எமக்குக் கிடைப் பதால் இது தொடர்பாக மாகாண சுகாதார அமைச்சுக்கு கடிதம் அனுப்பி தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களால் நேற்றைய கூட்டத்தில் முறையிடப்பட்டது.
தினமும் மு.ப.10 மணிக்குப் பின்னர் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் வைத்தியர்களின் வருகைக்காக காத்திருப்பதாகவும், அங்கு கடமையில் உள்ளவர்களைக் கேட்டால் வைத்திய அதிகாரி வெளியில் சென்று விட்டார் எனக் கூறுகின்றனர் எனவும் முறைப்பாடு கிடைத்துள்ளது.
பிரதேச மக்களின் நலனில் எமக்கு அக்கறையுள்ளதால் வைத்தியர்களின் நடவடிக்கைகள் குறித்து மாகாண சுகாதார அமைச்சருக்கு முறையிடுவதெனக் கொண்டுவரப்பட்ட பிரேரணையை உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர். இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதாக நகரசபைத் தலைவர் தெரிவித்தார். (வ)

# சோலைவரிக்கான சேவையில் ஆர்வம் காட்டிய மக்கள்

### நேற்றைய நடமாடும் சேவையில்



யாழ்ப்பாணம், ஓக.15
நல்லூர் பிரதேச சபையின் நடமாடும் சேவை நேற்று புதன்கிழமை காலை 9 மணி முதல் பி.ப.ஒரு மணிவரை கோண்டாவில் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது சோலைவரி பகுதியில் அதிகமானோர் தமது சேவைகளைப் பெறுவதில் ஈடுபட்டனர்.
பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சோலைவரி, வியாபார உரிமங்கள், சிமெந்துக் கட்டடங்களுக்கான அனுமதிகள் போன்றவற்றுடன் இரத்ததான நிகழ்வும் ஆயுள்வேத மருந்து விநியோகம் புத்தகக் கண்காட்சி என்பனவும் இடம்பெற்றன.
சோலைவரி தொடர்பான சேவையில் மக்கள் அதிக அக்கறை காண்பித்தனர். சிறுவர்களும் மாணவர்களும் புத்தகக் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.
கணிசமான தொகையினர் நடமாடும் சேவை மூலம் தமது தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காண்பித்தனர். (வ-7)

## மாணவருக்கான தடை நீங்கியது இன்று முதல் பல்கலைக்கு செல்வர்

யாழ்ப்பாணம், ஓக.15
யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட 3ஆம், 4ஆம் வருட மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குள் செல்ல பதிவாளரால் விதிக்கப்பட்ட தடை 14 நாள்களின் பின்னர் நேற்று நீக்கப்பட்டுள்ளது. இன்று முதல் மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குச் செல்லமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கலைப்பீட 3ஆம், 4ஆம் வருட நுண் கலைப்பீடம் தவிர்ந்த குழுக்களுக் கிடையேமோதல் காரணமாக இந்தத் தடை.**

கடந்த 31ஆம் திகதி பதிவாளர் வி.காண்டீபனால் இந்தத் தடை விதிக்கப்பட்டது. கலைப்பீட 3ஆம், 4ஆம் வருட நுண் கலைப்பீடம் தவிர்ந்த கலைப்பீட மாணவர் குழுக்களுக்கிடையே 31 ஆம் திகதி ஏற்பட்ட மோதல் காரணமாக இந்தத் தடை விதிக்கப்பட்டது.
குறித்த இரண்டு வருடங்களையும் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழகத்திலிருந்து உடனடியாகவும் பல்கலைக்கழக விடுதியிலிருந்து 12 மணித்தியாலங்களுக்குள்ளும் வெளியேற வேண்டும். அவர்கள் பல்கலைக்கழகத்துக்குள்ளேயோ, விடுதிகளுக்குள்ளேயோ நுழையக் கூடாதென பதி வாளரால் தடை விதிக்கப்பட்டது.
அதனால் இரண்டு வார காலமாக மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் செல்லவில்லை. இதனால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளும் நடைபெறவில்லை. இந்நிலையிலேயே அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் இன்று வியாழக்கிழமை தொடக்கம் அந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் செல்லமுடியும் என்றும் தகவல் தெரிவிக்கப்படுகிறது. (வ-4)

## நீதிமன்றினால் ஒப்படைக்கப்பட்ட சிறுவன் பராமரிப்பு இடத்தில் இருந்து மாயம்

தென்மராட்சி, ஓக. 15
நீதிமன்றினால் அரியாலையில் உள்ள பாடசாலையொன்றில் ஒப்படைக்கப்பட்ட சிறுவன் நேற்றுமுன்தினம் இரவு அங்கிருந்து தப்பியோடியுள்ளார் என்று பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
கடந்த முதலாம் திகதி வரணிப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய ஹற்றனைச் சேர்ந்த சிறுவனைக் கொடிகாமம் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.
இந்தச் சிறுவனை அரியாலையில் உள்ள சான்று பெற்ற பாடசாலையில் ஒப்படைக்குமாறு நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது. இந்த நிலையில் சிறுவன் குறித்த பாடசாலையில் ஒப்படைக்கப்பட்டான். குறித்த சிறுவன் நேற்றுமுன்தினம் இரவு அங்கிருந்து காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. இது குறித்துப் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ஐ-9)

### பாடசாலை மதிய உணவுத் திட்டத்துக்கான

## உணவுப் பொருள்களை பரிசோதிக்க முடிவு

யாழ்ப்பாணம், ஓக.15
பாடசாலை மாணவர்களுக்கான மதியஉணவுக்குரிய உணவுப்பொருள்களை களஞ்சியப்படுத்துவதற்கு முன் அவை சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதிக்கப்படவேண்டும் என யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
உலக உணவுத் திட்ட அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
பாடசாலைகளில் மதிய உணவு வழங்கப்படுவதில் ஏற்படும் நெருக்கடிகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதன் போது மதிய உணவுக்கான அரிசியைத் தூய்மைப்படுத்துவதில் ஏற்படும் தாமதம், பாடசாலைகளுக்கு உணவுப் பொருள்களை வழங்குவதற்கென போதிய வாகன வசதிகள் இன்மை போன்ற விடயங்கள் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.
இவ்வாறான நெருக்கடிகளைக் குறைப்பதற்கு உணவுப் பொருள்களை அந்தந்தப் பாடசாலைகளிலேயே களஞ்சியப்படுத்துவது.
உணவுப் பொருள்களை வழங்குவதற்கு முன்னர் சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்துவது
வலயக் கல்வி அலுவலகத்தினர், அரச செயலக உலக உணவுத் திட்டப் பிரிவினர், பிரதேச அலுவலர் இணைந்து பாடசாலைகளில் திடீர் பரிசோதனைகளை நடத்துதல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
இந்தக் கலந்துரையாடலில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-400-35)



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சமூகவியல் சிந்தனையாளர் நூல் வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் சி. கோணேஸ்வரன் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதனால் மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்படுகிறார். நூலின் முதற் பிரதியை பெற்றுக் கொண்ட தொழிலதிபர் பி.நாகரத்தினம் அருகில் நிற்கின்றனர். (எ-17)

உதயன்
15/08/2013

## இசையரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 15
இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலைவளர்ச்சி மையத்தின் இசையரங்கு இன்று பிற்பகல் 5 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.
ரசிகப்பிரியா சபா கலைவளர்ச்சி மையத் தலைவர் இணுவையூர் வி.கே. குகானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கு. நக்கீரனின் பாடல்களுக்கு அணிசேர் கலைஞர்களாக வயலின்- திருமதி வனஜா ஈஸ்வர் சர்மாவும், மிருதங்கம் -செல்வன் கே. பிரணவகரனும், கெஞ்சிரா நா. சிவசுந்தர சர்மாவும் வழங்கும்
தொடர்ந்து நோர்வே சகோதரிகளான மீரா திருச்செல்வம், தீபா திருச்செல்வம் ஆகியோரின் புல்லாங்குழல் இசை இடம்பெறும். இதில் வயலின்- திருமதி வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம்- க.நந்தகுமார், கெஞ்சிரா- கிருபா ஆனந்தகோபன் மற்றும் கடம்- கு.ரவிசங்கர் ஆகியோர் இணைந்து அணி செய்வர். (400)

உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுக்கு

# கூட்டத்துக்கு அழைப்பில்லை

## சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் கவலை

தென்மராட்சி, ஓக். 15
தென்மராட்சி பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப் பட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப்படாதது குறித்து சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.
தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள இரு உள்ளூராட்சி சபைகளில் 2 தலைவர்கள் உட்பட மக்கள் பிரதிநிதிகள் 24 பேர் சேவையாற்றி வருகின்றனர். கூட்டத்துக்கு மக்கள் பிரதிநிதியொருவரே தலைமை வகிக்கிறார். பிரதேசத்தில் மக்களால் தெரிவிக்கப்படும் பிரச்சினை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளது.
பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றுக்கு கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு அனுப்பப்படுகின்ற போதிலும் மக்கள் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பப்படாதது குறித்து அனைத்து உறுப்பினர்களும் கவலை தெரிவித்தனர்.
இந்த விடயம் பிரதேச செயலரின் கவனத்தில் கொண்டு வருவதாக நகர சபைத் தலைவர் இ.க.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்




*முன்னவர் கோயிற் பூசை
முறை முறையாற்றும் அண்ணல்
வன்மை சேர் நடராஜகுரு
வியன் மனையாள் விஜயலஷ்மி
கன்னலின் மொழி அம்மை
கருணையின் அழகு மிக்காள்
உன்னத நீர்வைக் கந்தன்
உயர் பாதம் சேர்ந்தனளே*

**ஸ்ரீமதி விஜயலட்சுமி நடராஜக்** குருக்களாகிய நம் அத்தையின் ஆத்மா ஆவரங்கால் ஆடவல்ல பெருமானின் பாதத்தில் இன்பமுற வேண்டுகின்றோம்.

சிவஸ்ரீ. இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள்
பிரம்மஸ்ரீ இ பாலமுருகன் சர்மா
நீர்வேலி

## மரண அறிவித்தல்

### இளையதம்பி பசுபதி



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பசுபதி நேற்று (14.08.2013) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - அம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் நாகம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, இராமையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் மனோன்மணி, ஜெயராணி (ஆசிரியை-கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்), வைத்திய கலாநிதி பத்மசிறி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாதம், யோகானந்தம், சிவப்பிரியதர்சன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் இராசமுத்து, தவமணி (வலி. கிழக்கு பிரதேச செயலகம்- கோப்பாய்) ஆகியோரின் மைத்துனரும் பிரசன்னா (தொழில்நுட்பக் கல்லூரி- கொக்குவில்), பிருந்தா (யாழ். பல்கலைக்கழகம், வர்த்தகத்துறை மாணவி), காயத்திரி (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, விஞ்ஞான பிரிவு மாணவி), லக்சனா (மாணவி- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை), விஸ்வஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பேரனும் சிவகுமாரின் (மருத்துவ உதவியாளர், கைதடி வைத்தியசாலை) பெரிய தகப்பனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று வியாழக்கிழமை (15.08.2013) பி.ப. 4 மணிக்கு அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை பிரதான வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்:
வை.சிவபாதம்
(மருமகன்) குடும்பத்தினர்

(சி/11177)

### மயானத்தை புனரமைக்க நடவடிக்கை

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.
மயானத்தில் சேதமடைந்த நிலையில் உள்ள மண்டபத்தை மீளப் புனரமைத்து அதற்கு கூரை வசதியை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அத்துடன் மயானத்தை சூழவுள்ள சுற்றாடல் பகுதியும் துப்புரவு செய்யப்படவுள்ளது. (வ-17)

## மரண அறிவித்தல்

### பிரபாகரன் சிவகுமாரி



3ஆம் கட்டையடி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபாகரன் சிவகுமாரி நேற்று 14.08.2013 காலமானார்.
அன்னார் பிரபாகரனின் அன்பு மனைவியும் பிரசாந்தின் அன்புத் தாயும் சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசலிங்கம் -கோகிலா தம்பதியரின் அன்பு மகளும் உதயகுமாரியின் அன்பு சகோதரியும் ஜெயராணி, காலஞ்சென்ற கருணாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுகல்யா, தேனுஷன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2013) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை,
கல்வியங்காடு.

(31375)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அப்புலிங்கம் சந்திரமோகன் (தவில் வித்துவான்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புலிங்கம் சந்திரமோகன் (தவில்வித்துவான்) நேற்று (14.08.2013) அகாலமரணமானார்.
அன்னார் அப்புலிங்கம் -யோகம்மா தம்பதியரின் புதல்வனும் சிவசாமி- நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சிரெஞ்சியின் (லதா) அன்புக் கணவரும் தர்சிகா, நிரோசிகா, மயூரிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் குமரேஸனின் மாமனும் சஸ்விகனின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2013) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

(31376)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி சபினா வேலுப்பிள்ளை-தி.கு.



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி சபினா வேலுப்பிள்ளை நேற்று புதன்கிழமை (14.08.2013) இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (15.08.2013) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்,
மாகாணத் தலைவி.

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் விவேகானந்தன்

(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர், காங்கேசன்துறை)

சித்தன்கேணி சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும், பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் விவேகானந்தன் (ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர், காங்கேசன்துறை) 14.08.2013 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர், யாழ்.)-திலகவதியம்மாவின் அன்பு மகனும், வாகீசபிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நித்தியமங்களா தேவியின் அன்புக் கணவரும், மணிவண்ணன், கிருத்திகா, காலஞ்சென்ற நீதிவண்ணன் மற்றும் மதிவண்ணன், நாகவண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜராஜேஸ்வரி, சுரேந்திரன், தயாளினி ஆகியோரின் அன்பு மாமனும், லக்சிகனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்வவதி அருணாசலம்பிள்ளை மற்றும் ராமநாதன், சர்வேஸ்வரி, பரமேஸ்வரி, கனகாம்பிகை காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (15.08.2013) மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி.

குடும்பத்தினர்.

# நெடுந்தீவு மீனவருக்கு முழுமையான மானியம்

யாழ்ப்பாணம், ஓக.15
நெடுந்தீவு பிரதேச மீனவர்களுக்கு முழுமையான மானிய முத்திரையை வழங்க கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
மீனவ சங்கங்களில் பதிவுசெய்யப்பட்ட மீனவர்களுக்கு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சால் மானிய முத்திரை வழங்கப்பட்டுவரும் நிலையில் மீனவர்கள் சங்கத்தில் பதிவு செய்யப்படாத காரணத்தால் குறிப்பிட்ட மீனவர் களுக்கு மானிய முத்திரைகள் வழங்கப்படவில்லை.
இந்த நிலையில் நெடுந்தீவு பிரதேச மீனவர்கள் சிலர் மானிய முத்திரைகளைப் பெறமுடியாத நிலையில் இருந்தனர்.
நீரியல் வளத்துறை அமைச்சால் மீனவர்களின் படகுகளுக்கு 9 ஆயிரத்து 325 ரூபா பெறுமதியான மானிய முத்திரைகள் வழங்கப்படுகின்றன. இதனூடாக பொருளாதார ரீதியாகப் பாதிப்படைந்துள்ள மீனவர்கள் நன்மையடைந்துள்ளனர்.
நெடுந்தீவு பிரதேச மீனவர்களுக்கு அமைச்சால் முழுமையாக மானிய முத்திரையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-14)




நல்லூர்க் கந்தனின் மூன்றாம் நாள் வீதியுலாக் காட்சி

## வீரசிங்கம் மண்டபம் முன்பாக வாகனத் தரிப்பிடம் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.15
யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்துவதால் பிரதான வீதியூடான போக்குவரத்துக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.
வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்ள வருகை தரும் மக்கள் தமது வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதி இன்றி சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
இந்த நிலையில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்ள வருகை தருவோரின் வாகனங்களை நிறுத்துவதற்கான இடவசதிகளை ஏற்படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட கூட்டுறவு சபையை மக்கள் கேட்டுள்ளனர். (வ-17)

## அகற்றுங்கள் முறிந்த கம்பத்தை



நவாலி சங்கையான் வீதியிலுள்ள பழைய மின்கம்பத்துக்கு பதிலாக புதின மின்கம்பம் நடப்பட்டு பல மாதங்களாகியும் பழைய மின்கம்பம் அந்த இடத்திலிருந்து அகற்றப்படவில்லை. அது எந்த நேரத்திலும் முறிந்து விழும் நிலையிலுள்ளது. சனநடமாட்டம் மிகுந்த இந்த இடத்தில் விபத்துக்கள் நடக்கும் முன் அந்தக் கம்பத்தை அகற்றி விட வேண்டும் என அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (ஓ-100)

## சாவகச்சேரி நகர சபை உத்தியோகத்தர்களுக்கு சீருடைப் படி அதிகரிப்பு

தென்மராட்சி, ஓக.15
சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள், கனிஷ்ட ஊழியர்கள் ஆகியோருக்கான சீருடைப் படியாக ரூபா 4 ஆயிரம் வீதம் வழங்க நேற்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
உள்ளூராட்சி அமைச்சால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை பிரகாரம் கனிஷ்ட ஊழியர்களுக்கு அந்தந்த பதவி நிலைக்கேற்ப வெவ்வேறு நிறங்களில்சீருடைத்துணிகள்சபையால் கொள்வனவு செய்து வழங்குவதெனவும் சீருடைத் துணிகள் கொள்வனவு செய்வதற்கும் அதனை உரிய முறையில் தைப்பித்து வழங்கவுமென குழு அமைக்கப்படுமெனவும் அதன் மூலம் விரைவில் சீருடைகள் வழங்க முடியுமெனவும் தீர்மானிக்கப்பட்டதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## நல்லூர் பதியுறை முருகா!

ஒளியாறு ஒருங்கிணைந்து உருவான முருகா
பிறை சூடி எம் பெருமான் மகனான அருளா
திசையெட்டும் அருள் பொழியும் நல்லூர் பதி இறைவா!
அருள் கிட்டும் எம்மவர்க்கு மகிழ்வேயினி தலைவா!

இளவயதில் உனதருகில் பல கேட்ட மனமே
அருள் நிறைந்த தரு விருட்ச மரமான உந்தன்
எதிர்கால உயர் வாழ்வை தந்திடவே எனக்கு
ஒரு வாழ்வு புதுவாழ்வு தனி வாழ்வு தந்தாய்!

மண் புழுதி தரையிருந்து மனமேங்கு பொழுதில்
விண்ணுயர் உன் கோபுர ஒளி காணும் கண்கள்
தண்ணொளியாய் நீர் நிறைந்து வலிமாறியுந்தன்
வண்ணமது மயிலழகு கண்டு மனதாறும்

களையாய் கிழமாய் வளமாய் ஔவை
அழகாய் அருகில் வந்துன் நிழலில்
தருவாய் உயர்வாய் நின்ற வுன் அருளில்
கனியால் கவிக்கு மெய்யுரைத்த முதல்வா!

அருளுரைத்து துயர்துடைத்து மனமிசை உணர்வளித்து
எமதருமை பணியுயர பண்புயர்தல் நெறியளித்து
உயர்வளித்து உன் பொருள் புகழும் எமக்களித்து
புவி மீது உயர் வாழ்வு அருள் தருவாய் கந்தா!

யோகராசா ஜெயகாந்தன்.



## பரவசம் கொள்வர் காண்

நான்முகனை சிறையில் தள்ளிய நாயகனின்
நான்காம் திருவிழா இன்று
தேன்சொரியும் மலர் போன்ற வதனமும்
வான்நிலாப் போல் பேர் வடிவழகும்
பூச்சொரியும் பாவையர்கள் தாமெல்லாம்
ஆச்சரியமாய் நோக்கும் அழகனவன்
பேச்சொலியேதும் இல்லாது வலம்வருபவனை- பக்தர் தம்
மூச்சுவிடாமல் பாடி பரவசம்கொள்வர் காண்!

வேல்முருகு

# சேதமடைந்த மதகை கவனிப்பார்களா?



நவாலி, ஓக.15
மானிப்பாய் பிரதான வீதியிலிருந்து இணுவிலுக்குச் செல்லும் வீதியின் ஆரம்பத்திலுள்ள வெள்ளம் பாய்ந்து செல்லும் மதகின் ஒரு பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது.
இதனால் பிரதான வீதிகளிலிருந்து இந்த வீதிக்குப் பயணிக்கும் வாகனங்கள் திடீரென திரும்ப முடியாமல் நடு வீதிக்கு சென்றே திரும்ப வேண்டியுள்ளது. இதன் காரணமாக அங்கு விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன.
அத்துடன் வெள்ளம் பாய்ந்து செல்ல முடியாமல் வீதிகளில் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு அந்தப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-100)

## கழிப்பறைகள் இல்லாத நவாலி பிரசாத் சந்தை

நவாலி, ஓக.15
நவாலி பிரசாத் சந்தையில் மலசல கூட வசதிகள் இன்மையால் அந்தச் சந்தை வியாபாரிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.
வருடா வருடம் மாறி மாறி சந்தை குத்தகை நடத்துவோர் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபையிடம் எடுத்துக் கூறியும் இதுவரை எவருமே அது குறித்து கவனம் செலுத்த வில்லை.
காலை தொடக்கம் பிற்பகல் வரை வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு திடீரென வயிற்றுக் கோளாறு ஏற்பட்டால் அருகில் அமைந்துள்ள வீடுகளிலுள்ள மலசல கூடங்களை நாடிச் செல்கின்றனர்.
இது தொடர்பாக குறித்த சந்தையின் குத்தகைகாரருக்கும் வியாபாரிகளுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையில் மலசல கூடம் அமைக்கும் வரை தாம் இனிமேல் குத்தகைப் பணம் செலுத்துவதில்லை என்று வாக்குவாதப்பட்டனர்.
இவ்வாறான நிலை ஏற்பட்டால் குத்தகைக் காரருக்கு பெரும் நட்டம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.
எனவே, சம்பந்தப்பட்ட வர்கள் இந்த நிலைமையை நேரில் பார்வை யிட்டு இது தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வியாபாரிகள் கேட்டுள்ளனர். (வ-100)



உதயன்
15/08/2013

# பேசுவதில் பயனில்லை

## பாகிஸ்தானிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தது இந்தியா

புதுடில்லி, ஓக.15

இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் இராணுவத்தின் அத்துமீறல்கள் நிறுத்தப்படும் வரை அந்நாட்டுடன் எந்த விதப் பேச்சுகளிலும் ஈடுபடப் போவதில்லை என்று இந்தியா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் இந்தியாவுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள நிலையிலேயே இந்தியா இவ்வாறு திட்டவட்டமாகக் கூறியுள்ளது.



இந்தியாவுடன் நட்புறவுக்கு அழைப்பு விடுத்த பாகிஸ் தான் பிரதமர் நவாஸ் ஷெரிப், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் ஒரு புதிய ஆரம்பத்தை மேற் கொள்ளலாம் என்று தெரிவித்திருந்தார்.

### பயனற்ற பேச்சு

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் செய்யத் அக்பருதீன்,

''பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் நேசக்கரத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஆனாலும் இந்தியா எழுப்பி உள்ள கேள்விகளுக்கு பதிலளிக்காதவரை பாகிஸ்தானுடன் எந்தப் பேச்சுகளும் நடத்தப்படமாட்டாது.

அண்மையில் எல்லைப் பகுதியில் இந்திய இராணுவத்தினர் 5 பேர் உயிரிழந்தமை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது பாகிஸ்தான் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### விளைவு விபரீதம்

எல்லைக் கட்டுப்பாட்டு கோடு அருகே இனியும் அத்துமீறிய தாக்குதல் தொடர்ந்தால், இரு நாட்டு உறவில் பாதிப்பு ஏற்படுவதுடன் அதற்கான விளைவுகளையும் பாகிஸ்தான் எதிர் கொள்ள வேண்டும். 2008 ஆம் ஆண்டு நிகழ்ந்த மும்பைத் தாக்குதல் குற்றவாளிகளுக்கு எதிராகவும் பாகிஸ்தான் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதுடன், அவர்களை நீதியின் முன்பும் நிறுத்தும் வகையில் பாகிஸ்தான் செயற்பட வேண்டும்'' என்று தெரிவித்தார்.

இந்தியாவுடன் நட்புறவுக்கு அழைப்பு விடுத்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப், இரு நாடுகளுக்குமிடையேயான உறவில் ஒரு புதிய ஆரம்பத்தை மேற் கொள்ளலாம் என்றும், நாம் நல்ல நண்பர்களாக இருப்போம் என்றும் கூறியிருந்தார். (ற)

# காற்றில் இருந்து குடிநீர்

## முதன்முறையாக தமிழகத்தில்

சென்னை, ஓக.15

காற்றில் இருந்து நீர் உற்பத்தி செய்யும் திட்டம் முதன் முறையாக தமிழகத்தின் மதுரை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மதுரையில் பரிசோதிக்கப்பட்ட இந்த சோதனைத் திட்ட

வெற்றியளித்துள்ளதை அடுத்தே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மதுரை மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

இந்தத் திட்டத்துக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இயந்திரம் காற்றில் உள்ள ஈரப்பதனைப் பிரித்து, திரவமாக்குவதுடன், அதை வடிகட்டி சுத்தமான நீராக மாற்றக்கூடிய து.

மதுரையில் குடிநீர் பற்றாக்குறையான பகுதிகளில் முதற்கட்டமாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், அதன் பயனைப் பொறுத்து மற்றைய இடங்களிலும் திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# சுதந்திர தினம் இன்று




சென்னை, ஓக.15

இந்தியாவின் 67 ஆவது சுதந்திரதினம் இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

சென்னையில் நடைபெறவுள்ள சுதந்திரதின விழா நிகழ்வுகளில் கோட்டையில் முதல்வர் ஜெயலலிதா, தேசியக் கொடியை ஏற்றி வைத்து பேசவுள்ளார்.

சுதந்திரதினவிழாநிகழ்வுகளை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்படுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மட்டும் சுமார் 3 இலட்சம் பொலிஸார் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ற)



இந்தியாவின் காஷ்மீர் மாகாணத்தில் இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற வன்முறைகள் பல்வேறு இடங்களுக்கும் பரவியதன் காரணமாக 8 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் நடமாடும் பொதுமக்களை விரட்டியடிக்கும் பொலிஸார்.

# சீன இராணுவம் ஊடுருவல்

புதுடில்லி, ஓக.15

இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் எல்லை மீறித் தாக்குதல் நடத்தியதில் ஏற்பட்டுள்ள பதற்றம் தணியாத நிலையில், காஷ்மீர் பகுதிகளில் சீன இராணுவம் மீண்டும் ஊடுருவியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

காஷ்மீரின் சிக்கும் பகுதியில் ஊடுருவியுள்ள சீன இராணுவத்தினர், இந்திய எல்லைக்குள் சுமார் 30 கிலோமீற்றர்தூரம் உள்நுழைந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

எனினும் இதுகுறித்து இந்திய இராணுவத் தரப்பு உத்தியோகபூர்வ தகவல் எதனையும் தெரிவிக்கவில்லை.

பாகிஸ்தான் இராணுவத்தினரின் ஊடுருவல்களால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த ஊடுருவல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ற)

# 'நாளைய முதல்வனே' சுவரொட்டியால் சிக்கலில் சிக்கிக் கொண்டார் விஜய்

சென்னை, ஓக.15

தமிழகத்தின் ஓசூர் பகுதியில் 'நாளைய முதல்வனே' என்ற வாசகத்துடன் விஜய் ரசிகர்கள் ஒட்டிய சுவரொட்டியால் உளவுத்துறை பொலிஸாரின் கண்காணிப்புக்குள் விழுந்துள்ளார் நடிகர் விஜய்.

நடிகர் விஜய் நடித்த 'தலைவா' திரைப்படத்தை வெளியிடக் கூடாது என்று திரையங்குகளுக்கு வெடிகுண்டு மிரட்ட விடுக்கப்பட்டதை அடுத்து 'தலைவா' படம் தமிழக திரையரங்குகளில் வெளியிடப்படவில்லை. எனினும் கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்களில் படம் திரையிடப்பட்டுள்ளது. தமிழக ரசிகர்கள், அந்த படத்தை பார்க்க அம்மாநிலங்களுக்கு படையெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஓசூர் நகரில் விஜய் ரசிகர்கள், 'நாளைய முதல்வனே' என சுவரொட்டி ஒட்டி உள்ளனர். அந்தச் சுவரொட்டியில், 'நேற்று இளைய தளபதி', 'இன்று தலைவா', 'நாளைய முதல்வனே' என்று குறிப்பிட்டுள்ளனர்.

அதையடுத்து உளவுத்துறைப் பொலிஸார், சுவரொட்டி ஒட்டியவர்களின் விவரங்கள் மற்றும் போஸ்டரில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் என்பவற்றைச் சேகரித்து தமிழக அரசுக்கு அனுப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# பொய் வழக்குகளில் சிக்க வைக்க முயற்சி

## அன்புமணி ராமதாஸ் குற்றச்சாட்டு

சென்னை, ஓக.15

பொய் வழக்குகளைத் தாக்கல் செய்து என்னைக் கைது செய்வதற்கு தமிழகப் பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் அன்புமணி ராமதாஸ் தொடர்பு பட்டுள்ளார் என்று வெளியான தகவல்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

''விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடியில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் சிறு மோதல் நடைபெற்றுள்ளது. சுங்கச்சாவடியில் நடந்த மோதல் சம்பவம் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். அதற்காக எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தொடர்பான வழக்கில் என்னையும், தமிழகப் பொலிஸார் சேர்த்திருக்கின்றனர். என்னை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் வழக்கு போடப்பட்டுள்ளது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும். அதில் சம்பந்தப்பட்ட 3 பேரைப் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தேன். இந்த உண்மைகள் அனைத்தும் பொலிஸாருக்கும் நன்றாக தெரியும்.

ஆனால், மோதலை நான் தான் தூண்டினேன் என்று கூறி இந்த வழக்கில் என்னையும் சேர்த்து கைது செய்யப் பொலிஸார் துடிக்கின்றனர்.

பா.ம.கவினர் எவரும் இது போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது என்று வலியுறுத்துவதுடன், இந்தச் சம்பவத்துக்காக எனது வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று தெரிவித்தார். (ற)

# 'ஜெ' சொத்து வழக்கில் நுழைகின்றது தி.மு.க.

## வாதிட அனுமதி கோரி நீதிமன்றத்தில் மனு

சென்னை, ஓக.15

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் தாமும் வாதிடுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது தி.மு.க.

1991 தொடக்கம் 96ஆம் ஆண்டு வரை தமிழக முதல்வராகப் பதவி வகித்தபோது வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவித்தார் என்று ஜெயலலிதா மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தற் போது பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் இதுகுறித்த விசாரணைகள் பல முட்டுக்கட்டைகளைத் தாண்டி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. பொதுச் செயலாளர் க.அன்பழகன் சார்பாக திமுக நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி ஒரு மனுவை பெங்களூர் நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளார்.

அதில் இந்த வழக்கில் தங்களையும் வாதிட அனுமதிக்க வேண்டும் என்றும் அரச வழக்கறிஞருக்கு உதவ தமது தரப்பு வழக்கறிஞர்களையும் அனுமதிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தது.

அந்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி, அது குறித்து பதில் அளிக்குமாறு ஜெயலலிதா மற்றும் அரசு தரப்புக்கு உத்தரவிட்டதுடன், மனு மீதான விசாரணை இன்று நடைபெறும் என்றும் அறிவித்தார். (ற)

# இந்திய கடற்படை நீர்மூழ்கியில் தீ

## மும்பையில் தரித்து நின்றவேளை சம்பவம்

புதுடில்லி, ஓக.15

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தை அடுத்து அந்த நீர் மூழ்கிக் கப்பலில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் மும்பை கடற்படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐ.என்.எஸ். சிந்துரக்ஷக் என்ற நீர் மூழ்கிக் கப்பலிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.



கடற்படைத்தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த நீர்மூழ்கிக் கப்பலில் திடீரெனபெரும்வெடிச்சத்தம் கேட்டதுஎன்றும், அதைத்தொடர்ந்து பெரும் சுவாலையுடன் தீ கொளுந்துவிட்டு எரியத் தொடங்கியது என்றும் கூறப்படுகின்றது.

அந்தக் கப்பலில் பணியாற்றிய 4 கடற்படையினர் மீட்கப்பட்டுள்ளபோதும், நீர்மூழ்கிக் கப்பலுக்குள் பலர் சிக்கிக் கொண்டிருக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது.

உடனடியாக தீயணைப்புப் படைகளைச் சேர்ந்த 16 பேர் தீயைக்கட்டுப்பட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தபோதும், நீண்ட நேரத்தின் பின்னரே தீயை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

அதனால் குறித்த கப்பலின் பெரும்பாலான பகுதிகள் சேதமாகியுள்ளன என்று கூறப்படுகின்றது.

எனினும் இதுகுறித்த உறுதியான தகவல்கள் எதனையும் இந்திய இராணுவத் தரப்பு இதுவரை வெளியிடவில்லை. (ற)

# நட்பு நாடல்ல இந்தியா

## பாகிஸ்தான் நிதி அமைச்சர் ஆவேசம்



இஸ்லாமாபாத், ஓக.15

இந்தியாவை நட்பு நாடு என்று யார் சொன்னது? இந்தியாவுக்கு நட்பு நாடு என்ற அந்தஸ்தை ஒருபோதும் வழங்க முடியாது என்று ஆவேசமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் நிதித்துறை அமைச்சர் இஸாக்தர்.

அந்த நாட்டின் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த நேர்காணலில் அவர் மேலும் கூறியதாவது, ''இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பல விவகாரங்களில் ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. இந்த நிலையில் இரு நாடுகளும் நட்பு நாடுகளாக இருக்க முடியாது.

எல்லைப் பகுதியில் இந்திய இராணுவம் மீது தாக்குதல் நடத்தியது பாகிஸ்தான் இராணுவம் தான் என்று இந்தியா குற்றம் சாட்டுகிறது. அதை ஏற்க முடியாது. இந்தியாதான் போர்நிறுத்த உடன்படிக்கைகளை மீறிச் செயற்படுகிறது. இந்நிலையில் இந்தியாவை மிகவும் நெருங்கிய நட்பு நாடு என அறிவிக்கும் திட்டம் எதுவும் தற்போது பாகிஸ்தானிடம் கிடையாது'' என்று தெரிவித்துள்ளார் இஸாக் தர்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே எல்லைப் பிரச்சினை தற்போது சூடு பிடித்துள்ள நிலையில் இஸாக்தரின் கருத்து அந்தப் பிரச்சினையில் எண்ணெய் ஊற்றுவது போல அமைத்துள்ளது. (ற)

## இஸ்ரேல் மீது கிளர்ச்சியாளர் தாக்குதல்

ஜெருசலேம், ஓக.15

இஸ்ரேலின் எலட் பிராந்தியத்தைக் குறிவைத்து ஏவப்பட்ட ரொக்கெட் ஒன்றை தாம் இடைமறித்து அழித்துள்ளதாக இஸ்ரேல் இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இஸ்ரேல் - எகிப்து எல்லைப் பகுதியான சினைப் பிராந்தியத்தில் நிலவும் பதற்றங்களுக்கு மத்தியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளர்ச்சிக் குழு ஒன்றினால் இந்த ரொக்கெட் இஸ்ரேலின் தென் பிராந்தியத்தைக் குறிவைத்து ஏவப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்ற போதும், குறித்த கிளர்ச்சிக் குழு குறித்து எது விதத் தகவல்களும் வெளியிடப்படவில்லை.

இந்த ரொக்கெட் தாக்குதலால் எந்தவித சேதங்களும் ஏற்படவில்லை என்றும் இஸ்ரேல் இராணுவத் தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது. (ற)

## சீனாவில் நிலநடுக்கம்

### 87 பேர் காயம்

பீஜிங், ஓக.15

சீனா மற்றும் திபெத்தின் சில பகுதிகளில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 87 பேர் காயம் அடைந்துள்ளதுடன், சுமார் 45 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.1 ஆகப் பதிவாகியுள்ளது.

நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன்னர், அந்தப் பகுதியில் சில தடவைகள் சிறு அதிர்வுகள் ஏற்பட்டதையடுத்து பெரும் பாலான மக்கள் கட்டடங்களை விட்டு வெளியேறிவிட்டனர். அதனால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)



எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முர்சியின் ஆதரவாளர்கள் நடத்தி வரும் ஆர்ப்பாட்டங்கள் அண்மை நாள்களில் உக்கிரமடைந்துள்ள நிலையில், அந்நாட்டு இராணுவமும், பொலிஸாரும் இணைந்து அவர்களுக்கெதிரான நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர். தாரிக் சதுக்கத்தில் கூடியிருந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு விரட்டப்பட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் பலர் இந்தத் தாக்குதல்களில் காயமடைந்தனர்.

## செயற்கை மலையை உடனடியாக அகற்றுக

### சீன அரசு அதிரடி உத்தரவு



பீஜிங், ஓக.15

அடுக்குமாடியில் அமைக்கப்பட்டிருந்த செயற்கை மலையை உடனடியாக அகற்றுமாறு சீன அரசு உத்தரவிட்டுள்ளது.

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் 26 அடுக்கு மாடி கட்டடம் உள்ளது.

சீன மருத்துவரும், சட்ட சபை முன்னாள் ஆலோசகருமான ஜாங் பிகுங், அந்தக் கட்டடத்தின் மேல்தளத்தில் ஆயிரம் சதுர அடியில் செயற்கை மலையை உருவாக்கி அதைச் சுற்றிலும் மரங்கள், நீரூற்றுகள் போன்றவற்றை அமைத்திருந்தார்.

அது பார்க்க அழகாக இருந்தாலும் கட்டடத்தின் மீது அமைக்கப்பட்டுள்ள நீரூற்றுகள் போன்றவற்றால், கீழ் தளத்தில் குடியிருப்பவர்களுக்கு நிறைய பிரச்சினைகள் ஏற்பட்டு வந்தன. எனினும் ஜாங் பிகுங் அரசியல் செல்வாக்கு பெற்றவர் என்பதால் அப்போது யாரும் இதை கண்டுகொள்ளவில்லை.

தற்போது பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ள சீன அரசு, அந்தச் செயற்கை மலையை உடனடியாக அகற்ற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. இது போன்ற கட்டடத்தை அமைக்க ஜாங் பிகுங் அனுமதி பெறவில்லை. அதையடுத்தே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)

## நைஜீரியாவில் துப்பாக்கிச் சூடு; 47 பேர் சாவு

நைரோபி, ஓக.15

நைஜீரியாவில் வடகிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் 47 பேர் உயிரிழந்துள்ளனர். 26 பேர் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் மொகிடுகுவிற்கு 35 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள குண்டகா என்னும் நகரில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிதாரிகள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதலை இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான பர்கோ ஹராம் என்னும் அமைப்பைச் சேர்ந்தவர்களே நடத்தியிருக்கலாம் என்று நைஜீரியப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இஸ்லாமியதனிநாடொன்றை நைஜீரியாவில் உருவாக்கும் நோக்கில்பர்கோ ஹராம் அமைப்பினர் நீண்டகாலமாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். (ற)

## மார்பை பெரிதாக்க நிதி உதவுங்கள்

### வீதியில் நின்று பணம் வசூலித்த பெண்

நியூயோர்க், ஓக.15

மார்பகத்தை பெரிதாக்கும் சிகிச்சைக்கு நிதியுதவி அளிக்குமாறு பெண் ஒருவர் வீதியில் செல்பவர்களிடம் பணம் வசூலித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை சேர்ந்த கிறிஸ்டினா ஆன்ட்ரூஸ் என்பவர், தனது மார்பகங்களை பெரிதாக்க நினைத்தார். ஆனால் அதற்கு அவரிடம் நிதி வசதி இல்லை. தலையைப் பிய்த்துக் கொண்டு யோசனை செய்த அவருக்கு புதுவித யோசனை ஒன்று உதித்தது.

அதன்படி பெரிய மார்பகங்கள்தான் வேண்டும் என்று பலகையில் எழுதி அதை கையில் ஏந்தியவாறு வீதியோரம் நின்று நிதியுதவி கோரியுள்ளார்.

அதைப் பார்த்த 'தாராள' சிந்தையாளர்கள் பணத்தை அள்ளிக் கொடுத்துள்ளனர். அதைப்பார்த்து கிறிஸ்டினாவே அதிர்ந்து போயுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

''தற்போதுள்ள மார்பகங்கள் எனக்குப் பிடிக்கவில்லை, பெரிய மார்பகங்கள் தான் பிடிக்கும். எனவே மார்பகத்தைப் பொதுபடுத்தும் சிகிச்சைக்காக பிறரிடம் பணம் கேட்டேன்.

ஆனால் நான் கேட்ட விதத்தைப் பார்த்து பலரும் சிரித்து விட்டுத்தான் செல்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் நான் நினைக்காத அளவுக்கு அதிகளவு பணம் கிடைத்துள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

கிறிஸ்டினாவின் யுக்தியை எதிர்காலத்தில் எதற்கெல்லாம் பயன்படுத்தப் போகிறார்களோ? பொறுத்திருந்து பார்ப்போம்.(ற)

## இஸ்ரேல் குடியிருப்புகள் சட்டவிரோதமானவையே

### அமெ. பாதுகாப்பு அமைச்சர் கெரி



வொஷிங்டன், ஓக.15

இஸ்ரேலின் புதிய குடியேற்றத்திட்டங்கள் தொடர்பான அறிவிப்பு சட்டவிரோதமானது என்று தெரிவித்துள்ள அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ஜோன் கெரி, சமாதான முனைப்புகளைக் குழப்பும் எந்த நடவடிக்கையிலும் இறங்க வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலின் புதிய குடியேற்றத் திட்டங்கள் தொடர்பான அறிவிப்பிற்கு பலஸ்தீனம் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ள நிலையிலேயே ஜோன் கெரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் சமாதானப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் நம்பிக்கையுடன் இருக்கின்றேன். இஸ்ரேலின் குடியேற்றத் திட்டங்கள் சட்டவிரோதமானவை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன் எனினும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு சில நாள்களே உள்ள நிலையில் பாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று பலஸ்தீனியர்களைக் கேட்டுக் கொள்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் ஜோன் கெரி.

இஸ்ரேலின் நடவடிக்கை குறித்தும் கடும் விசனம் வெளியிட்டுள்ள பலஸ்தீனம், பேச்சுக்களை குழப்பும் நடவடிக்கையில் இஸ்ரேல் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளது. (ற)

## பால்மாவில் பக்டீரியா தொற்று: நியூஸிலாந்து விசாரணை

வெலிங்டன், ஓக.15

நியூஸிலாந்திலிருந்து ஏற்றுமதியாகும் பால்மா வகைகளில் பொட்டுலிஸம் என்ற ஒருவகை பக்டீரியா தொற்று கலந்துள்ளது என்று வெளியாகிய தகவல்கள் தொடர்பில் அந்நாட்டு அரசு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நியூஸிலாந்தின் மிகப் பெரிய பால்மாநிறுவனமான பொன்டேராவின் ஏற்றுமதிகளில் இந்த தொற்று கலந்துள்ளது என்ற தகவல் அண்மை நாள்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

உயிரிழப்பை ஏற்படுத்தும் அளவுக்கு கடுமையான உடல் நலக் குறைவை உருவாக்கக்கூடிய பொட்டுலிஸம் பக்டீரியா தொற்று, தமது பால்மா ஏற்றுமதி தொகுதிகள் சிலவற்றில் கலந்திருக்கலாம் என்று இந்த மாதத்தின் ஆரம்பத்தில் ஊகம் வெளியிட்டிருந்தது. குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கானபானங்களிலேயே இந்த தொற்று கலந்திருப்பதாக இலங்கை உட்படச் சில நாடுகளில் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

அதையடுத்து பல்வேறு நாடுகளில் இருந்து குறித்த ஏற்றுமதித் தொகுதிகளை திரும்பப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று பன்டேரா நிறுவனம் அறிவித்தது. ஆனால் இந்தப் பிரச்சினையை குறித்த நிறுவனம் கையாண்ட விதம் தொடர்பில் அந்த நிறுவனம் பலத்த விமர்சனங்களைஎதிர்கொண்டிருந்தது.

பக்டீரியா கலப்படம் எப்படி நடந்தது என்று பொன்டேரா நிறுவனம் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், இது குறித்து தனியான விசாரணைகளை அந்நாட்டு அரசு ஆரம்பித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

நியூஸிலாந்தின் ஏற்றுமதி வர்த்தகம் பால்மா வகைகளிலேயே தங்கியுள்ள நிலையில், இந்தப் பிரச்சினை குறித்து அதிக கவனமெடுத்துள்ள அந்நாட்டு அரசு, துரித கதியிலான விசாரணைகளை நடத்தி வருகின்றது என்றும் கூறப்படுகின்றது.(ற)

## வருடாந்தப் பெருவிழா

வடமராட்சி.ஓக.15
கரவெட்டி பரலோகமாதா தேவாலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 6 ஆம் திகதி செவ் வாய்க் கிழமை திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நவநாள் ஆராதனையைத் தொடர்ந்து நேற் றைய தினம் மாலை 5 மணிக்கு நற்கருணை விழா திருப்பலியும், நற்கருணை ஆராதனை வழிபாடும் ஆசீரும் இடம்பெற்றது.
இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனி நடைபெறும். (வ-8)

## ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி.ஓக.15
தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன் னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் தின மும் முற்பகல் 10 மணிக்கு இடம் பெற்று வரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் 11 ஆம் திருவிழாவான நாளை வெள்ளிக் கிழமை 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்' என்னும் தலைப்பில் வல்வெட்டித் துறை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவ நாதனின் சொற்பொழிவு இடம்பெறும்.
12 ஆம் திருவிழாவான நாளை மறு தினம் சனிக்கிழமை 'முருக வழிபாடு எதற்கு?' என்னும் தலைப்பில் சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (வ-8)

## நல்லூர் ஆலய சூழலில்

யாழ்ப்பாணம், ஓக. 15
நல்லூர் கந்தன் ஆலய நான்காம் திருவிழா வான இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன.
நிகழ்வில் நடமாடும் கோயில் என்ற பொருளில் நீ.பகீரதனின் சிறப்புச் சொற்பொழிவும், வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி அறநெறிப் பாடசாலை, பண்டத்தரிப்பு மார்க்கண்டு அற நெறிப் பாடசாலை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப் பாணம் காமாட்சி அம்பாள் அறநெறிப் பாட சாலைகளின் மாணவர்களது கலை நிகழ்வு களும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசை யரங்கம் நடைபெறவுள்ளது.
இசையரங்கில் பாடல்களை எஸ்.சுபாகரன் வழங்க அணிசேர் கலைஞர்களாக வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்- இரா.சிவராமன், முகர்சிங்- கே.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.
உ.இராதாகிருஷ்ணனின் மாணவிகள் வழங் கும் வயலின் இசை நிகழ்வில் அணிசேர் கலைஞர்களாக வயலின்- இ.பிரசாந்தி, கு.சிவானுயா, அ.ஆகன்யா, ஜெ.அர்ச்சனா, மிருதங்கம்- என். சதீஸ்குமார் ஆகியோர் கலந்துகொள்வர். (வ-86-7)

## சத்தியத்துக்கும் தர்மத்துக்கும் உள்ள தொடர்பு யாது?

சத்தியமும் தர்மமும் பிரிக்கமுடியாதவை. சத்தியத்துக்கு மேலான தர்மமுமில்லை. தர்மத்துக்கு மேலான சத்தியமுமில்லை. மாணவர்கள் ஒரு சிறிதளவாவது அவற்றை அனுசரித்துக்கொள்ள முயற்சி செய்தல் வேண் டும். அவ்வாறு அனுசரித்து, சத்தியத்தினதும் தர்மத்தினதும் நயப்பாட்டை சமூக ரீதியாகப் பரப்பவேண்டும்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## செல்வச் சந்நிதி ஆலய பூங்காவனத் திருவிழா இன்று

வடமராட்சி.ஓக.15
பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் சிறப்புத் திருவிழாவான பூங்காவனத் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து கைலாசவாகனத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கும், இந்திர விமானத் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக் கும் நடைபெறவுள்ளன. (வ-8)

**விற்பனைக்கு**
கைதடி தெற்கு, கமநல சேவைகள் நிலையத்திற்கு அருகில் 3½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 644 1702, 077 897 0812 (29822) (7.6.3)

**கருங்கல் சல்லி விற்பனை**
½" சல்லி 33000/= 3கியூப், ¾" சல்லி 37500/= 3 கியூப், ⅝" சல்லி 39000/= 3 கியூப், 1½" சல்லி 34000/= 3கியூப், டஸ்ற் 26000/= 3கியூப்
குறிந்த விலையில் யாழ் நகரப் பகுதிக்கு விநியோகிக்க முடியும்.
வ.ஏ. நாகா கிறேஷர் ஓமந்தை, வவுனியா.
தொடர்பு: 077 046 1306, 077 863 3614, 077 716 8678 (31359) (7.6.3)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் அரியாலை மணியந் தோட்டப் பகுதியில் கடற்கரை ஓரமாக 50 ஏக்கர் அழிவடைந்த தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 261 4787, 077 528 1334 (31353) (7.6.3)

**வேலைக்கு ஆள்கள் தேவை**
வேம்படி மகளிர் பாடசாலைக்கு அருகில் புதிதாக ஆரம்பிக்கவுள்ள (Pizza, KFC) உணவகத்திற்கு வேலைக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
தொடர்பு: G.G.Guest House
175, 1st Cross Street, Jaffna.
T.P: 021 222 5032, 077 191 5528 (31355) (7.6.3)

**காணி விற்பனைக்கு**
மிருசுவில் A-9 பாதையை முகப்பாகவும், படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் பாம் றோட்டை ஒரு பக்கமாகவும் கொண்ட 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதி களாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 607 9340

**வான் விற்பனைக்கு**
TWON AC, 250 - X X X X தொடர் இலக்கமுடைய Rs - 20,50,000/= பெறு மதியுள்ள வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 340 9222

**விற்பனைக்கு**
ரிப்பர் - NP LI - XXXX
தொடர்பு:
077 588 5827
071 213 6066
(31298) (7.6.3)

## நலனோம்பு அட்டைக்கு பதிவுகள் இன்று முதல் புதுக்குடியிருப்பில்

முல்லைத்தீவு, ஓக.15
முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மாற்று வலுவுள்ளோருக்கு சமூக நலனோம்பு அடையாள அட்டைகள் வழங்குவதற்கான பதிவுகள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் சி.பிரதீபன் அறிவித்துள்ளார்.
வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந. இன்பராஜின் பணிப்புரைக்கமைய மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகனின் வழிகாட்டலில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர்களும் யாழ்.மாவட்ட சமூக சேவைகள் அலுவலர்களும் இணைந்து மாற்று வலுவுள்ளோருக்கான பதிவுகளை மேற்கொள்ளவுள்ளனர்.
குறித்த அலுவலர்களுடன் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலு வலர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், சமூக சேவைகள் தொண்டர் கள் ஆகியோர் இந்தக் கடமையில் ஈடுபடவுள்ளனர்.
பிரதேசத்தில் உள்ள அனைத்து மாற்று வலுவுள்ளோருக்கான பதிவு களும் ,சமூக நலனோம்பு அடையாள அட்டைக்கான புகைப்படங்களும் எடுக்கபடவுள்ளதால் குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகிய வற்றுடன் வருகை தரவும். அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களில் இடம்பெறும் இப் பணிகளுக்கு இயலாமை காரணமாக வருகை தர முடியாதவர்கள் முன் கூட்டியே கிராம அலுவலர்களுக்கு அறிவிக்கும் பட்சத்தில் அத்தகையோரின் வீடுகளுக்குச் சென்று பதிவுகளும் புகைப் படம் எடுத்தலும் மேற்கொள்ளப்படும்.
இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு விஸ்வமடு மேற்கு, உடை யார் கட்டு தெற்கு தேராவில் கிராம அலுவலர் பிரிவுகளிலும், 11 மணிக்கு விஸ்வமடு கிழக்கு, 12 மணிக்கு உடையார்கட்டு வடக்கு, பி.ப. 1.30 மணிக்கு மாணிக்கபுரம் - வள்ளுவர்புரம், பி.ப. 2 மணிக்கு தேவிபுரம், பி.ப. 3 மணிக்கு சுதந்திரபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும்.
நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு மல்லிகைத் தீவு, புதுக் குடியிருப்பு மேற்கு, கோம்பாவில் இரணைப்பாலை 11.30 மணிக்கு ஆனந்தபுரம், பி.ப. ஒரு மணிக்கு புதுக்குடியிருப்பு கிழக்கு, பி.ப. 2 மணிக்கு சிவநகர் பி.ப. 3.00 மணிக்கு மந்துவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு மன்னா கண்டல் கிராம அலுவலர் பிரிவிலும் பதிவுகள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் கீழ் குறிப் பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 15.08.2013 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 0212222771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை நிர்வாகக் கிளை, மாவட்டச் செய லகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 15.08.2013 முதல் 28.08.2013 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரையான காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு28.08.2013 திகதியன்று பி.ப2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத் தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப் பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதி நிதிகளின் முன்னிலையில் 29.08.2013ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப் பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்வி பிணைத் தொகை(ரூ) | மீளளிக்கப் படாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JF/GA/DDMCU/ FMP-2013-02(I) | மேற்பரப்பு வடிகாலை மேம்படுத்தலும் அமைத்தலும் - இராஜகிராமம் | 14.800 | 06 | C5 | 148,000.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP-2013-03(II) | வடிகால் அமைத்தல்- சக்கோட்டை | 04.532 | 06 | C7 | 45,000.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP-2013-04(III) | வடிகால்கள் மற்றும் மதகுகள் அமைத்தல்- சின்னமடு | 05.027 | 06 | C6 | 50,000.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP-2013-08(IV) | தடுப்புச்சுவர் அமைத்தல்- கீரிமலை | 04.352 | 03 | C7 | 44,000.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP-2013-05(V) | வடிகால் அமைத்தல் - வடலியடைப்பு | 02.677 | 03 | C7 | 27,000.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/ FMP-2013-06(VI) | வெள்ளவாய்க்கால்- அரியாலை கிழக்கு | 02.637 | 03 | C7 | 26,000.00 | 1000.00 |

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.
(C/11166) (6.3)

பிரதேச சபை, கரைச்சி, கிளிநொச்சி
ප්‍රාදේශීය සභාව කරච්චි, කිලිනොච්චිය
PRADESHIYA SABHAI, KARACHCHI, KILINOCHCHI

**கலந்துரையாடல்**
கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்குகின்ற தனியார் கல்வி நிலையங்களுக்கு இடையேயான நிர்வாகத் தெரிவும், பதிவு தொடர்பான கலந்துரையாடலும் 2013.08.21 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு தவிசாளர் நா.வை. குகராசா அவர்களின் தலைமையில் கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள், கணினி கல்வி நிலைய நிர்வாகிகள், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
நா.வை.குகராசா
தவிசாளர்,
கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.
(C/11116) (7.6.3)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
**இதோ பாவியுங்கள்**
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**
போலிகள் நடமாடுவதால், பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியில் 'சித்தாரா டிஸ்பென்சரி' 'வைத்திய முத்திரைக் குறியீடு' என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் 'ஒறிஜினல்' என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.
*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

# சைக்கிள்களுக்கு ஒளித்தெறிப்பு ஸ்ரிக்கர்

### இளவாலை பொலிஸார் ஒட்டினர்



வலி.வடக்கு, ஓக.15
இளவாலை போக்குவரத்துப் பொலிஸாரால் விபத்துக்கள் ஏற்படாத வகையில் 'ஒளிர் லைற்' இல்லாத சைக்கிள்களுக்கு இதுவரை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஒளித்தெறிப்பு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார நேற்றுமுன்தினம் இரவு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரவு வேளைகளில் சைக்கிள்களில் பயணிப்போர் வெளிச்சம் இன்றி பயணிப்பதுடன் சைக்கிள்களின் பின்புறத்தில் லைற் இல்லாது பயணிக்கின்றனர்.

இவ்வாறு செல்வதால் வரும் வாகனத்துக்கு உடனடியாக அடையாளம் காணமுடியாது விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் சைக்கிள்களின் பின்புறத்தில் ஒளித் தெறிப்பு ஸ்ரிக்கர்களை பொலிஸார் ஒட்டியதுடன் சைக்கிள்களில் பயணிப்போரின் சைக்கிள் களுக்கான லைற் மற்றும் வெளிச்சத்தின் முக்கியம்தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன- என்றார். (வ-86)

# சாவகச்சேரி பிரேத அறைக்கு குளிரூட்டி வசதி வழங்குங்கள்

### மாகாண சுகாதார திணைக்களத்திடம் கோரிக்கை

தென்மராட்சி, ஓக.15
சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் 5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பிரேத அறைக்கு குளிரூட்டிவசதிகளை வழங்குமாறு பிரதேச மக்கள் மாகாண சுகாதார திணைக்களத்திடம் கோரியுள்ளனர்.

> வைத்தியசாலை வளாகத்தில் சுகாதாரத் திணைக்களத்தால் ஐந்து மில்லியன் ரூபா செலவில் பிரேத அறை அமைக்கப் பட் டுள்ள போதிலும் இதுவரை சடலங்களைப் பாதுகாக்கும் குளிரூட்டிகள் வைக்கப்படவில்லை.

பெரியளவிலான இடப்பரப்பைக் கொண்ட தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் பளை, வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பிரதே சங்களைச் சேர்ந்த மக்களும் சிகிச்சை பெறுகின்றனர்.

வைத்தியசாலை வளாகத்தில் சுகாதாரத் திணைக்களத்தால் 5 மில்லியன் ரூபா செலவில் பிரேத அறை அமைக்கப் பட்டுள்ள போதிலும் இதுவரை சடலங்களைப் பாதுகாக்கும் குளிரூட்டிகள் வைக்கப்படவில்லை.


பிரேத அறையில் வைக்கப்படும் சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் பழுதடையும் நிலையில் கொண்டு வரப்படும் சடலங்கள் போன்றவை குளிரூட்டி வசதிகள் இல்லாததால் மேலும் பழுதடைய வாய்ப்புகள் உள்ளன.

இதனால் பிரேத அறைக்கு சடலங்களைப் பாதுகாக்கும் குளிரூட்டிகள் வழங்குமாறும் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது குளிரூட்டிகள் விலை அதிகம் என்பதால் அடுத்த வருடம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# நடமாடும் சேவையில் 1027 பேர் பயனடைவு

### தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில்




தென்மராட்சி, ஓக. 15
தென்மராட்சி பிரதேச செயலகத்தால் கைதடி,வரணி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய இடங்களில் நடத் தப்பட்ட தேசிய அடையாள அட்டை வழங்கல் தொடர்பான நடமாடும் சேவையில் ஆயிரத்து 27 பேரின் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. கபே நிறுவ னத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் பெறப்பட்ட விண்ணப் பங்கள் ஆள் பதிவுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டன.

தேசிய அடையாள அட்டைக்குப் புதிதாக, பழுத டைந்த, காணாமல் போன, திருத்தங்கள் போன்றவை தொடர்பாக பெருமளவு மக்கள் தமது விண்ணப்பங்களை நடமாடும் சேவை நிலையங்களில் நேரில் கையளித்தனர்.

முத்திரைகள் , புகைப்படம், புகைப்படப் பிரதி, பிறப்பு-இறப்பு , விவாகப் பதிவுச் சான்றிதழ்கள், காலங் கடந்த பிறப்பு-இறப்பு ,விவாகப் பதிவு போன்றவை இல வசமாக வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இறுதி நடமாடும் சேவையில் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பெருமளவு மக்கள் கொடிகாமம் திரு நாவுக் கரசு ஆரம்பப் பாடசாலைக் கட்டடத்துக்கு வருகை தந்திருந்தனர். (வ-9)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் நேற்று புதன்கிழமை பிரதேச சபையில் இரத்ததானம் செய்தனர். பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் இரத்ததான நிகழ்வை முதலில் இரத்ததானம் செய்து ஆரம்பித்து வைத்தார். (வ-7)

### நல்லூர் ஆலயச் சூழலில்

# திருவிழாக் கடைக்களுக்கு இம்முறை நட்டம் ஏற்படாது

### மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.15
நல்லூர்ஆலயத்திருவிழாவைமுன்னிட்டு அங்கு தற்காலிக கடைகளை அமைத்திருக்கும் வியாபாரிகள் இம்முறை தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்று கூற முடியாது என யாழ். மாநகர சபை ஆணையாளர்எஸ்.பிரண வநாதன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ரூபா 10 ஆயிரத்துக்கு மேல் கேள்வி விலைகளில் அதிக விலைகோருவோருக்கு கடைகள் கொடுக்கப்பட்டு வந்தது.

எனினும் அப்போதெல்லாம் தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவே கடைகளைக் குத்தகக்கு எடுத்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை குத்தகைக்கு ரூபா பத்தாயிரத்துக்கே கடைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலதிகமாகப் பணம் அறவிடப்படாத நிலையில் இம்முறை தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூற வாய்ப்பு இல்லை எனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (வ-7)

# புறநெகுமவின் கீழ் வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு, ஓக.15
வலி.தெற்கு உடுவில் பிரதேச சபைக்கு உட்பட்ட சிங்கத்தின் கலட்டி வீதிப் புனரமைப்புக்காக புறநெகும திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றரை கிலோமீற்றர் தூரம் கொண்ட குறித்த வீதி பொதுமக் களினது முக்கிய போக்கு வரத்து வீதியாக காணப்படு கின்றது.



நீண்டகாலமாக குன்றும் குழியும் கற்களும் நிறைந்து போக்குவரத்து செய்வதில் பெரும் சிர மங்களுக்கு உள்ளாகிவரும் மக்களின் நன்மை கருதி தற்போது புதிய வீதி அமைப்பதற்கு பிரதேச சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குறித்த வீதியை திருத்துவதற்கான கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளதாகவும் இன்னும் சில தினங்களில் வீதியைத் திருத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதற்கான மதிப்பீடாக ஒரு கோடியே 88 லட்சத்து 54 ஆயிரத்து 37 ரூபா மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் பிரதேச சபை தவிசாளர் தி.பிஜரகாஸ் தெரிவித்தார். (வ-86)

# சட்டவிரோதமாக கொண்டு சென்ற மரங்களும் டிராக்டரும் பறிமுதல்

வலி.வடக்கு, ஓக.15
ஆள்நடமாட்டம் இல்லாத காணி களில் உள்ள பயன்தரு மரங் களை சட்டவிரோதமாக வெட்டிக்கொண்டு நள்ளிரவில் சென்றவரையும் டிராக்டரையும் இளவாலைப் பொலிஸாரால் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த திங்கட் கிழமை நள்ளி ரவு பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி சந்திக்க பண்டார தலைமையில் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் குழுவினர் நள்ளிரவு வேளையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஒழுங் கையின் ஊடாகச் செல்ல முற்பட்ட டிராக்டரை நிறுத்திய போது மரங்கள் அதில் இருப் பதைக் கண்டுள்ளனர்.

குறித்த சாரதியிடம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு மரம் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தை கேட்ட போது அனுமதிப் பத்திரம் இல் லாது திருட்டுத்தனமாக மரங் கள் வெட்டி எடுத்துச் செல்லப் பட்ட விடயம் தெரியவந்துள்ளது. குறித்த நபரை கைது செய்த பொலிஸார் மல்லாகம் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளனர். (வ-86)



# நாயின் உயிர் பறித்தது எறிவெடி; ஒருவர் கைது

பன்றிக்கு வைத்த எறி வெடியை சாப்பிட எத்தணித்தபோது அது வெடித்து நாய் உயிரிழந்தது. அது தொடர்பாக இளவாலைப் பொலிஸாரால் சந்தேகநபர் ஒரு வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை சீந்திப் பந்தல் பகுதியில் கடந்த 10ஆம்திகதிஇந்தச்சம்பவம்இடம்பெற்றுள்ளது.

இரவு நேரத்தில் குறித்த பகுதி யில் பன்றிகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதுடன் வளவுகளில் உள்ள பயிர்கள் மற்றும்மரங்களையும்சேதப்படுத்துகின்றன.

இந்த நிலையில் பன்றிகளின் நட மாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் எறிவெடியை பெற்று அதன் மேல் புண்ணாக்கு வைத்து சுற்றிக் கட்டி பன்றிகள் வரும் வழியில் உள்ள பற் றையில் வைக்கப்பட்டுள்ளது.

அதன்வாசனையில்குறித்த இடத்துக்குச்சென்ற நாய் அதை சாப்பிட முனைந்த வேளை யில் வெடித்ததில் நாய் வாய் சிதறி இறந்தது.

இது தொடர்பாகப் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்ட இளவாலைப் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் வெடிக்காத நிலையில் உள்ள வெடிகளையும் மீட்டுள்ளனர். (வ-86)

# சேவையை செயலில் காட்டுவோம் திட்டங்கள் வலி. மேற்கில் புதிதாக

யாழ்ப்பாணம், ஓக.15
2013 ஆம் ஆண்டு உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு 'சேவையைச் செயலில் காட்டி சௌபாக்கியங்களைப் பெறுவோம்" எனும் தொனிப் பொருளில் வலி.மேற்கு பிர தேச சபையால் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை திட்டமிடப்பட்ட 10 அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மரநடுகை, ஆயுள்வேதம், உப-அலுவலக மேம்பாடு, உப அலுவலக சிரமதானம், உள்ளூராட்சி வார கௌரவிப்பு, உள்ளூராட்சி வார போட்டிகள், சிறந்த சனசமூக நிலையங்களுக்கு விருது வழங்கல், சிறந்த நிர்வாக முறைமை கொண்ட உப அலுவலக தேர்வுப் போட்டி, உள்ளூராட்சி வார நடமாடும் சேவை, உள்ளூராட்சி வார இரத்ததான முகாம் ஆகிய 10 திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மரநடுகையில் 25 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு 100 பயன்தரும் மரங்கள் வழங்கலும், உப அலுவலக மேம்பாட்டில் உப அலுவலகங்களுக்கு வர்ணம் தீட்டுதல், புதிய விளம்பரப்பலகை இடல் ஆகியனவும், உப அலுவலக சிரமதானத்தில் சிரமதானம், நிறுவனத்தை அழகுபடுத்த பூமர கன்றுகளை நடுகை செய்தலும். உள்ளூராட்சி வார கௌரவிப்பில் வலி.மேற்கில் உள்ள 30 கலைஞர்களைக் கௌரவித்தல், வலி.மேற்கு பிரதேச சபை அலுவலர் 5 பேரைக் கௌரவித்தல் ஆகியனவும் உள்ளூராட்சி வார போட்டிகளில் வலி.மேற்கு பிரதேச மட்டத்தில் சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள், உத்தியோகத்தர்களுக்கான தாச்சிப் போட்டிகள், கயிறு இழுத்தல் போட்டிகள் என்பனவும்.

உள்ளூராட்சி வார நடமாடும் சேவையில் ஆதனங்களில் பெயர்மாற்றம், வெளிப்படுத்தல் உறுதி தொடர்பான ஆலோசனை, நீர்வரி, குடிதண்ணீர் சேவை, வியாபார உரிமம், சைக்கிள் உரிமம், ஆயுள்வேத சிகிச்சை முகாம், திண்மக் கழிவு முகாமைத்துவம், வளர்ப்பு நாய் உரிமம் என்பன வழங்கலும்.

உள்ளூராட்சி வாரத்தில் வட்டு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இரத்த தான முகாமும் நடத்தப்படவுள்ளன. (வ-14)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர மாதாந்தச் சம்பளம்

## கிழக்கு மாகாண முதல்வர் தெரிவிப்பு

எருவில்,ஓக.15
கிழக்கு மாகாணத்தில் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு அடுத்த வருடத்திலிருந்து நிரந்தர மாதாந்த சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்தார்.
ஆரம்ப பிள்ளைப் பருவ கல்வி அபிவிருத்திக்கான கற்பித்தலுடனான செயற்பாடுகள் மற்றும் ஆசிரியைகளுக்கான வழி



காட்டல் கை நூல் வெளியீட்டு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாணத்தில் 1800 பாலர் பாடசாலைகள் இயங்குகின்றன. இளம் சிறார்களை சமூகத்தில் சிறந்த முறையில் உருவாக்கு கின்ற கடமை ஆசிரியர்களுக்கு உள்ளது. இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தம்மை மேம்படுத்தி, அறிவை வளப்படுத்திக் கொள்ளவேண்டும். எதிர்கால சந்ததியைச் சிறந்த வகையில் உருவாக்குபவர்களாக இருக்கின்ற ஆசிரியர்கள் தங்களது கல்வித் தரத்தை வளப்படுத்திக் கொள்ளவேண்டும். கிழக்கு மாகாணத்தை கல்வித் தரத்தில் சிறப்பான நிலை கொண்ட மாகாணமாக மாற்றியமைக்க வேண்டும்.- என்றார். (ச-31)

## வீதிகளைப் புனரமைத்து தாருங்கள்

திருகோணமலை,ஓக.15
திருகோணமலை, குச்சவெளிப் பிரதேச செயலகத் துக்கு உட்பட்ட சுனாமிக் குடியிருப்புக் கிராமத்துக்குச் செல்வதற்கான வீதி சீரான முறையில் இல்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.
அதனால் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், நோயாளர்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் இவ்வீதியில் பயணிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகி உள்ளனர்.
எனவே இந்தக் கிராமத்துக்கான வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-40)


## நவீன உபகரணம் பாவித்து புதையல் தேடியவர் கைது

பொத்துவில்,ஓக.15
பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோமாரி பிரதேசத்தில் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி புதையல் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட ஒருவரை படையினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.
தேடப்படும் இரண்டு சந்தேக நபர்களின் அடையாள அட்டைகள் மற்றும் பொருள்களை படையினர் மீட்டுள்ளனர்.
கோமாரி காட்டுப்பகுதியில் ஒரு வைத்தியர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அடங்கிய குழுவினர் தங்கம், மற்றும் அரிய பொருள்களைக் கண்டறியும் நவீன சாதனம் ஒன்றைப் பயன்படுத்தி புதையலைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டிருந்தவேளை, ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஏனைய இருவரும் தப்பிச் சென்றுள்ளனர் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர் பொத்துவில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
புதையல் தோண்டும் முயற்சிக்குப் பாவிக்கப்பட்ட இந்தச் சாதனம் சுமார் 40 மீற்றர் சுற்றளவில் உள்ள புதையலைக் கண்டறியக் கூடியது. இவ்வாறு நவீன சாதனம் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி இதுவாகும் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர். (ச)

## அம்பாறையில் கவனவீர்ப்பு போராட்டம்

அம்பாறை,ஓக.15
அம்பாறை மாவட்ட பட்டதாரிகள் ஒன்றியம் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை அமைதியான கவனவீர்ப்பு போராட்டமொன்றை நடத்துவதற்கான அழைப்பை விடுத்துள்ளது. இது குறித்து பட்டதாரிகள் ஒன்றியம் தெரிவித்ததாவது:-
மஹிந்த சிந்தனையின் கீழ் பட்டதாரி பயிலுநர்களாக பிரதேச செயலகங்களில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு 14 மாதங்கள் கடந்தும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.
இதேவேளை திருக்கோவில், இறக்காமம், கல்முனை, தமன, உகண பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகங்களில் இணைக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு மாத சம்பளமும் வழங்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில், இவ்வாறான செயற்பாடுகள் பாரபட்சமானவை. எனவே ஏனைய பட்டதாரிகளின் நிரந்தர நியமனத்தை துரிதப்படுத்துமாறு கோரியே கவனவீர்ப்பு போராட்டில் ஈடுபடவுள்ளோம்.- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தத்தமது பிரதேச செயலகங்களுக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்துவதற்கு அம்பாறை மாவட்ட கரையோரப் பட்டதாரிகள் ஒன்றியம் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது. (ச-10)

## ஏறாவூரில் 3 தினங்கள் மாபெரும் கண்காட்சி



களுவாஞ்சிக்குடி,ஓக.15
கிழக்கு மாகாண விவசாய, மீன்பிடி, கால்நடை, சிறுகைத்தொழில், அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மாபெரும் கண்காட்சி இடம்பெற்றது.
இந்தக் கண்காட்சி தொடர்ந்து மூன்று நாள்கள் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.
கிழக்கு மாகாணத்தைப் பிரதிபலித்து மட்டக்களப்பு, ஏறாவூர் றகுமானியா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சி விவசாயம், மீன்பிடி, கால்நடை, சிறுகைத்தொழில், சுற்றுலாத்துறை போன்ற அமைச்சுகளை மையப்படுத்தி நடத்தப்படவுள்ளது என்று அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-32)

## இடர் பாதிப்பு கொடுப்பனவு

அம்பாறை,ஓக.15
அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி பொருள்கள் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
இந்நிகழ்வில் 108 குடும்பங்களுக்கு வீடமைப்பதற்கான சாசோலைகளும், 3900 கூரைத் தகரங்களும், 40 நிறுவனங்களுக்கு இடர் காலத்தின்போது சமைப்பதற்கான சமையல் பாத்திரங்களும் வழங்கப்பட்டன. (ச)

# தமிழருக்கு தீர்வு கிடைக்கும் வரை தொடர்ந்தும் தேர்தல்களில் போட்டி

## வீரமுனை படுகொலை நினைவில் அரியம் எம்.பி.




அம்பாறை, வீரமுனை படுகொலையின் 23 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற நினைவஞ்சலி கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான த.கலையரசன், மு.இராஜேஸ்வரன், கல்முனை மாநகரசபையின் எதிரணித் தலைவர் அமிர்தலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

எருவில்,ஓக.15
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் வரை வடக்கு,கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்தும் தேர்தல்களில் போட்டியிட்டு, தமிழ்த் தேசியத்தை உருவாக்கப் பாடுபடும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.
அம்பாறை மாவட்டத்தின் வீரமுனை படுகொலையின் 23 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டம் நற்பிட்டிமுனையில் உள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
1990 ஆம் ஆண்டுடில் இந்தச் சம்பவம் இடம்பெற்று தற்போது 23 வருடங்களை கடந்து வந்துள்ளது.
வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான எத்தனையோ படுகொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. இறுதியாக முள்ளிவாய்க்கால் படுகொலையில் லட்சக்கணக்கான மக்கள் வகை தொகையின்றி படுகொலை செய்யப்பட்டனர்.
66 வருடங்களாக தமிழர்கள் எதற்காகப் போராடினார்களோ அதனையெல்லாம் மறைத்து அபிவிருத்தியை மாத்திரம் மையப்படுத்தியதாக அரசு செயற்பட்டு வருகிறது.
கூட்டமைப்பானது கடந்த 4 வருடங்களாக பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. இந்த நான்கு வருடங்களுக்குள்ளும் 4,5 தேர்தல்களை சந்தித்து வெற்றியும் கண்டிருக்கின்றோம். இதன் மூலம் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக கூட்டமைப்பே இருக்கின்றது என்பதனை ஜனநாயக ரீதியாக அரசுக்கு மாத்திரமல்ல முழு உலகத்துக்கும் பறைசாற்றி இருக்கின்றனர் எம் மக்கள்.
வடமாகாண சபைத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழர்களின் ஏகோபித்த கட்சி என்பதை மக்கள் உலகறியச் செய்வர்.
வடக்கு,கிழக்கில் அதிகளவான போர்க்குற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றது என்பதனை பல சர்வதேச நிறுவனங்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அதனை உறுதிப்படுத்த வேண்டுமானால் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்மக்கள் எதற்கும் சோரம் போகாது கூட்டமைப்புக்கு வாக்களித்து போர்க்குற்ற விசாரணைகளை வலுயுறுத்த திடசங்கற்பம் பூண வேண்டும்.- என்றார். (ச-31)



மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்ட நிலக்கடலை அறுவடை செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டது. இந்த அறுவடை நிகழ்வில் மட்டக்களப்பு விவசாய திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.சிவஞானம், விவசாய போதனாசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## புகைத்தல் ஏழு வீதத்தால் இலங்கையில் வீழ்ச்சி



கொழும்பு.ஓக.15
இலங்கையர்கள் மத்தியில் புகைத்தல் 7 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மூதாதையர்கள் புகையிலையைப் பயன்படுத்திய போதிலும், தற்போதைய சந்ததியினர், புகையிலையை பயன்படுத்தாமையே அதற்கு முக்கிய காரணம் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புகைத்தலுக்கு எதிரான செயற்றிட்டங்கள் ஊடாக மக்களை தெளிவுபடுத்தியமையும் இதற்கான மற்றொரு காரணமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## வெலிக்கடைச் சிறைக்கைதிகள் நான்கு பேர் திருச்சிக்கு மாற்றம்



ஒருவர் 10 ஆண்டு களையும், இரு பெண்களில் ஒருவர் ஆறு ஆண்டு களையும், மற்றவர் ஐந்து ஆண்டுகளையும் சிறையில் கழித்துள்ளனர்.

கொழும்பு.ஓக.15
தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை பரிமாற்றம் செய்து கொள்ளும் வகையில், 2010 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய, வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இரண்டு பெண்கள் உள்ளிட்ட நான்கு கைதிகள் தமிழ் நாட்டின் திருச்சிச் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு வந்திருந்த தமிழ் நாடு பொலிஸ் குழுவொன்று அவர்களை ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் விமானம் மூலம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை காலை திருச்சிக்கு கூட்டிச் சென்றது.

இவர்கள் திருச்சி மத்திய சிறையிலும் பெண்கள் சிறையிலும் அடைக்கப்படவுள்ளனர்.

அவர்களில் மூவர் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் ஆயுள்தண்டனை பெற்றவர்கள்.

அவர்களில் ஒருவர் 10 ஆண்டுகளையும், இரு பெண்களில் ஒருவர் ஆறு ஆண்டுகளையும், மற்றவர் ஐந்து ஆண்டுகளையும் சிறையில் கழித்துள்ளனர்.

11 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஆண் கைதி வெலிக்கடையில் 10 ஆண்டுகளை கழித்துள்ளார். எஞ்சிய தண்டனைக் காலத்தை இவர்கள் இந்திய சிறையில் அனுபவிப்பர். (ச)

# விவசாயிகள் பிரச்சினையை தீர்க்காவிட்டால் போராட்டம்

### விவசாய சேவைகள் சம்மேளனம் அறிவிப்பு



யானைகள்-மனிதர்கள் மோதலுக்குத் தீர்வு காண்பதற்கு விரைவாக மின்சார வேலிகள் நிர்மாணித்து முடிக்கப்படவேண்டும்.

கொழும்பு, ஓக.15
விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் அரசுக்கு எதிராக மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்று அகில இலங்கை விவசாய சேவைகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சம்மேளனம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

★ஒரு கிலோ நெல்லுக்கான உத்தரவாத விலை 40 ரூபா ஆக்கப்பட்டு அது நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்பட வேண்டும்.

★அரச விதைகள் ஆய்வு கூடத் துக்குத் தேவைப்படும் வசதி களைப் பெற்றுக் கொள்வதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நேரடியாக நிதி ஒதுக்கப்படல் வேண்டும்.

★மரக்கறிகள் மற்றும் பழ வகைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளைப் பாதுகாத்துக் கொள்ள செயற்றிட்டமொன்று உருவாக்கப்பட்டு, அந்த விவசாயிகளின் உற்பத்திகள் வீணடிக்கப்படாது களஞ்சியப்படுத்தி வைக்க பொருளாதார மையத்தில் குளிரூட்டி அறை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

★யானைகள்-மனிதர்கள் மோதலுக்குத் தீர்வு காண்பதற்கு விரைவாக மின்சார வேலிகள் நிர்மாணித்து முடிக்கப்பட வேண்டும்.

★அரசால் உரவகைகளுக்கு வழங்கப்படும் காப்புறுதிகள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புறம்பான காப்புறுதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டு, தர நிர்ணயத்துடனான உர வகைகள் 350 ரூபா என்ற விலையின் கீழ் மீளவும் வழங்கப்படல் வேண்டும்.

அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படும் போது மேற்கூறப்பட்டுள்ள யோசனைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

இந்த யோசனைகள் அலட்சியப்படுத்தப்படுமானால், இலங்கையிலுள்ள விவசாயிகள் அனைவரையும் ஒருங்கிணைத்து அரசுக்கு எதிராக மாபெரும் போராட்டம் நடத்தப்படும்-என்று தெரிவித்துள்ளது. (ச-22)



நல்லிணக்கத்துக்கான மக்களின் முன்னுரிமைகளும் சிவில் சமூகங்களின் வகிபாகமும் பற்றிய தேசிய மாநாடு செவ்வாய்க்கிழமை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றி வைத்தார். (ச-10)

## போலி பணத்துடன் மாட்டினர் இருவர்

கொழும்பு.ஓக.15
போலி பணத் தாள்களுடன் அல்பிட்டிய, மிரிஸ் வத்த பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 90 போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள்களும், 44 போலி ஐநூறு ரூபா நாணயத்தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக்க சிறிவர்தன தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## அமைச்சர் பீரிஸ் இந்தியாவுக்கு பயணம்



கொழும்பு.ஓக.15
வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் எதிர்வரும் 18 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்ளும் இலங்கை வெளி விவகார அமைச்சர் பீரிஸ் அங்கு ஒரு நாள் மாத்திரமே தங்கியிருப்பார் என்று தெரிய வருகிறது.

இந்தப் பயணத்தின் போது அமைச்சர் பீரிஸ், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் உள்ளிட்ட முக்கிய தலைவர்களைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய அரசியல் கள நிலவரம் குறித்து விளங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## 650 குளங்களை புனரமைக்க ரூ. 3000 மில்லி.

கொழும்பு.ஓக.15
போரால் சேதமடைந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள 650 குளங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.



இதற்காக 3 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று கமநல அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் சுனில் வீரசிங்க தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் குளங்களை புனரமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்று அவர் கூறினார். இந்தத் திட்டத்தின் கீழ் கிளி நொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள சேதமடைந்த குளங்கள் புனரமைக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## இரசாயனப் பரிசோதனைகளுக்கு இலங்கையை பயன்படுத்தகூடாது

### சம்பிக்க ரணவக்க வேண்டுகோள்



கொழும்பு.ஓக.15
இரசாயன பொருள் பரிசோதனைகளுக்கு இலங்கையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க நியூசிலாந்திடம் கோரியுள்ளார்.

இலங்கைக்கான நியூசிலாந்துத் தூதர் ஜேன் அன்டர்சனை செவ்வாய்க்கிழமை சந்தித்தபோதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டி.சி.டி இரசாயனப் பதார்த்தம் ஆபத்தானதா என்பதனை பரி சோதனை செய்ய இலங்கை குழந்தைகளையோ அல்லது பால் மா நுகர்வாளர்களையோ பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று அவர் கூறினார்.

இவ்வாறான நடவடிக்கைகளை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றின் அறிக்கையை சில பால் மா உற்பத்தி நிறுவனங்கள் விமர்சனம் செய்கின்றமை வருத்தமளிக்கின்றது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை தனியார் நிறுவனங்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் போவதில்லை.

நாட்டின் கீர்த்தி நாமத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக் கப்படும் என்று தூதர் தெரி வித்தார். (ச)

## பதிவு இலக்கம் இல்லாத குடிதண்ணீரை வாங்காதீர்

### பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் அறிவுறுத்து



கொழும்பு.ஓக.15
சுகாதார அமைச்சின் பதிவு இலக்கம் இல்லாத குடிதண்ணீர் போத்தல்களை வாங்க வேண்டாம் என்று பொது சுகாதார பரிசோதகர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

ரயில், பஸ்களில் மோசடியாக குடிதண்ணீர் போத்தல்கள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் எம். ஜி. யூ. ரோஹன தெரிவித்தார்.

ஏற்கனவே பாவித்த வெற்றுத் தண்ணீர் போத்தலில் குழாய் நீரை நிரப்பி சலோடேப் சுற்றி சீல் செய்த பின்னர் மீண்டும் நல்ல குடிதண்ணீர் போத்தலாக விற்பனை செய்யும் மோசடி வேலைகள் இடம்பெறுகின்றன. அதனால் இவ்வாறான மோசடிகளைத் தவிர்க்க திடீர் சுற்றிவளைப்புகள் நடத் தப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

எனினும் இவ்வாறு குடிதண்ணீர் போத்தல்கள் கைப்பற்றப்பட்டு மாதிரிகள் பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டாலும் அவை உடனடியாக கிடைப்பதில்லை என்று அவர் தெரிவித்தார். (ச)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பால்மாவில் இரசாயனப் பொருள்; எமக்குத் தந்துள்ள படிப்பினை

குறிப்பிட்ட சில பால்மா வகைகள், நாடெங்கும் உள்ள மொத்த, சில்லறை விற்பனை நிலையங்களில் இருந்து நேற்றுடன் அகற்றப்பட்டுள்ளன. வெளிநாடு ஒன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பால்மா வகைகளே அவை.

நியூஸிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பால்மா வகைகளில் டி.சி.டி. என்ற இரசாயனப் பொருள் கலந்திருப்பதாகத் தெரியவந்து, அது உண்மையே என்று தொழில்நுட்பத் துறையால் ஊர்ஜிதம் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே, அவற்றின் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

சீனாவில் சிறுவர்களுக்காக விற்பனை செய்யப்பட்ட பால்மாவில் 'மெலமைன்' கலந்திருப்பதாக சில காலத்துக்கு முன்னர் செய்தி வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியது.

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவிலும் 'மெலமைன்' பொதிந்திருக்கலாம் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. பால்மாவில் கதிர்வீச்சுத் தாக்கம் குறித்தும் ஒரு சமயம் அச்சம் தெரிவிக்கப்பட்டது. இந்த ஊகங்கள் எல்லாம் தற்பொழுது நிசமாகி வருகின்றன.

இரசாயனக் கலவை காணப்படுவதாக உறுதி செய்யப்பட்ட, மூன்று பால்மா நிறுவனங்களின் பால்மா வகைகளின் இறக்குமதிக்கு சுகாதார அமைச்சு தடைவிதித்திருக்கிறது. விற்பனைக்கு விடப்பட்டிருந்த 4500 மெற்றிக் தொன் பால்மா வகைகளை மீளப்பெற பால்மா நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொண்டன.

இலங்கையில் சமீப காலமாக சிறுநீரகம் தொடர்பான நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் டி.சி.டி. அதனை மேலும் ஊக்குவிக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

குறிப்பாக, வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தபோது, விளைச்சல் நிலங்களுக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் கலக்கப்பட்ட உர வகைகள், விளைச்சல் நிலத்தின் கீழான நீரைப் பாதித்தது மட்டுமன்றி, அவற்றை அண்டியுள்ள நீர் நிலங்களையும் பாதித்தமை கண்டறியப்பட்டது.

மக்கள் பருகும் பால்மாவில் கண்ணுக்குப் புலப்படாத நச்சுத் தன்மை வாய்ந்த இரசாயனப் பொருள்களை, மனிதனை இரகசியமாகக் கொல்லும் ஆயுதங்கள் எனலாம்.

எனினும் இப்போது தோன்றியுள்ள, பால்மா வகைகளில் டிசி.டி இரசாயனப் பதார்த்தம் பொதிந்திருக்கும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று இப்போதைக்கு எதிர்பார்க்க முடியாது.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியாது நாட்டு மக்கள் தடுமாறிக் கொண்டிருக்கும்போது, நாளாந்த உணவில் மிகவும் பிரதானமானவையாக ஆகி விட்ட பால்மா வகைகளில் டி.சி.டி. என்ற இரசாயனப் பதார்த்தம் கலந்துள்ளமை பெரும் துரதிஷ்டமும் அதேவேளை அதிர்ச்சியும் தரு வதாகும்.

சிறுவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், நோயாளிகள், வயோதிபர்கள் ஆகியோரின் பிரதான உணவு இக்காலத்தில் பால்மா என்று கணித்தால் அது தப்பன்று. காலை ஆகாரம் முதல் இரவு உணவு வரை, அது இரண்டு தடவைகளாவது பாவிக்கப்படுவது சாதாரணம் என்றாகிவிட்டது.

நாம் மீண்டும் பாரம்பரிய முறைக்குச் செல்லவேண்டிய அவசியம் தேவை உருவாக்கப்பட்டுள்ளது, வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் பின்நோக்கிச் சென்று தூய பசும்பாலுக்குச் செல்லும்வேளை, காலம் வந்துவிட்டது. அதற்கு கணிசமான அளவு காலம் பிடிக்கும் என்றாலும், இதனைவிட வேறு சிறந்த மார்க்கம் கிடையாது.

மேற்கு நாடுகளில் பால்மா இறக்குமதி தடை செய்யப்பட்டு தூய பசும்பால் பிளாஸ்டிக் கலன்களில் குறைந்த விலையில் விற்கப்படுகிறது. 'ஜூஸ்' போத்தல் வாங்கும் பணத்துக்கு இதனை வாங்கிவிடலாம். இலங்கையில், மிகக் குறிப்பாக பசும் புல்தரைகள் நிறைந்து காணப்படும் மலைநாடுகளில் கறவை மாடுகளை வளர்ப்பதற்கான மிகச் சாதகமான நிலை உண்டென்பதால், காலநிலை இருப்பதால், பசும்பால் உற்பத்தியில் கூடுதல் கவனம் செலுத் துவதே உகந்தது.

நுகர்வோரைப் பாதுகாக்கும் பொறுப்பு நுகர்வோர் அதிகார சபைக்கு உண்டு. இவற்றைக் கவனத்தில் எடுத்து அரசு செயற்பட வேண்டும்.

அது ஒருபுறமிருக்க, எமது முந்தைய பரம்பரையினர் வீட்டுக்கு ஆகக் குறைந்தது ஒரு பசுவையாவது வளர்த்து தமது சொந்தத் தேவையைப் பூர்த்தி செய்தனர். அந்த நிலையை மறந்து போய், அவசர வேக வாழ்க்கை நிலைக்கு நம்மை நாமே மாற்றிக் கொண்டதால், இத்தகைய உடல் நலக் கேடுகளை விலை கொடுத்து வாங்கும் பரிதாப நிலைக்கு மாற்றப்பட்டுள்ளோம்; மாறியுள்ளோம்.

பால்மாவில் இரசாயனப் பொருள் என்ற உயிர் ஆபத்தில் இருந்து மீள்வதற்கு, தன்கையே தனக்குதவி என்ற முந்திய வீட்டுப் பொருளாதார விருத்திமுறை கைகொடுக்கும் என்பதனை, இந்த ஆபத்தான வேளையிலாவது உணர்ந்து கொள்ளலாகாதா?

# சீனாவின் உதவியுடன் இந்திய வர்த்தகத்தை விரிவாக்குதல்

## இலங்கையின் கனவுத் திட்டம்

கொழும்பின் புதிய துறைமுகத்தை விரிவுபடுத்துதல், மிகப் பெரிய திட்டம் என அதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட பிரியத் பண்டு விக்ரம கூறுகிறார். இத்திட்டம் மிகவும் முக்கியமானதொன்று எனவும் விக்கிரம தெரிவித்துள்ளார். புதிய துறைமுக அபிவிருத்திக்காக நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பிரகாரம் கொழும்பு துறைமுகத்திற்கு புதிதாக மூன்று முனையங்கள் கட்டப்படவுள்ளதுடன், அவை ஒவ்வொன்றிலும் கப்பல் தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளதாகவும் விக்கிரம தெரிவித்துள்ளார்.



இப்புதிய துறைமுக விரிவாக்கத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தை தேவைக்கேற்றவாறு தயார் செய்வதற்காக 400 மில்லியன் டொலர்கள் முதலிடப்பட்டுள்ளன. இதேபோன்று கப்பல் தரிப்பிடங்களைக் கட்டுவதற்கு 500 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கப்பல் தரிப்பிடங்களைக் கட்டுவதற்காக ஒதுக்கப்படும் நிதியில் 85 சதவீதமானவை 'சைனா மேர்ச்சன்ட் ஹோல்டிங்' என்ற நிறுவனத்தாலும் மீதி 15 சதவீத நிதி இலங்கை துறைமுக அதிகார சபையாலும் வழங்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டளவில் இத்துறைமுக செயற்பாடுகள் மூலம் ஒரு பில்லியன் வரை வருமானத்தைப் பெறுவதே எமது நோக்காகும் என இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் விக்கிரம குறிப்பிட்டுள்ளார். இத் திட்டத்தின் மூலம் கொழும்புத் துறை முகத்தில் 10,000 வரையான கொள்கலன்களைக் காவிவரும் மிகப் பெரிய கப்பல்களை நிறுத்துவதே இலங்கையின் இலக்காக உள்ளது.

தற்போது இவ்வாறான மிகப் பெரிய 183 கப்பல்கள் கிழக்கு ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் பயணிப்பதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் முகாமையாளர் உப்புல் ஜெயதிச குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான மிகப் பெரிய கப்பல்களை தற்போது இந்திய மாக்கடலில் உள்ள மூன்று துறைமுகங்களில் மட்டுமே நிறுத்தக் கூடியதாக உள்ளது. அதாவது ஓமானின் சலாலா துறைமுகம், சிங்கப்பூர் மற்றும் துபாயிலுள்ள துறைமுகங்களே அவையாகும்.

இந்தியாவுடன் மிகப் பெரிய வர்த்தக வழங்குனராக இலங்கை செயற்படுவதற்கு இப்புதிய கொழும்புத் துறைமுகம் பயன்படுத்தப்படும் என இலங்கை துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் கிழக்குக் கரையோரமே இலங்கையின் மீன்பிடி வளப் பிரதேசமாகக் காணப்படுகிறது என ஜெய திச குறிப்பிட்டுள்ளார். இதேபோன்று இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் தரித்து நிற்கும் மிகப் பெரிய வர்த்தகக் கப்பல்கள் துபாய் அல்லது ஓமான் துறைமுகங்களின் ஊடாகவே பயணிப்பதாகவும், கொழும்புத் துறைமுகம் விரிவாக்கப்படும்போது இந்தியக் கப்பல்கள் இத்துறைமுகத் தைப் பயன்படுத்த முடியும் எனவும் விக்கிரம சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவின் 20 சதவீதமான கப்பல்கள் கொழும்புத் துறைமுகத் தைப் பயன்படுத்த வேண்டுமென் பதே எமது நோக்காகும். தற்போது இந்தியாவின் 16 சதவீதமான கப்பல்கள் மாத்திரமே கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்துகின்றன எனவும் விக்கிரம தெரிவித்துள்ளார்.

இலங்கை, இத்துறைமுக அபிவிருத்திக்கான பெருமளவான நிதியை சீனாவிடமிருந்து பெற்றுக் கொள் கின்றது என்பது மனதுக்குச் சிறிது வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் சீனா, இந்து மாகடலில் தனது அதிகாரத்தைச் செலுத்துவதற் கான ஒரு வாய்ப்பு சீனாவுக்கு வழங் கப்படுகிறது. 2009ல் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இலங் கையில் பெருமளவான முதலீடுகளை மேற்கொள்ளும் நாடுகளில் சீனா முதலிடம் வகிக்கிறது. சீனா, இலங்கை யில் பெருந்தெருக்கள், புதிய விமான நிலையம், புதிய துறைமுகம், விடுதிகள் மற்றும் துறைமுக விரிவாக்கம் போன்ற வற்றுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

சீனாவுடன், இலங்கையின் ராஜபக்ச அரசாங்கம் கொண்டுள்ள இத்தகைய உறவு, இந்தியாவுடனான மூலோபாயம் சார் உறவைக் குழிதோண்டிப் புதைப்பதாகவுள்ளதாக விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இலங்கை சீனாவிடமிருந்து பெருந்தொகைக் கடன்களைப் பெற்று வருகிறது. இதனால் தனியார் முதலீடு களுக்கான வாய்ப்புக் குறைவாக உள்ள தாக உலக வங்கி மற்றும் அனைத்துலக நாணய நிதியத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீனாவிடமிருந்து பெறும் கடனுக்கான வட்டியானது, ஐரோப்பிய முதலாளித்துவ சந்தைகளில் இலங்கை பெறும் கடனுக்கான வட்டியை விடக் குறைவாகும் என பொருளியல் நிறுவகமான பருத்தித்துறை அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவரான முத்துக்கிருஸ்ணா சர்வானந்தன் தெரிவித்துள்ளார்.

சீனா, நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி மற்றும் கொழும்பு கட்டுநாயக்கா அதிவேகப் பாதை போன்ற திட்டங்களுக்கும் முதலீடு செய்துள்ளது என முத்துக்கிருஸ்ணா சர்வானந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தென்பகுதியில் துறைமுகம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு சீனா நிதியுதவி வழங்கியுள்ளாதானது, தனது இராணுவ நலன்களை அடைந்து கொள்வதற்காக அத்துறைமுகத்தைப் பயன்படுத்தும் நோக்கிலானதே எனப் பலர் குற்றம் சாட்டியுள்ளனர். இந்து மாகடலில் சீனா தனது கடற்படையின் செல்வாக்கை அதிகரிப்பதற்கு, இலங்கையின் தெற்கில் அமைத்துள்ள துறைமுகத்தைப் பயன்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்து மாகடலில் சீனாவின் இராணு வம் நிலைகொள்வது தொடர்பில் இந்தியா அதிகம் கவலை கொள்ளவில்லை என முன்னாள் இந்தியப் புலனாய்வு அதிகாரியும் பாதுகாப்பு வல்லுனருமான றமணி ஹரிகரன் தெரிவித்துள்ளார். ஆனால் இது தொடர்பில் இந்தியாவால் அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனா, இலங்கையுடன் மிகப் பலமான கடல் சார் வர்த்தகத்தைக் கட்டியெழுப்ப விரும்புகிறது. இதன்மூலம் சீனா, எதிர்காலத்தில் தனது கடல்சார் நடவடிக்கைகளை முன்னேற்றிக் கொள்ள முடியும். சீனக் கப்பல்களின் பாதுகாப்பு, கப்பல்களைத் திருத்துதல், நங்கூர மிடுதல் போன்ற பல்வேறு பாதுகாப்பு சார் நடவடிக்கைகளை சீனா விரிவுபடுத்திக் கொள்ள முடியும் எனவும் ஹரிகரன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் துறைமுக கட்டுமானத்திற்காக சீனா, முதலீடு செய்வதன் மூலம் இந்து மாகடல் பிராந்தியத்தில்தான் மிக இலகுவாக நிலை கொள்வதற்கான வாய்ப்பை பெற்றுக்கொண்டுள்ளது. இந்து மாகடல் தொடர்பான ஆய்வுகள், அணுகுமுறைகள் போன்ற பல்வேறு எதிர்கால கடல் சார் நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களை சீனா பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும் இது வழங்குகிறது என ஹரிகரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களை விக்கிரம மறுத்துள்ளார். சீனா, அம்பாந்தோட்டையில் ஒருபோதும் கடற்படைத் தளம் ஒன்றை அமைக்காது என்பதற்குத் தான் உத்தரவாதம் அளிப்பதாகவும் விக்கிரம உறுதியளித்துள்ளார். சீனா, வர்த்தகம் சார் நலனை மட்டும் கருத்திற் கொண்டே அம்பாந்தோட்டையில் துறை முகத்தை அமைப்பதாகவும், இதில் இராணுவ நோக்கம் எதுவும் இல்லை எனவும் விக்கிரம உறுதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான துறைமுகங்களை எவரும் தமது மூலோபாய முக்கியத்துவம் மிக்க இராணுவ சேவைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெறுவர் என நான் நினைக்கவில்லை எனவும் விக்கிரம தெரிவித்துள்ளார். இந்தியக் கப்பல்கள், கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்திப் பயணிக்க வேண்டுமாயின் விக்கிரமவும் இலங்கை அரசும் தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(நன்றி : புதினப்பலகை)

# அன்னை வழி ஆண்டவரிடம் செல்வோம்

க.அருள்நேசன்
குருநகர்





மக்களின் மனங்களை பக்குவப்படுத்த திறமையுள்ள ஒரு போதகரை ஒரு கிராமத்துக்கு அனுப்புகிறார் ஆயர். போதகர் அங்கு சென்றுவிட்டு என்னுடைய பேச்சுத்திறன் பயனற்றது. ஏனெனில் அவர்கள் செவிடர்கள் என முறையிடுகின்றார். பின்பு ஆயர் கற்றறிந்த மேதை ஒருவரை அனுப்புகின்றார். அவர் சென்றுவிட்டு என்னுடைய எல்லாப் படிப்பும். பயனற்றது என முறையிடுகின்றார். கடைசியாக ஆயர் ஓர் அமைதியான ஆன்மிக சாதுவை அனுப்புகிறார். ஒரு மாதத்துக்கு பிறகு அனைவருமே பக்குவம் பெற்றனர். அவர்கள் வாழ்க்கை முறையே மாறி விட்டது. இது எப்படி சாத்தியமானது என மற்றவர் வினவ அவர்கள் செவிடர்களாக இருந்ததால் அவர்களுக்கு நான் எதையும் கற்றுக் கொடுக்கவில்லை. என்னால் இயன்ற வரை வாழ்ந்து காட்டினேன் என்று பதில் தந்தார் சாது. இதேபோன்று தான் அன்னை மரியாளின் வாழ்க்கை நமக்கு ஒரு முன்மாதிரி. மரித்த பின் அனைவருக்கும் விண்ணேற்பு உண்டு என்பதற்கு அன்னை மரியாள் ஒரு முன் அடையாளம்.

தொடக்கம் முதல் தூய கன்னி மரியாள் விண்ணை நோக்கியே வாழ்ந்தார். அவர் ஜென்ம பாவமின்றி பிறந்தவர். ஏனெனில் உலகை மீட்க வேண்டியவர் கன்னியின் திருவயிற்றில் தான் பிறக்க வேண்டியிருந்தது. (எசா 7:14) " அருள் மிகப் பெற்றவரே வாழ்க" என்று அதிதூதர் அவரை வாழ்த்துகின்றார். " நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:30.38) என்று மாதா சொன்னபோது அது மீட்பின் முக்கிய நிகழ்ச்சியாக மாற்றம் பெற்றது. தூய ஆவியால் மீட்பரின் தாயான கன்னி மரியாள் அன்பின் தூதர் ஆகின்றார். அவர் கருவுற்ற நிலையிலும் தமது உறவினரான எலிசபெத்துக்கு பணிவிடை செய்ய யூதேயா மலைநாட்டிலுள்ள அயின்கரிம் என்ற ஊருக்கு விரைந்து சென்றார். கன்னி மரியாளின் சந்திப்பு எலிசபெத்துக்கும் அவரின் வயிற்றில் வளரும் குழந்தைக்கும் பேருவகை அளித்தது. அவர் "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர். உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே. ஆண்டவர் உமக்கு சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர்." (லூக் 1:42-45) என்றார். இறை மகன் இயேசுவின் 30 ஆண்டு மறைவான வாழ்க்கையில் அவரோடு இருந்தவர் அன்னை மரியாள். மாட்டுத் தொழுவத்தில், வறுமையில் அவர் தம் மகனை பெற்றெடுத்தார். எளியவரான ஆட்டு இடையருக்கு தம் திருமகனை வெளிப்படுத்தினார். உரிய காலத்தில் குழந்தையை காணிக்கையாக ஒப்புக் கொடுத்த போது "உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப்பாயும்" என்று (லூக் 2:35) இறைவார்த்தையையும் பின்னர் பன்னிரண்டு வயதில் காணாமல் போனபோது மூன்றாம்நாள் எருசலேம் திருக்கோயிலில் கண்ட போது இயேசு தம் தந்தையின் அலுவல்களைப் பற்றி கூறிய வார்த்தைகளையும் தம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்துக் கொண்டிருந்தார். (லூக் 2:49)

இறைமகன் இயேசு தமது வெளிப்படையான வாழ்க்கையை ஆரம்பித்த போது அன்னை மரியாள் கானாவூர் திருமணத்தில் இயேசுவின் புதுமைகளை துவக்கி வைக்கின்றார். "திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது" ஒரு சாதாரண குடும்பத்துக்கு ஏற்படப்போகும் அவமானத்தை தவிர்ப்பதற்காக மாதா தம் மகனிடம் பரிந்து பேசுகின்றார். "அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்" திருவுளத்தை நிறைவேற்றினால் போதும். எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை இந்த வார்த்தைகளில் பிரதிபலிக்கின்றது. "அவருடைய சீடரும் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டனர்". (யோவா 2:12) மகனால் தாய்க்கு பெருமை. தாயால் மகனுக்குப் பெருமை.

இறைமகன் இயேசுவின் மறைதூணிப் பணி ஆரம்பமானபோது அவரோடு இருந்த மாதா. மனிதர் அனைவரின் நிலை வாழ்வுக்காய் இயேசு தம்மை சிலுவையில் கையளித்தபோது அவரோடு இருக்கின்றார். கானாவூர் திருமணத்தில் தமது நேரம் வராத நிலையிலும் புது திராட்சை இரசத்தின் நிறைவைத் தந்த இறைமகன் இயேசு கல்வாரியில் அந்த ஒப்பற்ற நேரத்தில் புதிய உடன்படிக்கையின் திரு இரத்தத்தை நமக்கு அருளினார். மீட்பின் பலி நிறைவேறும் வேளையில் அவர் தம் உயிரை கையளிப்பதற்கு முன் மானிட குலத்துக்கு ஓர் ஒப்பற்ற பரிசை அளிக்கின்றார். ஆம் அவர் தம் தாயை எமக்கு தாயாகத் தருகின்றார். தம் அருகில் நின்ற தம் அன்புச் சீடரைக் கண்டபோது அவர் தம் தாயிடம் "அம்மா இவரே உம் மகன்" என்றார். பின்பு யோவானிடம் "இவரே உம் தாய்" என்றார். (யோவா 19:26-27) இவ்வாறு திருத்தூதர் யோவான் வழியாக நாம் அனைவரும் தூய கன்னி மரியாளின் பிள்ளைகளானோம்.

இறைமகன் இயேசு இறந்து அடக்கம் செய்யப்பட்டபின் உயிர்த்தெழுந்த பிறகு தூய ஆவியின் வருகைக்காக அவரது சீடர்கள் காத்திருந்தபோது அவர்களுக்குத் துணையாக அன்னை மரியாளும் செபித்துக் கொண்டிருந்தார். குழந்தை இயேசுவை வளர்த்த அன்னை, திருச்சபையாம் குழந்தையையும் வளர்க்கின்றார்.

ஜென்ம பாவமின்றி பிறந்த அன்னை மரியாள் தமது மண்ணக வாழ்க்கை நிறைவுபெற்ற போது உடலோடு விண்ணேற்படைந்தார். விண்ணக, மண்ணக அரசியாக முடிசூட்டப் பெற்றார். மானிட மீட்பில் இறைவனோடு சேர்ந்து உழைத்த மரியன்னை நமது அரசியாக விண்ணில் வீற்றிருப்பது நமக்கு ஆறுதலாக அமைந்துள்ளது. நமது வழிகாட்டியாக அவர் நமக்குத் துணைபுரிகின்றார்.

விண்ணகத்தில் நமக்கு தந்தையும். தாயும் உண்டு. விண்ணகம் சேர நமக்கு வழிகாட்டிதான் மரியன்னையின் விண்ணேற்பம். ஆகவே "அன்னை வழி ஆண்டவரிடம் செல்வோம்" என்ற வாக்கை உள்ளத்தில் தாங்கி அன்னை மரியாளை நமது முன்மாதிரியாகக் கொண்டு வாழும் போது நமது வாழ்வும் மண்ணில் தூங்கி விண் ணில் கண்விழிக்கும் தூக்கமாக அமையும்.

# ஏன் இந்த அவசரம் ?



வெண்ணிலா

வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டால்போதும். மனிதர்களுக்கு ஒரே ஓட்டம்தான். பஸ்ஸைப் பிடிக்க வேண்டும். ரயிலைப் பிடிக்க வேண்டும். வேலைக்குச் செல்ல வேண்டும். அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும். பல வேலைகள், பல பிரச்சனைகள் என நாம் ஓடிக் கொண்டே இருக்கிறோம். எல்லோரும் எங்கே ஓடுகிறோம்? பணம் சம்பாதிக்கவா? பணம் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது தான். ஆனால், பணம் மட்டுமே வாழ்க்கையாகி விடுமா? இலட்சியம் என்பது கடைசி நிலைதானே. அதனை அடைய நாம் செல்லும் பயணம் சுகமானதாகவும் சரியானதாகவும் இருக்க வேண்டாமா?

வாழ்வின் முடிவை நோக்கி இப்போதே ஓடிவிட்டால், வாழ்க்கையை நாம் எப்போது அனுபவிப்பது?

இந்த இடத்தில் ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒருவர் தன் வீட்டுக்கு வந்தார். அப்போதுதான் அவரது மகன் பாடசாலை விட்டு வந்திருந்தான். தந்தை மகனைப் பார்த்து, என்ன பாடசாலை யால் வந்துவிட்டாயா? இன்று என்ன பாடம் படித்தாய். மற்றவர்களிடம் நீ நல்ல பிள்ளையாக நடந்துகொள்ள வேண்டும் என்றார். சரி அப்பா! என்றான் மகன். சரி, எனது மேசையின் மேல் உள்ள டயரியை எடுத்து வா. போன் பேச வேண்டும் என்றார் தந்தை. மகன் தயங்கிய படியே அப்பா, அந்த டயரியில் என்ன இருக்கிறது? என்றான்.

அந்த டயரியில் முக்கியமானவர்களின் முகவரி, போன் நம்பர் என்பன உள்ளன என்றார் தந்தை. அப்பா அந்த டயரியில் எனது பெயர் உள்ளதா எனச் சட்டென கேட்டான் மகன். சாட்டையால் அடித்தது போல இருந்தது தந்தைக்கு. அவரால் எதுவும் பேச இயலவில்லை. வாழ்க்கை என்னும் பாதையில் வேகமாக ஓடும் நாம், உறவுகளையும், பந்தங்களையும் சற்று ஒதுக்கி வைத்துள்ளோம் என்பது சரிதான். சிலர் உறவுகளை புறக்கணித்தும் வருகின்றோம்.

நாம் எதற்காக வாழ்கிறோம்? வேலைக்காகவா? அல்லது வேலை பார்ப்பதற்காக வாழ்கிறோமா? இல்லை குடும்பத்துக்காக உழைப்பதற்காகவா இந்த ஓட்டம். வேகம், போட்டி, நேரமின்மை, நெருக்கடி இதற்கு எல்லாம் எது மூலகாரணம்? ஆசை என்பார்கள் சிலர். சாதிக்கப் பிறந்தவர்கள் எனத் தம்மை அடையாளம் காட்ட வேண்டும் என்ற காரணத்தைச் சொல்லலாம். ஆனால் மனிதர்கள் ஆசையின் பின்னால் ஓடுகிறார்கள். இந்தச் சமுதாயம், ஆசைகளின் பின்னால் மனிதர்களை ஓட வைக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு தேவை இருக்கிறது. தொழிலாளியாக வேலை செய்பவர், தான் ஒரு முதலாளியாக வர வேண்டும் என எண்ணுகிறார். முதலாளியாக உள்ளவர் தாம் ஒரு பெரிய தொழிலதிபராக வர வேண்டும் என எண்ணுகிறார். இப்படித்தான் ஒவ்வொரு மனிதர்களும் ஆசை என்னும் கடலில் நீந்தி வெற்றி பெற வேண்டும் என ஓடுகிறார்களா?

இன்று நமது தேவைகள் அதிகரித்து விட்டன என்பது பேருண்மை. ஆனால், ஒன்றை நாம் மறந்து விட்டோம். பணம் என்பது நமது தேவையைப் பூர்த்தி செய்யாது. மாறாக, அது நமது தேவையை விரிவடையச் செய்யும். எது நமது தேவை? அதற்கு எதுவும் எல்லை உண்டா அல்லது எல்லையை வகுத்துக் கொள்ளாமல் நாம் ஓடிக் கொண்டிருக்கிறோமா? வாழ்க்கையின் லட்சியமென்ன? சந்தோஷமா? மனநிறைவா? மனித உறவிலா? சிறு சிறு சாதனைகளிலா? பிறர்க்கு உதவுவதிலா? பணூம் சம்பாதிப்பதிலா? நமது வாழ்வின் அர்த்தம் என்ன? இதனை நமது எண்ணம் என்னும் உரைகல்லில் உரசிப் பார்த்துச் செயல்பட வேண்டும். ஆனால் ஒன்று. ஓட்டப் போட்டியில் ஓடாவிட்டால் நீங்கள் வெற்றி பெற இயலாது. வாழ்க்கையில் ஓடிக் கொண்டே இருந்தால் வாழ்வின் பயனை அனுபவிக்கவும் இயலாது.

# மாற்று வலுவுடையோரின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வாருங்கள்

க.பொ.த. உயர்தர வகுப்பு 2014 கலைப் பிரிவில் கல்வி கற்கின்றேன். தனியார் செயற்றிட்டம் செய்கின்றேன். அதில் ஒவ்வொருவரும் வெவ்வேறு தலைப்புக்களில் செயன்முறையை மேற்கொள்கின்றனர். அந்த வகையில் நான் எடுத்துக் கொண்ட தலைப்பு மாற்றாற்றலுடைய மாணவர்களின் கல்வி மேம்பாடு என்பதாகும்.

கடவுள் ஒவ்வொரு மனிதனையும் படைக்கும் போது ஏதாவது ஒரு குறைபாட்டோடுதான் படைக்கின்றான். அப்போதுதான் கடவுள் என்ற ஒருவன் இருக்கின்றான் என்ற எண்ணமாவது வரும் என்பதற்காக. ஆனால் நாம் எப்போதாவது ஒரு தடவைதான் கடவுளை நினைக்கின்றோம். மறுகணமே மறந்து விடுகின்றோம். ஆனால் பிறவியிலே தமது கை, கால்களை இழந்தும், போர் காரணமாக தமது, கை, கால்களை இழந்தும் கூட தம்மாலும் வாழ முடியும் என்பதை நிரூபிக்கப் பிறந்தவர்கள் பலர். இவை அனைத்தும் உண்மைக் கதைகள். பிறப்பிலேயே தனக்கு இரு கால்களும் இருந்தும் நடந்தும் திரிந்து ஓடி விளையாட முடியாத ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்ட போதிலும் தன்னாலும் ஏனையோரைப் போன்று கல்வி கற்றிட முடியும் என்பதை நிரூபிப்பது போன்று அவள் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்கின்றாள். அவள் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளை. அப்பா முச்சக்கர வண்டி ஓட்டுநர். இரு ஆண் சகோதரர்கள் கல்வி கற்கின்றனர். அவளது கல்வியில் அவளை விட அவளது குடும்பத்தவர்கள் அதிகமாகவே அக்கறை காட்டுகின்றனர். அவளை பாடசாலைக்கு தூக்கிக் கொண்டே வந்து தாய் விடுவார். அவளால் ஏனைய பிள்ளைகளைப் போன்று ஓடி விளையாட முடியாது போனாலும், அவளது தோழிகள் அவள் மேல் அதிகமாகவே அன்பும், அக்கறையும் காட்டுகின்றனர். அவளது எதிர்கால இலட்சியம் வைத்தியர் ஆவதுதான். ஆனால் அவளுடைய தந்தையின் உழைப்பு அவர்களது கல்விக்குப் போதுமானதாக இருக்காது. எனினும் ஜெய்ப்பூர் நிறுவனத்தினர் அவளது கல்வித் தேவைகளுக்காக மாதாந்தம் ஆயிரம் ரூபாவை வழங்குகின்றனர். இருப்பினும் இன்றைய சூழ்நிலையில் அந்தத் தொகை போதுமானதாக இல்லை.

அதே போன்ற நிலை தான் சிறுவன் நிலக்ஷனுக்கும் இவனது தந்தையும் ஒரு முச்சக்கர வண்டி ஓட்டுநரே. இவனது ஏழு வயதில் தான் இவனது கால்கள் வழமைக்கு மாறாக வளைந்திருப்பது தெரிய வந்தது. அவனது ஒரு கால் நீளமாகவும், மற்றைய கால் கட்டையாகவும் அமைந்துள்ளது. கால்களை நேர் சீராக்க ஒரு காலுக்கு 30,000 ரூபா வீதம் இரு கால்களையும் நேர் சீராக்க 60,000 ரூபா தேவை என்கின்றனர். இப்படிப்பட்ட பல மாணவர்கள் இன்றும் தன்னம்பிக்கையோடு வாழ்கின்றார்கள். இவனது இரு சகோதரர்களும் கல்வி கற்கின்றார்கள். திலக்ஷன் க.பொ.த. வகுப்பில் சாதாரண கற்கின்றான்.

நானும் உதயன் பத்திரிகையின் தீவிர ரசிகை. தினம் தினம் உதயனில் வெளியாகும் ஒவ்வொரு விடயங்களையும் தவறாமல் வாசிப்பேன். அதில் வெளியாகும் செய்திகளில் என் வாழ்க்கைக்குத் தேவையான ஒவ்வொரு விடயங்களை ஏற்றுக் கொண்டு செயற்படுகின்றேன். மாற்றாற்றல் உடைய பல மாணவர்கள் இன்னமும் தன்னம்பிக்கையோடு தமது கல்வியைத் தொடருகின்றனர். இவ்வாறான மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு ஜெய்ப்பூர் நிறுவனம் மட்டுமல்ல ஏனைய நிறுவனங்களில் இருந்தும் உதவிகள் கிடைக்கப்பெறுமாயின் அது அவர்களது எதிர்கால வாழ்வை ஒளி மயமாக்கும். போரின் கொடூரத்தில் இருந்து தப்பிப் பிழைத்து வந்து வாழுகின்றவர்களும் பலர் உள்ளனர். உதயன் நிறுவனத்தினால் கூட அந்த மாணவர்களுக்கு ஏதாவது உதவிகள் கிடைத்தால் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு பெரும் ஊன்றுகோலாக அமையும்.


எத்தனையோ வெவ்வேறு தலைப்புக்களில் விவாத மேடை அமைத்துக் கொடுக்கும் உதயன் ஏன் இந்த மாற்றாற்றலுடையோரின் பிரச்சினைகள் குறித்து விவாத மேடையொன்றை ஒழுங்கு செய்யக் கூடாது? அவ்வித வாய்ப்பு வழங்கப்படுமானால் மௌனமாய் இருக்கும் நெஞ்சங்கள் யாவும் தம் துன்பங்களைக் கூறிக் கதறி அழும்.

வெளி உலகத்தை நோக்கிய என் பாதையில் தென்பட்ட பல விடயங்களில் எனது உள்ளத்தைத் தொட்ட விடயம் இது.

தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும் .தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசியிருக்கும். இந்த வரிகள் ஒவ்வொன்றும்தான் என்னை தேடல் மேற்கொள்ளச் செய்தது. என் தேடல் முடியும் வரை என் வாழ்வில் ஒரு போதும் ஓய்வு என்பது இல்லை.

எனக்கோ ஆனது
பதினெட்டு வயதுதான்
காதல் வலையில் - நான்
விழ வேண்டிய வயது இது ஆனால்
நான் விழுந்ததோ தேடல் என்ற கடலில்
என் இலட்சியம் என்ற
முத்தை எடுக்கும் வரை
ஓயாது என் தேடல் கடலின் அடி வரையில்
தேடிச் செல்லும் தைரியத்தை
என்னிடம் அதிகமாகவே
சேமித்து வைத்திருக்கின்றேன்
என் தேடலின் வெற்றிக்கு
என் தைரியம் ஒன்றே
என்றென்றும் கை கொடுக்கும்.

*மேரி டொறின்றினா கிளமென்ற்.*



## அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே

இன்றைய அரசியல் உலகை எதிர்த்து அதில் ஆதிக்கம் செலுத்துவதில் கூடுதலாக ஆண்களே காணப்படுகின்றனர். இவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சவால்களையும் அச்சுறுத்தலையும் எதிர்நோக்கி நிற்பவர்களாகவே கொள்ளப்படுகின்றனர்.

ஒரு பெண் இன்றைய அரசியலுக்கு வந்து தோற்றுவிட்டால் அவள் அதன் பின்னர் பலவீனமானவள் ஆகிவிடுவாள்.

முன்னைய காலத்து பெண்கள் வீட்டு வேலை செய்வதும், வீட்டுக்குள் முடங்கி இருப்பதையும் வழங்கமாக்கியிருந்தனர். இன்றைய காலப்பெண்கள் அரசியலில் வளர்ந்தாலும் அவளைச் சுற்றி பெரும் ஆபத்து ஒன்று காணப்படவே செய்கிறது.

இவற்றையும் தாண்டி அரசியலுக்குள் வந்தால் இன்றைய சமூகம் அந்தப் பெண்ணை வேறானதொரு கண்ணோட்டத்திலே பார்கிறது. இதனால் பெண்கள் அரசியலில் பிரவேசிக்கத் தயங்குதால் அரசியலில் ஆண்களின் ஆதிக் கமே அதிகளவில் காணப்படுகின்றது.

**ஆண்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சவால்களையும் அச்சுறுத்தலையும் எதிர்நோக்கி நிற்பவராகவே காணப்படுகின்றனர்.**

**சி.அகல்யா,**
**கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**

ஐந்நூறு ரூபாயை பார்த்து
பல மாசமாச்சு
பொறுத்துப் பொறுத்துப் பார்த்து
கடன்காரன் வீட்டு வாசலில்
புயல் வந்தாலும் பரவாயில்லை
நகரில் மழை வருமா?
தங்கம் விலை ஏஷினால் என்ன?
இறங்கினால் என்ன?
மஞ்சள் கயிறுதான் தாலி எமக்கு!
கனவில் மட்டும் பல காதலிகள்
நிஜத்தில் திருமணம் செய்யக்கூட
யாரும் இல்லை...

வீடு முழுக்க பெருச்சாளிகள் தொல்லை
நாடு முழுக்க சாமியார்கள் தொல்லை
பாலைக்கும் நிலம் உண்டு
ஏழைக்கு எதுவும் இல்லை.

**சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி, சுதுமலை.**







## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................

முகவரி :- ..........................................


..........................................

.................... ....................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மக்கள் விசனம்

# தொலைபேசி அச்சுறுத்தல் விசாரணைகள் கிளிநொச்சி பொலிஸார் கடும் அசமந்தம்



கிளிநொச்சி, ஓக.15

தொலைபேசி அச்சுறுத்தல் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் இடம் பெறுவதில்லையென பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியின் பல இடங்களிலும் இராணுவத்தினர் என்றும் இராணுவப் புலனாய்வாளர்கள், பொலிஸார் எனவும் கூறிக்கொண்டு தொலைபேசியூடாக மக்களை அச்சுறுத்தி வருகின்ற சம்பவங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளில் ஏராளமானவை கிடப்பில் போடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. உதாரணமாக கிளிநொச்சியில் உள்ள பாடசாலை அதிபர் ஒருவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட குறுந்தகவல்கள் மற்றும் தொலைபேசி அச்சுறுத்தல்கள் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு நான்கு மாதங்களைத் தாண்டிய போதிலும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ஒருவருக்கு விடுக்கப்பட்ட தொலைபேசி அச்சுறுத்தலில் தாம் இராணுவப் புலனாய்வாளர்கள் எனக் கூறியதுடன் வவுனியாப் பகுதிக்கு 1 லட்சம் ரூபா பணத்துடன் வருமாறும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. மேலும் இது தொடர்பான சந்தேக நபர்களை அச்சுறுத்தப்பட்டவர் அடையாளம் காட்டியபோதிலும் இதுவரை பொலிஸார் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லையெனத் தெரிகின்றது.

இதேவேளை தற்போது தொலைபேசி அச்சுறுத்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளை பொலிஸார் ஏற்க மறுத்து வருவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

## சின்னம் சூட்டும் நிகழ்வு


வவுனியா, ஓக.15

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் மாணவ தலைவிகளுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை வளாகத்தில் அதிபர் செல்வி உமா தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் சத்தியப் பிரமாணத்துக்கான சுடர்களை பாடசாலையின் உபஅதிபர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து மாணவ தலைவிகள் சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளும் நிகழ்வு இடம்பெற்றது. அதன் பின்னர் பாடசாலை அதிபர் முதலாவது சின்னத்தைச் சூட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (க-421)



## நெடுங்கேணியில் தொடர்ந்து அழிவு ஏற்படுத்தும் யானைகள்



நெடுங்கேணி, ஓக.15

நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் இரவு வேளைகளில் வரும் காட்டு யானைகளால் பயிர்கள் பெருமளவில் சேதமாக்கப்பட்டு வருகின்றன. முதுரம்பிட்டி, பாலமோட்டை, ஒலுமடு ஆகிய கிராமங்களுக்குள் இரவானதும் உட்புகும் காட்டு யானைகள் தென்னை, வாழை, மரவள்ளி ஆகிய பயிர்களுக்கு சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. இந்த யானைகள் மக்கள் குடியிருப்புக்களுள் பகல் வேளைகளிலும் நடமாடுவதால் கிராம மக்கள் பீதியில் உறைந்திருப்பதைக் காணமுடிகின்றது. இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறையிட்ட போதிலும் இந்த யானைகள் இதுவரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை.

இதனால் மக்கள் அழிவுகளை எதிர்கொள்வதுடன் அச்சமான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதையும் காண முடிகின்றது. (க-435)

# இடர்களை எதிர்கொள்ளும் கல்விளான் கிராம மக்கள்

துணுக்காய், ஓக.15

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கல்விளான் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பல்வேறு வகையிலும் இடர்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் சுமார் 150 குடும்பங்களைச் சேர்ந்த 400 பேர் வசித்து வருகின்றனர்.

குறிப்பாக போக்குவரத்து நெருக்கடி இந்த மக்களைப் பெரிதும் பாதித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. இங்குள்ள வீதிகள் மோசமான நிலையில் காணப்படுவதால் பஸ் சேவைகளும் இடம்பெறுவதில்லை.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள மல்லாவி பொதுச் சந்தைக்கு எடுத்துச் செல்கின்றனர். ஆனால் வீதிகள் மோசமான நிலையில் காணப்படுவதால் தாம் பல்வேறு இடர்களை எதிர்கொள்வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மருத்துவ சேவைகளைப் பெற வேண்டுமாயின் துணுக்காயிலுள்ள சுகாதார பராமரிப்பு நிலையத்தையே இந்தக் கிராம மக்கள் நாட வேண்டிய நிலையிலுள்ளனர். அங்கும் போதிய மருத்துவ வசதிகள் இல்லையெனக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இங்கு போருக்கு முன்னர் சனசமூக நிலையம் இயங்கி வந்த மார்க்கண்டு மண்டபம் மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால் சனசமூக நிலையம் இயங்குவதில்லை. இதனால் கிராம மக்கள் தினசரிப் பத்திரிகைகளைக்கூடப் படிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

மேலும் துணுக்காய்ப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளையொன்று வசதிகள் இல்லாத தகரக் கொட்டில் ஒன்றில் இயங்கி வருவதால் இங்குள்ள மக்கள் சங்கத்தின் மூலமாக முழுமையான சேவைகளைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

மின்சாரம் இந்தக் கிராமத்தை எட்டிப் பார்க்காததால் இருளின் மத்தியில் தாம் வாழ்ந்து வருவதாக கிராம மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (க-415)



# போரினால் பாதிக்கப்பட்ட 50 பெண்களுக்கு வீடுகள்

புதுக்குடியிருப்பு, ஓக.14


புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு வதிவிட வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் முன்வந்துள்ள தெரிவு செய்யப்பட்டுள்ள 50 பயனாளிகளுக்கு நிரந்தர வீடு களை அமைத்துக் கொடுப்பதற்கான ஒழுங்குகளையும் அந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் புதுக்குடியிருப்பு வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

முல்லை மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இடம்பெற்ற போர் காரணமாக 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுமுள்ள 90 வீதமான வீடுகள் முற்றாகச் சேதத்துக்குள்ளாகின. சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் அவசர தேவை கருதி பொது நிறுவனங்களினால் தற்காலிகக் குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. அடிப்படை வசதிகளின்றி அல்லல்படும் இவர்கள் படிப்படியாக இந்திய வீட்டுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த நிலையில் போரால் பாதிக்கப்பட்டு எவருடைய ஆதரவுமின்றி, வதிவிட வசதியின்றி அல்லல்படும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ள கியூடெக் கரிதாஸ் நிறுவனம் உடையார்கட்டு வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு ஒவ்வொன்றும் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் விழா கடந்த வாரம் இடம் பெற்றதாக அறிய முடிகின்றது. (க-115)



கிளிநொச்சி மாவட்டம் முக்கொம்பன் பாடசாலைக் கட்டடத்தின் மேற் கூரை காற்றினால் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. (க-18)

# மடுமாதா தேவாலய வருடாந்த பெருவிழா நிறைவு இன்று

மன்னார், ஓக.15

மடுமாதா தேவாலய வருடாந்த பெருந்திருவிழா இன்று நிறைவு பெறுகின்றது. காலை 6 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து மாதாவின் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளன.

திருவிழா கூட்டுத் திருப்பலி பரிசுத்தப்பாப்பரசரின் பிரதிநிதியான பேரருட் திரு ஜோசப் ஸ்பரிடரி தலைமையில் இடம் பெறும்.



**திருவிழாவுக்கு 5 லட்சம் பக்தர்கள் எதிர்பார்க்கப் படுகின்றனர்.**

யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, கண்டி மறை மாவட்ட ஆயர் வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை, அநுராதபுரம் மறை மாவட்ட ஆயர் அந்ராதி ஆண்டகை, கொழும்பு மறை மாவட்ட ஓய்வு நிலை பேராயர் பேரருட் திரு ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றுவார்கள்.

இந்த முறை நடைபெறும் திருவிழாவுக்கு 5 லட்சம் பக்தர்களை எதிர்பார்ப்பதாகவும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை மன்னார் மாவட்டச் செயலகமும் மடுமாதா தேவாலய பரிபாலன சபையும் இணைந்து மேற்கொண்டுள்ளதாகவும் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட் திரு விக்டர் சோசை தெரிவித்துள்ளார். (க-8)

## தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்:** வியாபார ரீதியாக முக்கிய முடிவு களை எடுப்பீர்கள். குடும்பத்தினரின் எண் ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.



**இடபம்:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்த மாகக் காணப்படுவீர்கள். பழைய நண்பர் களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். உறவினர்களால் பாராட் டப்படுவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**மிதுனம்:** நீண்டநாள் எண்ணங்களைப் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரியமான வர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக் கும்.



**கடகம்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வருமதிகள் வந்து சேரும் வேலையாள் களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.



**சிங்கம்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமான வர்களைச் சந்தித்துப் பொழுதைக் கழிப்பீர் கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**கன்னி:** உங்களது வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன் மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தி யோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு கிட்டும்.

## நாளை

ஆடி-31 வெள்ளிக்கிழமை 16.08.2013
திதி: தசமி மு.இ.07.47 வரை
நட்சத்திரம்: கேட்டை மு.இ.08.47 வரை
வரலட்சுமி விரதம்
சுபநேரம்: 06.05 - 07.35 வரை
இராகுகாலம்: 10.35 - 12.05 வரை



**துலாம்:** சில காரியங்களைப் போராடி முடிப் பீர்கள். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். யாரை யும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். சிலரது தவறான செயல் களை எண்ணி வருந்துவீர்கள். உத்தி யோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.



**விருச்சிகம்:** எடுத்த வேலையை முடிப்பதற் குள் அலைச்சல் அதிகரிக்கும். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். உத்தி யோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.



**தனுசு:** புதுப்பொலிவுடன் காணப்படுவீர் கள். முன்கோபம் விலகும். அரச காரியங் களில் அனுகூலம் உண்டு. அயல் வீட் டாரின் ஆதரவு அதிகரிக்கும். பயணங் களால் ஆதாயம் உண்டு.



**மகரம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.



**கும்பம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன் மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்து வார்கள்.



**மீனம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். எவரும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லையே என ஆதங்கப் படுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப் படுவீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | 8 | 9 | 2 | 6 | |
| | | | | 1 | | 9 | | |
| | | | 6 | | 7 | | | |
| 3 | | | | | | 4 | 7 | |
| 8 | | 9 | 2 | 7 | 3 | 5 | | 6 |
| | 5 | 1 | | | | | | 2 |
| 9 | | | 1 | | 4 | | | |
| | | 6 | | 3 | | | | |
| | 2 | 4 | 7 | 6 | 8 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 5 | 3 | 8 | 9 | 2 | 6 | 7 |
| 6 | 3 | 7 | 5 | 1 | 2 | 9 | 4 | 8 |
| 2 | 9 | 8 | 6 | 4 | 7 | 1 | 5 | 3 |
| 3 | 6 | 2 | 8 | 5 | 1 | 4 | 7 | 9 |
| 8 | 4 | 9 | 2 | 7 | 3 | 5 | 1 | 6 |
| 7 | 5 | 1 | 4 | 9 | 6 | 8 | 3 | 2 |
| 9 | 7 | 3 | 1 | 2 | 4 | 6 | 8 | 5 |
| 1 | 8 | 6 | 9 | 3 | 5 | 7 | 2 | 4 |
| 5 | 2 | 4 | 7 | 6 | 8 | 3 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# ரயில் கடவை விபத்தை தடுக்க புதிய செயற்றிட்டம்

## ஒழுங்குகளை கடைப்பிடிக்காதோர் நீதிமன்றத்தில்

கொழும்பு, ஓக.15
ரயில் கடவைகளில் இடம்பெறும் விபத்துக்கள் அதிகரித்துள்ளதையடுத்து, அத்தகைய விபத்துக்களை குறைப்பதற்கு செயற்றிட்ட மொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ரயில் கடவைகளில் பொருத்தப்பட்டுள்ள தடைக் கதவுகள் மூடப்படும் சந்தர்ப்பங்களில் அதைக் கவனத்தில் கொள்ளாது, ரயில் பாதையைக் கடந்த பாதசாரிகள் விபத்துக்களுக்கு உள்ளாகியுள்ள பல சந்தர்ப்பங்கள் ரயில்வே பாதுகாப்புப் பிரிவுகளால் இனம் காணப்பட்டுள்ளன.

அவற்றைத் தவிர்க்கும் வகையில் ரயில் கடவைகளில் தடைக் கதவுகள் மூடப்பட்டுள்ளபோது, அதைக் கவனத்தில் எடுக்காது ரயில் பாதையைக் குறுக்கறுத்து கடந்து செல்ல எத்தணிக்கும் பாதசாரிகளைக் கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்த செயற்றிட்டமொன்றை ரயில்வே பாதுகாப்புப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

இந்த நடைமுறையின் கீழ் அண்மையில் மாத்தறைப் பிரதேசமொன்றில் ரயில் கடவையின் தடைக் கதவு மூடப்பட்டிருந்தபோது சைக்கிள்களில் ரயில் கடவையைக் கடக்க முயற்சித்துள்ள இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர்.

அவர்களைக் கடுமையாக எச்சரித்துள்ள நீதிவான் 16 மணித்தியாலயங்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிட்டார். இந்தச் சட்டம் எதிர்காலத்தில் கடுமையாக நடைமுறைப் படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.(ச)

# தேர்தல் குறித்து அவதானிக்கிறது லஞ்ச, ஊழல் ஆணைக்குழு

கொழும்பு, ஓக. 15
மாகாண சபைகளுக்கான தேர்தலின் போது பொதுமக்களுக்கு லஞ்சங்களை வழங்கும் அரசியல் வாதிகள் குறித்து அவதானம் செலுத்தப்படும் என்று லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாகக் கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க தனியான குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது என்று ஆணைக் குழுவின் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

இதேவேளை இது சம்பந்தமான சில முறைப்பாடுகள் ஏற்கனவே ஆணைக் குழுவுக்குக் கிடைத்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச-22)

# தடைசெய்யப்பட்ட பால்மாவை பதுக்கினால் கடும் நடவடிக்கை

கொழும்பு,ஓக.15
இரசாயனப் பதார்த்தம் உள்ளதாகக் கூறப்படும் சர்ச்சைக்குரிய பால்மா வகைகள் சந்தையிலிருந்து முற்றாக அகற்றப்பட்டுவிட்டன என்று பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் தடை செய்யப்பட்ட பால்மா வகைகளை விற்பனைக்காக பதுக்கி வைத்திருக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர் சங் கத்தின் தலைவர் எம்.ஜி.யூ. ரோஹன தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட பால்மா வகைகளைத் தவிர தற்போது சந்தையிலுள்ள ஏனைய பால்மா வகைகளிலும் இரசாயனப் பதார்த்தம் உள்ளனவா? என்பதை கண்டறிய மாதிரிகள் பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

(ச)

# 23 சிறுமிகள் கர்ப்பம்

## விழிப்புணர்வு உடனடித் தேவை

கொழும்பு,ஓக.15
இந்த ஆண்டின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் 160 பேர்களுள் 23 பேர் பதின்ம வயதுத் தாய்மார்களே என்று வெலிகந்தை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி தரங்கி வித்தான ஆரச்சி தெரிவித்தார். கடந்த ஏப்ரல் மே, ஜூன் ஆகிய மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளிலேயே இது தெரியவந்துள்ளது.



ஒப்பீட்டளவில் கடந்த ஆண்டில் 82 வீதமாக இருந்துள்ள பதின்ம வயது கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை இந்த ஆண்டின் முதல் காலாண்டில் அதிகரித்துள்ளமையானது பாரதூரமான விடயம் என்று அவர் தெரிவித் தார்.

இளவயதுத் தாய்மார்கள் 16, 17, 18,19 ஆகிய வயதுகளை உடையோர் என்று அவர் கூறினார்.

இவ்வாறான நிலைமைகள் தாய்மார்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்குச் செல்வது அதிகரித்தல், கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இழக்கப்படுதல், இளவயது விவா கங்கள், வன்புணர்வுச் சம்பவங்கள் ஆகிய வற்றினாலேயே ஏற்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். பாடசாலைகள் மட்டத்தில் மற்றும் கிராமமட்டத்தில் சுகாதார சேவை அதிகாரிகள் இது குறித்த அறிவூட்டல் செயற்றிட்டங்களைச் செயற்படுத்தி வந்தபோதிலும், ஏனைய நிறுவனங்களும் இது தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று அவர் கூறினார்.

(ச-22)

இலங்கை மின்சார சபை-
யாழ். பிரதேச அலுவலகம்
**அதியுயர் அழுத்த மின்சார கடத்துகை பற்றிய அறிவித்தல்**

கிளிநொச்சி- சுன்னாகம் இடையே அமைக்கப்பட்டுள்ள 132,000 வோல்ட் அதியுயர் அழுத்த மின்மார்க்கத்தினூடாக (பழைய லக்சபான மார்க்கம்) எதிர்வரும் 16.08.2013 வெள்ளிக்கிழமை முதல் மின்சாரம் சுன்னாகத்திற்கு வழங்கப்படவுள்ளது. எனவே ஊரெழு, நீர்வேலி, போயிட்டி, அச்செழு, சிறுப்பிட்டி, புத்தூர் கிழக்கு, மட்டுவில், சரசாலை, மந்துவில், வரணி, கொடிகாமம், எருவன், மிருசுவில், சோரன்பற்று, கோவில்வயல், இயக்கச்சி, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்களை குறிப்பிட்ட மின்மார்க்கத்திலிருந்து பாதுகாப்பாக இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:- 021 224 0302

பிரதிப் பொது முகாமையாளர்
(வட மாகாணம்),
இலங்கை மின்சாரசபை,
யாழ்ப்பாணம். 14.08.2013 (சி/11175)

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை"

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## துயர்பகிர்கின்றோம்



சேவாலங்கா மன்றத்தின் யாழ். மாவட்ட நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் **ந.நகுலேந்திரனின்** பாசமிகு அன்னை

**திருமதி. நல்லதம்பி சரஸ்வதி**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்கின்றோம்.

பணியாளர்கள், சேவா இல்லம்,
சேவாலங்க மன்றம், யாழ்பாணம். (31370)

## மரண அறிவித்தல்

### சின்னப்பொடியன் அப்புக்குட்டி



கல்விளான் துணுக்காயை பிறப்பிடமாகவும், ஈசன் குடியிருப்பு மருக்காரப்பளை வீதி, நெளுக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னப் பொடியன் அப்புக்குட்டி 13.08.2013 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், அற்புதராசா, ஸ்ரீஸ்கந்தராசா, அற்புதமலர், ஆனந்தராசா, ஜீவநந்தினி (ஜேர்மனி), அன்ராசா (ஆசிரியர்- முல்/யோகபுரம் ம.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2013) வியாழக்கிழமை இல.61/9B ஈசன் குடியிருப்பு, மருக்கராம்பளை வீதி, நெளுக்குளம் எனும் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நெளுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.61/9B, ஈசன்குடியிருப்பு,
மருக்காரம்பளை வீதி,
நெளுக்குளம், வவுனியா. (35223) (14,16)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தம்பு இராசலிங்கம்

( ஓய்வு பெற்ற எழுதுவினைஞர் – Fisheries Department )

மலேசியாவை பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை வறுத்தலை விளானை வசிப்பிடமாகவும், தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய தம்பு இராசலிங்கம் 14.08.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு இளையபிள்ளை தம்பதியரின் மகனும், தர்மபூபதியின் அன்புக் கணவருமாவார். சங்கரனின் பாசமிகு தந்தையும் காந்திமதியின் பாசமிகு மாமனாரும், நம்மியன், திவ்வியன் ஆகியோரின் அருமை பேரனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், அன்னம்மா, நாகம்மா ஆகியோரின் சகோதரரும், செல்வபதி ( ரதி ) காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், மகேந்திரன், மனோகரன் ஆகியோரின் மைத்துனரும், கலைவாணி உதயசேகரம் ( கனடா ), காலஞ்சென்ற கஜேந்திரன், சுஜேந்திரன், நளாயினி ஆகியோரின் மாமாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2013) வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு நடைபெற்று 3.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பொறளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்,நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சங்கரன் (மகன் ) 077 3090888
காந்திமதி (மருமகள் ) 077 6550526
No 46-1/1, ஹெரலிங்வூட், பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு-06
011 2360946

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி சரஸ்வதி



ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கெருடாவில் தொண்டைமானாறை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சரஸ்வதி நேற்று முன்தினம் (13.08.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிந்தாமணி-காந்தியம்மா தம்பதியரின் அன்பு மகளும் கந்தசாமி-செல்லம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும் கமலாதேவி, தேவராசா, சின்னக்கிளி, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நகுலேந்திரன் (பணிப்பாளர், சேவாலங்கா, யாழ்ப்பாணம்), கலைவாணன் (கனடா), கவிதா ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயவாணி (ஆசிரியை, கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை), சதீஸ் (நகரசபை, உபதலைவர், வல்வெட்டித்துறை) ஆகியோரின் அன்பு மாமியும் அவந்திகா, சாருகா, சதுர்சன், சதுமிதா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2013) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் மயிலியதனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெருடாவில், தொண்டைமானாறு.
கண்ணன் - 0773620979 (31369)

தகவல்:
குடும்பத்தினர்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்.ஓக. 15
யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் தொடர் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப் பீட புதிய கட்டடத் தொகுதியில் இடம் பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் 1980 ஆம் ஆண்டு மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் காண்பியக்கலை எனும் தொனிப் பொருளில் அருந்ததி ரட்ணராஜ். கமலா வாசுகி ஆகியோர் உரை நிகழ்த்துவர். (வ-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்
28.02.1944

ஆண்டவன் அடியில்
18.07.2013

### அமரர் முத்தையா புவனேந்திரன்

கடந்த 18.07.2013 வியாழக்கிழமை இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம், அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.08.2013) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 17.08.2013 சனிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமரபாகு
தேவன்குறிச்சி,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(37883)(45.6.3)

## சமாதானம் பேச முயன்றவருக்கு வாள்வெட்டு

தென்மராட்சி, ஓக. 15
இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிணக்குகளை சமாதானமாக பேசித் தீர்க்க முயன்றவர் வாள்வெட்டுக்கு இலக்கானார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மிருசுவில் உசன் தெற்கில் இடம் பெற்றது.
உடன் பிறந்த சகோதரங்களுக்கு இடையில் ஏற்பட்ட பிணக்கு நீண்டகாலமாக நீடித்து வந்தது. இதனைக் கவனித்த ஊர் பிரமுகர் இரு குடும்பத்தினரையும் ஒற்றுமையாக்கும் முயற்சியில் ஈடுபட்டு நேற்றுமுன்தினம் இரு குடும்பத்தினரையும் 'பேச்சு வார்த்தை' யில் ஈடுபடுத்தினார்.
இவ் வேளையில் இரு பகுதியினரும் இணக்கம் காணமுடியாத அளவுக்கு வாக்குவாதம் முற்றிய தன் விளைவாக வாள் வீச்சு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.
வாள்வெட்டுக்கு இலக்கான 46 வயதுடைய குடும்பஸ்தர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஓ-9)

## 13 குடும்பங்களுக்கு திருமணப் பதிவு நடமாடும் சேவையில்

தென்மராட்சி, ஓக. 15
தென்மராட்சி பிரதேச செயலகத்தால் நேற்று முன்தினம் கொடிகாமத்தில் நடத்தப்பட்ட திருமணப் பதிவுக்கான இலவச நடமாடும் சேவையில் 13 குடும்பங்கள் இலவசமாக திருமணப் பதிவை மேற் கொண்டுள்ளன.
ஏற்கனவே திருமணப் பதிவு செய்யாதிருந்த குடும்பங்களுக்கே இலவசமாகத் திருமணப் பதிவு மேற்கொள்ளப்பட்டது.
பிரதேச செயலர், பிரதேச மேலதிக பதிவாளர் முன்னிலையில் குறித்த குடும்பங்களுக்கு திருமணப் பதிவு மேற் கொள்ளப்பட்டது.(வ-9)

## பறி முதலான லொறி விற்பனைக்கு

யாழ்ப்பாணம். ஓக. 15
பருத்தித்துறை நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் லொறி ஒன்றை விற்பனை செய்வது தொடர்பாக கேள்விப் பத்திரங்கள் கோரப் பட்டுள்ளன.
லொறியைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் இதற்கான விண்ணப் பப்படிவங்களை யாழ். மேல் நீதிமன்ற கணக்குக் கிளையில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு நீதி மன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## 10 ஆவது ஆண்டு நிறைவினில் உங்கள் நினைவு



தோற்றம்
26.12.1925

மறைவு
15.08.2003

### திருமதி சரவணமுத்து கனகம்மா

*அம்மா உங்கள் நினைவு*
*எங்கள் உள்ளங்களில்*
*என்றும் பசுமையாய் இனிமையாய்*
*சுகமும் வலியும் கலந்த கலவையாய்*
*உங்கள் பேச்சும் மூச்சும் நின்று*
*ஆண்டுகள் பத்து கடந்த போதும்*
*எங்கள் பேச்சிலும் மூச்சிலும்*
*உங்கள் நினைவே நிதம்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

748, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(31269)(3.6.11)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

நிகழும் விஜய வருடம் ஆடித்திங்கள் 17ஆம் நாள் (02.08.2013) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது **ஆலய பிரதமகுருவும் ஸ்தானீக குருவுமாகிய சிவஸ்ரீ வே.நடராஜக்குருக்கள்** அவர்களின் தர்மபத்தினி.



### ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி அம்மா

அவர்களின் ஆத்மசாந்தியை முன்னிட்டு ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் இன்று (15.08.2013) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலியுரையும் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் இந்நிகழ்வில் கலந்து அம்மாவின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோயிலடி,
ஆவரங்கால்,புத்தூர்.

அன்னாரின் குடும்பத்தினரும்,
சிவன் தேவஸ்தானதர்மகர்த்தா சபையினரும்

(34300)(7.6.3)

## நினைவலைகள்

31 ஆம் நாள் — 41 ஆம் நாள்



அமரர் கந்தையா பாலசுந்தரம் — திருமதி பாலசுந்தரம் ரஞ்சிதமலர்

நாங்கள் எத்தனை சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது

7/3, முதலாம் ஒழுங்கை,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

சிவஞானலட்சுமி (சிவம்)
கு[illegible]னர்.

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

15.08.2013



தோற்றம்
20.04.1971

மறைவு
07.07.2013
(திதி: சதுர்த்தசி)

### கதிர்காமநாதன் வசந்தி
(வதனி)

எம் அருமை வசந்தி நீர்
எம்மைப் பிரிந்து இன்றுடன் 41நாள்கள் ஆகுதம்மா
எத்தனை நாள்கள் சென்றாலும் உன்
நித்திய பிரிவின் வேதனையைத் தாங்க முடியுமா

உம் அழகிய வதனமும்
வசீகரமும் வசீகரப் புன்னகையும்
அன்பான வார்த்தைகளும் என்றென்றும்
எம் நெஞ்சில் நிலைக்குதம்மா
தெய்வமாய் நீர் இருந்து காத்திடுவீர்
என்றென்றும் நீர் எம்மோடு வாழ்ந்த
இனிய நினைவுகளுடன் வாழும்

அன்புக் கணவர்,
தாய், சகோதரி, சகோதரர்,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
உறவினர்கள்.

நீற்சாமம்,
சங்கானை.

(சி/11149)(3.5.6

# திருத்தப்பட்ட வீதியில் தேர்தல் பிரசார 'கட்அவுட்'

யாழ்ப்பாணம், ஓக. 15

அரச நிதியின் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள வீதிகளில் தனது உருவப்படம் அடங்கிய கட்அவுட்களை காட்சிப்படுத்தியுள்ளார் பொது சன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடமாகாண வேட்பாளர் ஒருவர்.

நீண்டகாலமாகத் திருத்தப் படாது குன்றும் குழியுமாகக் காணப்பட்ட குஞ்சர் கடை மண்டான்வீதி கடந்த சில தினங்களுக்கு புனரமைப்புச் செய் யப்பட்டது. இந்த வீதியில் ஆங்காங்கே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறி ஆகியோரின் உருப் படங்களும் தேர்தலில் ஆளுங்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தனது உருப்படத்தையும் இணைத்து சிறிய பாதாகைகளைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக அந்தப் பதாதையில் பொதுஜன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய செயற்பாடு தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் விச னம் தெரிவித்துள்ளனர்.

தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் தொடர்பான சுவரொட்டிகளை ஒட்டவோ, விளம்பரத் பதாகைகள் காட்சிப் படுத்தவோ முடியாது என்ற விதிகளை மீறியே வேட்பாளர் இவ்வாறு தனது விளம்பரப் பதாகைகளைக் காட்சிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-400-8)


## உ ஆம் ஆண்டு நினைவஞ்சலி

துளிராய்
10.07.1982

விதையாய்
06.08.1992



**செல்வி சர்விழி (கிளி)**
**தம்பிராசா**

திதி : நவமி 15.08.2013

பாசமுள்ள செல்லக்கிளியைப் பறிகொடுத்து
இருபத்தொரு ஆண்டுகள் பறந்தனவே
பாரினிலே வந்துதிப்பீர் என்று நாமும்
பார்த்திருப்போம் கிளி மீண்டும் வரமாட்டீரோ!

கோட்டைக்காடு,
மல்லாகம்.

ஏங்கும் நெஞ்சங்கள்
தம்பிராசா குடும்பத்தினர்.

(31354) (7.6.3)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மண்ணில் 07.03.1948
விண்ணில் 16.07.2013



அமரர்
**மயில்வாகனம் தெய்வேந்திரம்**

கடந்த 16.07.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் மயில்வாகனம் தெய்வேந்திரம் அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (15.08.2013) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக் கிடைக்காதோர் தயவுசெய்து இதைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் வீதி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(31295) (7.6.3)


# தேர்தல் வன்முறை அதிகரிப்பு

கொழும்பு, ஓக.15

மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடைய சட்டங்களை மீறும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர். தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தமது அமைப்புக்கு 94 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறினார்.

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்படுகின்றமை தொடர்பிலேயே அதிகளவிலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (ச)


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை தர்மலிங்கம்



சாவகச்சேரி வடக்கு, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தர்மலிங்கம் நேற்று (14.08.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-யோகாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கனகமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, கனகலிங்கம், பாலசிங்கம், மகேஸ்வரி மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், புனிதவதி, கந்தசாமி, பொன்னம்பலம், தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கருணராசா மற்றும் தயாரூபி, யுகதாசன், திருக்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, இராஜகுலசிங்கம் (அருள் விநாயகர் மோட்டோர்ஸ்-சாவகச்சேரி), பகீரதி ஆகியோரின் அன்பு மாமனும், கிரிஷாந்தன், மனோஜ்சாந்தன், மிதுலா, கிருஷ்ணவேணன், சங்கீர்த்தனா, கபிலேஷன், தட்ஷாயினி, பிரியங்கா, பிரியதர்ஷினி, பிரியாழினி ஆகி யோரின் அன்புப் பேரனும், கபிஷன், கரீஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி,
சாவகச்சேரி வடக்கு.

(c/11168)(3.6.11)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



# மரண அறிவித்தல்

## வேல்முருகு பாலேந்திரன் (பாலா மாஸ்டர்)



அனுராதபுரத்தினைப் பிறப்பிடமாகவும், கோப்பாய், ஒஸ்லோ ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வேல்முருகு பாலேந்திரன் 13.08.2013 செவ்வாய்க்கிழமை ஒஸ்லோவில் காலமானார்.

அன்னார் வேல்முருகு - தெய்வநாயகி(கனடா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை-யோகம்மா (அரியாலை) தம்பதியரின் அன்பு மருமகனும், சோதிராணி(பிரேமா) அவர்களின் அன்புக் கணவரும், பிரணவன், சங்கவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (நியூசிலாந்து), குலேந்திரன் (கனடா), நிர்மலா(கனடா), சுபேந்திரன் (நோர்வே), புவனேந்திரன் (நோர்வே), அகிலா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உருத்திர குமார் (லண்டன்), விஜயகுமார்(லண்டன்), கோகிலராணி (அரியாலை), கைசந்திரா (ஜேர்மனி), பத்மராணி(அரியாலை), புஸ்பராணி(நோர்வே), ஸ்ரீகுமார் (பிரான்ஸ்), கலாராணி(லண்டன்), அசோக்குமார் (நோர்வே), திலீப் குமார் (லண்டன்), கணேசராணி (நியூசிலாந்து), உஷாராணி(கனடா), கஜேந்திரன் (கனடா), சந்திரிகா (நோர்வே), தேவராஜா(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 19.08.2013 திங்கட்கிழமை காலை 09:00 மணியிலிருந்து நண்பகல் 12:00 மணி வரை Alfaset Gravlund, Oslo என்னும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
பிரேமா(மனைவி) - +472 221 6508
பிரணவன் (மகன்)-+ 479 080 7512
வேல்முருகு, தெய்வநாயகி-+141 641 24352/
+141 660 92961
சுபேந்திரன், புஷ்பா - +472 210 5008
சிவனேந்திரன் சந்திரிகா- +477 752 0343
ஆவந்தி - +479 342 9742
சதா ஸ்ரீ- +479 582 8859

(31365)(3.6.11)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.



## திருமதி அக்னஸ் புலோரன்ஸ் சொலமன் (வயலட்)



மாட்டீன் வீதியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அக்னஸ் புலோரன்ஸ் சொலமன் (வயலட்) நேற்று (14.08.2013) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன் எட்வேட் ஹெஸ்லர் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ராஜதுரை சொலமன் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜோ.கிருபைச் சந்திரதாஸ் சொலமன் அவர்களின் அன்பு மனைவியும், Rev திருமதி மாளின் லோறேன் சகாயன் (அசெம்பிளி ஒப் கோட், ஆரையம்பதி), ரவிலிங்கன் சொலமன் (றெனி மூக்குக் கண்ணாடி-உரிமையாளர்), போதகர் ஜூட்எடிசன் சொலமன் (அசெம்பிளி ஒப்கோட்-திகண) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Rev லூயிஸ்பிள்ளை சகாயன், திருமதி சுஜித்தா ரவிலிங்கன் சொலமன் (ஆசிரியை -யாழ். வேலணை மத்திய கல்லூரி), திருமதி அனுஷா ஜூட் சொலமன் ஆகியோரின் அன்பு மாமியும், காருண்யா ஷேரன், ஷெரான், ஷிகான்டானியல், ஷாரோணி, ஜெத்ரோ, ஜொஷாயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற எலிசபேத் மேரி மாக்ரட் மற்றும் மேரி செல்வராணி (செல்லா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.08.2013) வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/20, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

(31350)(3.6.11)

தகவல்:
J.K.E சொலமன்(கணவர்),
R.L சொலமன்(மகன்).
021 222 8503

## துறைமுகத்தை இன்றுவரை பார்வையிடலாம்

கொழும்பு.ஓக.15


கொழும்பு துறைமுகத்தின் தெற்கு வாயில் மற்றும் தங்க நீர்த்துறை ஆகியவற்றை பொதுமக்கள் பார்வையிடுவதற்கான காலப் பகுதி இன்று வியாழக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று துறைமுக அதிகார சபை அறிவித்துள்ளது.

நவீன தொழில்நுட்பங்களுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கொழும்பு தெற்கு துறைமுகத்தை இதுவரை சுமார் 50 லட்சம் பொதுமக்கள் பார் வையிட்டுள்ளனர் என்று துறை முகங்கள் மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையே துறை



முகத்தைப் பார்வையிடுவதற்கான அனுமதி பொது மக்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-10)



முஸ்லிம் மக்கள் அண்மைக்காலமாக எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட 'சூரா' சபையினரால் அனைத்து முஸ்லிம் மக்களிடமிருந்தும் கையெழுத்து திரட்டும் பணி நடைபெற்று வருகின்றது.
முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தும் விதத்திலேயே இந்தக் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-10)

# தொழிற்சாலைக் கழிவுகளை அகற்றாவிடின் அனுமதி ரத்து

## வெலிவேரிய சம்பவத்தையடுத்து அதிரடி

கொழும்பு.ஓக.15

தொழிற்சாலைகளின் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாவிட்டால் அனுமதி ரத்துச் செய்யப்படும் என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இதற்கிணங்க வெளியேற்றப்படும் கழிவுகளால் சூழலுக்கோ அல்லது பொது மக்களுக்கோ எவ்வித பாதிப்பும் இல்லையென்பதை அத்தாட்சிப்படுத்தும் வகையில் நட வடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அமைச்சர் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

வெலிவேரிய, ரத்து பஸ்வல தொழிற்சாலை சம்பவத்தைத் தொடர்ந்து நாட்டிலுள்ள அனைத்து தொழிற்சாலைகளிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுகள் குறித்து உடனடியாக அவதானம் செலுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த உத்தரவுக்கமையவே முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

பொல்கஹவெல, மாவத்தகமை மற்றும் துல்ஹிரிய ஆகிய முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களுக்கு செவ்வாய்க்கிழமை நேரில் சென்ற அமைச்சர், வலயத்தின் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கழிவுகள் அகற்றப்படும் முறைமையை நேரில் கண்டறிந்துள்ளார்.

ஆரம்ப காலம் முதல் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் அமைந்துள்ள அனைத்து தொழிற்சாலைகளிலும் கழிவகற்றல் முறை சுற்றாடல் அதிகாரசபையால் பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றது. எனினும் இனிவரும் காலங்களில் கழிவகற்றல் முறைமை மாதந்தோறும் சுற்றாடல் அதிகாரிகளால் பரீட்சிக்கப்படுவதுடன் அவர்களால் வழங்கப்படும் அறிக்கை சுற்றாடல் அதிகார சபையால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்குள் மாத்திரமின்றி வலயங்களுக்கு வெளியில் அமைந்திருக்கும் தொழிற்சாலை களின் கழிவகற்றும் முறை குறித்தும் சோதனை நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் பணிப்பாளர்களுக்கு தெரிவித்தார்.

இதேவேளை, முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களுக்கான பயணத்தின் போது அமைச்சர் மாவத்தகம மற்றும் பொல்காவலையிலும் மேலும் புதிதாக இரண்டு முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை நிறுவுவதற்கான நிலம் குறித்தும் அதிகாரிகளுடன் ஆராய்ந்துள்ளார். (ச)

## பஸ் கட்டண அதிகரிப்பு விவகாரம்; ஆலோசனை பெற்றது ஆணைக்குழு

கொழும்பு.ஓக.15

பஸ் கட்டண அதிகரிப்பு விவகாரம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பஸ் கட்டணத்தை திருத்தும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வுக்கு இல்லை என்று பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிக்கும் குற்றச்சாட்டு குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுத் தலைவர் ரொசான் குணவர்தன தெரிவித்தார்.

எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிக்கப் போவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. ஆனால் பஸ் உரிமையாளர்களினால் கட்டணம் அதிகரிக்க முடியாது. அவ்வாறு அதிகரித்தால் சட்ட நடவடிக்கை எடுப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்திருந்தது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் எச்சரிக்கையையும் மீறி பஸ் உரிமையாளர்கள் கட்டணத்தை அதிகரித்தால் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டமா அதிபரை சந்தித்து செவ்வாய்க்கிழமை ஆலோசனை பெற்றதாக அவர் கூறினார். (ச)

## சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு



கொழும்பு.ஓக.15

இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் சீன சுற்றலாப் பயணிகளின் வருகை 72 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

2012 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்தில் 9,622 சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப் பகுதியில் 16,582 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுகிறது என்று சுற்றுலாத்துறை மேம்பாட்டு நிறுவனத்தின் துணைப் பணிப்பாளர் யுவராஜ் அத்துகோரல தெரிவித்தார்.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் நாட்டுக்குள் சீனர்கள் பிரவேசித்து பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சீனர்கள் இலங்கையை ஆக்கிரமித்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. நாட்டின் தொழிற் சந்தையில் சீனர்களின் தலையீடு அதிகரித்துள்ளது.

அதனால் எதிர்காலத்தில் உள்நாட்டவர்கள் வேலையில் பிரச்சினையால் திண்டாட நேரிடும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

## 8 பொலிஸார் பணிநீக்கம்

கொழும்பு.ஓக.15

தனமல்வில பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எட்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பிடிபட்ட பெருந்தொகை கஞ்சாவில் குறைந்த அளவை மாத்திரம் விசாரணைக்கு சமர்ப்பித்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அண்மையில் சுற்றிவளைப்பு ஒன்றுக்குச் சென்ற குறிப்பிட்ட பொலிஸார் பெருந்தொகை கஞ்சாவை மீட்டு அதில் சிறு தொகையை பொலிஸ் நிலையத்தில் சமர்பித்துள்ளனர்.

இது குறித்து விசாரணை நடத்திய பொலிஸ் மேலிடம் சம்பந்தப்பட்ட 8 பொலிஸ் உத்தியோகத்தர்களை பணி நீக்கம் செய்துள்ளது.

பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுள் உப பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் சார்ஜன், 5 பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் மற்றும் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர் ஒருவருமாக எண்மர் உள்ளடங்குகின்றனர். (ச)

## இராணுவத் தளபதியை சந்தித்தது சீனக் குழு





கொழும்பு.ஓக.15

இலங்கையின் புதிய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்கவை, சீனத் தூதர் தலைமையிலான குழுவொன்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

இலங்கை இராணுவத் தலைமையகத்துக்கு செவ்வாய்க் கிழமை தமது குழுவொன்றுடன் சென்ற சீனத் தூதர் வூ ஜியாங்ஹாவோ, கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் புதிய பாதுகாப்பு ஆலோச கராகப் பொறுப்பேற்றுள்ள படை அதிகாரியையும், இரா ணுவத் தளபதிக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். இந்தக் குழுவில் மேலும் இரண்டு சீன அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர்.
இந்தச் சந்திப்பின்போது, இரு தரப்பு விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத் தளபதியாக கடந்த முதலாம் திகதி லெப். ஜெனரல் தயா ரத் நாயக்க பொறுப்பேற்றதையடுத்து அவரை முறைப்படியாகச் சந்தித்துப் பேசிய முதல் வெளிநாட்டு தூதர் குழு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## நியமனப் பத்திரங்களை கையளித்தனர் தூதர்கள்

கொழும்பு. ஓக. 15

புதிதாக நியமிக்கப்பட்ட ஆறு நாடுகளைச் சேர்ந்த தூதர்கள் நேற்று முன் தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துத் தமது நியமனப்பத்திரங்களைக் கையளித்தனர்.

இது தொடர்பான வைபவம் திங்கட் கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தான்சானியா ஐக்கிய குடியரசின் தூதர் ஜோன் டபிள்யூ எச்.இஜாசி, போட்ஸ்வானா குடியரசின் தூதர் திருமதி லெசோ எத்தல் மொட்சுமி, ஸ்வாசிலாந்து பேரரசின் தூதர் திருமதி செனில் அஞ்சலீன் மெக்லுயி, ருவாண்டா குடியரசின் தூதர் எர்னஸ்ட் ரவம சியோ, மொரிஷியஸ் குடிய ரசின் தூதர் அரீ குமார் ஜெகசூ மற்றும் பெனின் குடியரசுத்தூதர் ஆண்ட்ரே சன்ரா ஆகியோரே நியமனப் பத்திரங்களை ஜனாதிபதியிடம் கையளித்தனர். (ச-400)

## தடை செய்யப்பட்ட பால்மாவை பயன்படுத்தவேண்டாம்

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு. ஓக. 15

விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள பால்மா வகைகள் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டிருந்தாலும் அவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

வர்த்தகச் சந்தையில் இருந்து



அப்புறப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ள பால் மாக்களைத் தவிர்ந்த ஏனைய பால்மா வகைகள் தடை செய்யப்படவில்லை.

அதனால் பால்மா வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்ப டுவதற்கு வாய்ப்பில்லை என்று சுகாதார அமைச்சின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் பால்மா நிறுவனங்களால் நாட்டுக்குத் தருவிக்கப்படும் அனைத்து வகைப் பால் மாக்களில் விஷத்தன்மை கொண்ட பக்றீரியா உள்ளதா என்று தொடர்ச்சியான பரிசோத னைகள் நடத்தப்படும் என்று அவர் சுட்டிக் காட்டினார். (ச-22)

# பால்மா சிக்கலை ஆராய அமைச்சரவை உபகுழு

## இன்று யோசனை முன்வைப்பு

கொழும்பு, ஒக. 15
பால் மா பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கும், உணவுப் பொருள்கள் தொடர்பில் மேற் கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்த சிபாரிசுகளை முன்வைப்பதற்கும் என அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.


உப குழு நியமன யோசனை இன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் மைத் திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று பகல் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது பால்மாவில் டி.சி.டி. என்ற இரசாயனப் பதார்த் தம் கலந்துள்ள விடயம் சம்பந்தமாக எழுப்பப் பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பால் மா பிரச்சினை தொடர்பில் விசாரணை அறிக்கை மூலம் நாம் ஆலோசனையை பெற்றுள்ளோம். சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளோம்.

மக்களுக் குச் சிறந்த சுகாதாரத் தன்மை உணவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு அர்ப் பணிப்புடன் செயற்படும். இதன் நிமித்தம் அமைச் சரவையில் யோசனையொன்றை முன் வைக்கவுள்ளேன்.

இதனூடாக உணவு வகை சம்பந்த மாக எதிர்காலத்தில் சிறந்ததொரு திட்டத்தை வகுக்கலாம் - என அமைச்சர் குறிப்பிட்டார்.



கே.கே.எஸ். வீதியில் குளப்பிட்டிச் சந்தியில் நேற்று முற்பகல் ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் சென்ற கொக்குவிலைச் சேர்ந்த வை. கேதீஸ் (வயது-33) என்பவர் இடுப்பில் எலும்பு விலகி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (த-4-21)

# விமலும் சம்பிக்கவும் வடக்கு தேர்தலில் குளறுபடி செய்வர்

## விக்கிரமபாகு கட்டியம்

"இனவாதத்தைத் தூண்டுவதையே வேலையாகக் கொண்ட விமல் வீர வன்ஸ, பாட்லி சம்பிக்க ரணவக்க போன்றோர் வடமாகாண சபைத் தேர்தல் சுதந்திர மாக நடைபெற ஒரு போதும் இடமளிக்கமாட்டார்கள்" என நவசம சமாஜக் கட்சி யின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணா ரத்ன தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் வராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

தற்போது அரசு கடுமையான சிக்கலுக் குள் சிக்கிக் கொண்டிருக்கிறது. இதனால், மக்களை பற்றி சிறிதும் சிந்திக்காது நாட்டின் உடமைகளை சர்வதேசத்துக்குத் தாரைவார்கிறது. தாக்குதல்களை நடத்தி விட்டு, பின்னர் மன்னிப்புக் கேட்பது அரசுக்கு வழக்கமாகி விட்டது. இந்த பள்ளிவாசல் தாக்கியமைக்கும் மன்னிப்புக் கேட்டு அரசு தப்பிக்க முயற்சிக்கிறது.

அரசு வடமாகாண சபைத் தேர் தலை நடத்துவதில் மும்முரமாக செயற் பட்டு வருகிறது. ஆனால், அரசுக்குள் இனவாதம் பேசிக் கொண்டிருக்கும் விமல் வீரவன்ஸ, பாட்டலி சம்பிக்க ரணவக்க போன்றோர் தேர்தலை சுதந்திரமாக நடத்தவிடாமல் எதாவது குளறுபடிகளை செய்வார்கள்" என்றார்.

# இலங்கை படையதிகாரியை திருப்பியனுப்பியது சுவீடன்

ஸ்ரொக்ஹோம், ஒக. 15
சுவீடனில் அரசியல் தஞ்சம் கோரிய இலங்கைக் கடற்படையின் முன்னாள் அதிகாரி ஒருவரைச் சுவீடன் அதிகாரிகள், இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளனர்.

இந்த அதிகாரி தனக்கு மரண அச்சுறுத்தில் இருப்பதாகப் பொய்யான ஆதாரங்களை முன் வைத்து சுவீடனில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தார் எனக் கூறப்படுகிறது.

தான் விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தாக இந்த அதிகாரி சுவீடன் அதிகாரிகளுக்குக் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

நாடு கடத்தப்பட்ட கடற்படையின் முன்னாள் அதிகாரி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. (த)

# 8 பொலிஸார் இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக. 15
தனமல்வில பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 8 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கஞ்சா கைப்பற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களில் 8 பொலிஸாரே இவ்வாறு பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முற்றுகை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்ட கஞ்சாவை முழுமையாக நீதிமன்றத்தில் கையளிக்காமல் அதிலொரு பகுதியை இவர்கள் மறைத்து வைத்திருந்ததாக விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்துள்ளார். (த)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# 'கொலையாளி ராஜபக்ஷ' கொழும்பில் நேற்று கோஷம்

திபதி செயலகத்தை நோக்கிச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், "கொலையாளி ராஜபக்ஷவை விரட்டியடிக்க வேண்டும்", "தண்ணீருக்கு குண்டுதான் பரிசா?" - என்றெல்லாம் கோஷமெழுப்பினர்.

**பஸ் மீது ஐ.தே.க. எம்.பிக்கள்**

ஐ.தே.கவின் எம்.பிக்கள் சிலர் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் இருந்த பஸ் ஒன்றின் மீது ஏறி கோஷமெழுப்பினர்.

இதனால் அவ்விடத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. செயலகத்தை சூழப் பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும், கலகம் அடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நேற்றைய ஆர்ப்பாட்டத்தால் காலி வீதியில் பெரும் போக் குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அவ்வீதியூடாக நடந்துசென்ற மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

# ஆள் கடத்தலில் கடற்படைக்கு தொடர்பு

காரி ஒருவர் தகவல் வெளியிட்டார் என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் கடற்படையினர், சமிக்ஞைப் பிரிவில் பணியாற்றுபவர்களாவர்.

இவர்கள் 1 மில்லியன் ரூபா வங்கிச் சீட்டுகளுடன் வாகனம் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தபோது கந்தளாயில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், வாழைச் சேனை, கந்தளாய் உள்ளிட்ட பகுதிகளில் 11 நாள்களாக நடத்தப்பட்ட விசாரணையை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை காலியில் இருந்து 111 பேருடன் சென்ற அகதிகள் படகு ஒன்றை இலங்கைக் கடற்படைப் பற்றி, கரைக்குக் கொண்டு வந்துள்ளது. இதில் இருந்தவர்களில் மூவர் சிங்களவர்கள். மற்றவர்கள் அனைவரும் தமிழர்கள் என்று கடற்படைப் பேச்சாளர் தெரி வித்தார்.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த கொலம்பகே, கடந்தவார இறுதியில் ஆஸ்ரேலியாவுக்குச் சென்று படகு அகதிகள் விவகாரம் குறித்து பேச்சு நடத்தியுள்ள நிலையில், அகதிகள் கடத்தலுடன் இலங்கைக் கடற்படையினருக்கு உள்ள தொடர்பு அம்பலமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (த-ச)

# இந்தியாவுக்கு ஆயுதங்களை இலங்கை விற்கவேயில்லை

நாடுகளில் இருந்து 23.5 பில்லியன் ரூபா பெறுமதி யான ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாகக் குறிப்பிட் டிருந்தார்.

இந்தியாவின் பி.ரி.ஐ செய்தி நிறுவனம்மற்றும், ஊடகங்கள்பலவும் இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தன.

இது பொய்ச்செய்தி என்று இலங்கை இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் ஒரு போதும் இந்தியாவுக்கு ஆயுதங்களை விற்கவில்லை என்று அவர் கூறியுள்ளார். (த)

## கூட்டமைப்பு ஆதரவாளர்கள் வவுனியாவில் நேற்றுக் கைது

எம்.எம்.ரதனின் ஆதரவாளர்கள், கனகராயன் குளம்- பெரியார்குளம் பகுதியில் மக்களுக்கான தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது இவர்களைப் பின் தொடர்ந்த சிலர் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது என்று மிரட்டியுள்ளனர். அத்துடன் கனகராயன்குளம் பொலிஸாருக்கும் தகவல் கொடுத்துள்ளனர். அங்கு வந்த பொலிஸார் " நீங்கள் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டுவதாக எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. எனவே பொலிஸ் நிலையத்துக்கு வாருங்கள்" என பொலிஸார் அவர்களை அழைத்துச்சென்றுள்ளனர். அங்கு விசாரணைகளின் பின்னர் இருவரையும் ஆள் பிணையில் செல்ல அனுமதியளித்தது டன் வாகனத்தை தொடர்ந்து தடுத்து வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டது.

சம்பவம் தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸாரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது தமக்கு கிடைத்த முறைப் பாட்டை அடுத்து இருவர் கைது செய்யப்பட்டதாகவும் பின்னர் விடுவிக்கப் பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-400-422)

**தவறிவிட்டது**

சிவகுமாரன் சிதர்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (902832092V) சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் வரிப் பத்திரம் என்பன (09.08.2013) வெள்ளிக்கிழமை கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 077 7443 (31367) (7.6.3)

**தவறிவிட்டது**

அருளானந்தராசா கிளின்றறி டிலக்சன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. (933594378V) ஓமந்தைக்கும் வவுனியாவுக்கும் இடையில் 12.08.2013இல் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (37692) (7.6.3)
தொடர்பு: 077 457 8653, 077 728 6236

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**11ஆம், 10ஆம் அணி மாணவர்களுக்கான 1ஆம் 2ஆம் வருட உடற்கல்வி டிப்ளோமா பரீட்சைகள்**

11ஆம் அணி 1ஆம் வருட மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை, 10ஆம் அணி 2ஆம் வருட மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை ஆகியவை நடைபெற உள்ளமையால் இப்பரீட்சைகளுக்கு தோற்ற ஏற்கனவே விண்ணப்பித்த மாணவர்கள் விளையாட்டு விஞ்ஞான அலகிற்கு சமுகமளித்து தங்கள் வரவினை இணைப்பாளரிடம் உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்படி 1ஆம், 2ஆம் வருட பரீட்சைகளுக்குத் தோற்ற விரும்பும் மீள்பரீட்சார்த்திகள் விளையாட்டு விஞ்ஞான அலகில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 23.08.2013 இக்கு முன்பாக விளையாட்டு விஞ்ஞான அலகில் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம். (சி/11172) (10,0)

**Journey பஸ் விற்பனைக்கு**

63-2xxx தொடரிலக்கம் உடைய நல்ல நிலையில் உள்ள Isuzu Journey Custom Box A/C, Power Door, 4BD1 பஸ் விற்பனைக்குண்டு.
விலை 27 இலட்சம் ரூபா (27 Lacks)
தொடர்புகளுக்கு: 0715184008 (பாணந்துறை)



**கதிர்காமத்துக்குரிய போக்குவரத்து சேவை**

கதிர்காமத் தீர்த்தத் திருவிழாவிற்கு செல்லும் அடியார்கள் வசதி கருதி 19.08.2013 திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கதிர்காமம் செல்வதற்குரிய போக்குவரத்து ஒழுங்கினை சங்கரத்தை சிற்றி (CITY) போக்குவரத்து சேவையினர் மேற்கொண்டுள்ளனர்.
விரும்பும் அடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 908 0435, 077 466 9641, 021 321 1560 (C/11170) (7.6.3)

**விற்பனைக்கு**

புங்கன்குளம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் 12/2 வில்வம் வீதி, யாழ்ப்பாணத்தில் 4 பரப்புக் காணியில் அமைந்த வீடும், 1½ பரப்பு அளவுடைய 2 துண்டுக் காணிகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 851 5510 (31364) (7.6.3)

## போட்டி முடிவு

கம்பர்மலை யங்கம்பன்ஸ் உதைபந்தாட்டத் தொடர்



யாழ்ப்பாணம், ஓக.15

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுதியுடன் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளை யாட்டுக் கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய் கிழமை இடம்பெற்ற ஆட்டத் தில் சக்கோட்டை சென்.சேவி யர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகத்துக்கும், கலைவாணி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம் பெற்ற இந்த ஆட்ட்த்தில் சக் கோட்டை சென்.சேவியர் விளை யாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற் றது.

சிறந்த வீரரராக சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இருதய ராஜ் தெரிவானார். (ற-23)

## கடற்கரைக் கரப்பந்தாட்டம்

# ஆடவர், மகளிர் பிரிவுகளில் மேல் மாகாணம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக.15

முல்லைத்தீவில் ஆண், பெண் இருபாலாருக்குமான கடற் கரைக் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில், இருபிரிவுகளிலும் மேல் மாகாண அணி வெற்றி பெற்றுச் சம்பிய னாகத் தெரிவாகியது.

முதலில் இடம்பெற்ற ஆண்க ளுக்கான இறுதியாட்டத்தில் மேல் மாகாண அணியை எதிர்த்து வடமேல் மாகாண அணி மோதியது.

3 செற்களைக் கொண்ட இறுதி யாட்டத்தில் மேல்மாகாண அணி 21:15, 21:17 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற் றுச் சம்பியனாகத் தெரிவாகி யது.



அதேபிரிவில் மூன்றாம் இடத் துக்கான ஆட்டத்தில் சப்பிர கமுவ மாகாண அணியை எதிர்த்து தென்மாகாண அணி மோதியது.

அதில் முதற்சுற்றை 21:19 என்ற செற் கணக்கில் தென்மாகாண அணி கைப்பற்றியது. எனி னும் அடுத்த இரு சுற்றுக்களை யும் 21:17, 21:15 என்ற செற் கணக்கில் கைப்பற்றிய சப்பிரக முவ மாகாண அணி மூன் றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

அடுத்து இடம்பெற்ற பெண்க ளுக்கான இறுதியாட்டத்தில், மேல்மாகாண அணியை எதிர்த்து தென்மாகாண அணி மோதியது.

3 செற்களைக் கொண்ட ஆட் டத்தில் மேல்மாகாண அணி 21:13, 21:08 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

அதேபிரிவில் மூன்றாம் இடத் துக்கான ஆட்டத்தில் சப்பிரக முவ மாகாண அணியை எதிர்த்து வடமேல் மாகாண அணி கள மிறங்கியது.

அதில் வடமேல் மாகாண அணி 21:05, 21:14 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக் கிக் கொண்டது.

(ற-23)

## உதைபந்து தொடர் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஓக.15

நவாலி சென்.பீற்றர்ஸ் விளை யாட்டுக் கழகம் நடத்தும் கு.நேச ராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந் தாட்டத் தொடர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சென்.பீ ற்றர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாக வுள்ளது.

இந்த உதைபந்தாட்டத் தொடர், யாழ். உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்க ளுக்கு இடையே விலகல் முறை யில் நடத்தப்படவுள்ளதுடன், ஓர் அணியில் 9 பேர் பங்கு பற்றும் வகையில் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ற-23)

## யாழ். மாணவிக்கு தட்டெறிதலில் நிற வர்ண விருது

வலி.வடக்கு, ஓக.15

கொழும்பு சுகததாச விளை யாட்டரங்கில் இலங்கை மெய்வல் லுநர் சங்கத்தால் நடத்தப்பட்ட கனிஷ்ட வீரர்களுக்கான தட களப் போட்டிகளில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை யைச் சேர்ந்த வீராங்கனை மதிவதனன் தாட்சாயினி 14 வயதுப்பிரிவினருக்கான தட்டெறி தலில் நிறவர்ணத்தைப் பெற் றுக் கொண்டார்.

இவர் 18.66 மீற்றர் தூரம் தட் டெறிந்து நிறவர்ண விருதைத் தட்டிச் சென்றுள்ளார். (ற-86)

## கம்பர்மலை யங்கம்பன்ஸ் மென்பந்து கிரிக்கெட்

# கொக்குவில் ஏபி அணி இறுதியாட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஓக.15

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத் தும் '20/20' மென்பந்து கிரிக் கெட் சுற்றுத் தொடரின் இறுதி யாட்டத்துக்கு கொக்குவில் ஏபி தகுதி பெற்றுள்ளது.

முதலாவது அரையிறுதியாட் டத்தில் கொக்குவில் ஏபி அணியை எதிர்த்து அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஏபி அணி 20 பந் துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றுக்கொண் டது.



அதில் கஜீவன் 19 ஓட்டங்களை யும், றஜீவன் 13 ஓட்டங்களை யும், மயூரன், ஜெனே ஆகி யோர் தலா 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி சார்பில் சரண்ராஜ், ஜன்சன் ஆகியோர் தலா 3 இலக்குக ளையும், தயாளன் 2 இலக்குக ளையும் வீழ்த்தினர்.

130 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு களமிறங்கிய அளவெட்டி மத்திய விளை யாட்டுக் கழகம் 100 ஓட்டங்க ளுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

அதில் காந்தசீலன் 37 ஓட்டங்க ளையும், றகீம் 13 ஓட்டங்களை யும், புருஷோத்தமன் 16 ஓட் டங்களையும், ரகுவரன் 10 ஓட்டங்களையும் தமதுஅணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கொக்குவில் ஏபி அணிசார்பாக அகிலன், பார்த் திபன் ஆகியோர் தலா 3 இலக் குகளை வீழ்த்தினர். (ற-23)

## கிரிக்கெட் சுற்றுத் தொடருக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக.15

திருநெல்வேலி முத்துத் தம்பி விளையாட்டுக் கழகத்தினரும், சைவ வித்தியாசாலை நண்பர் களும் இணைந்து மாவட்ட ரீதியாக மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடத்த வுள்ளனர்.

6 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக வும், 9 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தாகவும் இருதொடர்கள் நடத் தப்படவுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட அணிக ளைக் கொண்ட இந்தச் சுற்றுத் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப் பங்களைச் சமர்ப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரி வித்துள்ளனர். (ற-400)

## ஓமந்தை மத்திய கல்லூரிக்கு புதிய ஆடுகளம்

யாழ்ப்பாணம், ஓக.15


இலங்கை துடுப்பாட்டச் சங்கத் தின் நிதி உதவியுடன் வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்கம் ஓமந்தை மத்திய கல்லூரிக்கு கிரிக்கெட் ஆடுகளம் ஒன்றை அமைத்துக் கொடுக்கவுள்ளது. சுமார் 5 லட்சம் ரூபா செலவில் ஆடுகளம் அமைக்கும் பணி கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக் கப்படுகின்றது. அத்துடன் வலைப் பயிற்சிகளை மேற்கொள்வதற் கான திடலை அமைக்கும் பணி களும் நடைபெற்று வருகின் றன என்றும் மேலும் தெரி விக்கப்படுகின்றது. (ற-23)

## மீண்டும் வருகிறார் டுமினி

இந்தியாவுக்கு எதிரான தென் னாபிரிக்க அணியில் நட்சத் திர வீரர் டும்னி இடம்பெற் றுள்ளார்.

தற்போது இந்தியா 'ஏ' கிரிக் கெட் அணி தென்னாபிரிக்க சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந் நிலையில் இவ்விரு அணிக ளும் மோதும் முதல் டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை ரஸ்டன்பேர்க் நகரி லும், இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை பிரிட் டோரியா நகரிலும் நடை பெற உள்ளன.

அந்தத் தொடருக்கான தென் னாபிரிக்க அணி அறிவிக்கப் பட்டுள்ளது. அதில் நட்சத்திர வீரர் டும்னி, பார்னல் ஆகி யோர் இடம்பெற்றுள்ளனர். கடந்தாண்டு நவம்பர் மாதம் நடந்த டெஸ்ட் ஆட்டங்களில் டும்னி கடைசியாக விளை யாடினார் என்பது குறிப் பிடத்தக்கது. (ற)




## இஷின் பயேவாவுக்கு தங்கம்

நடைபெற்றுவரும் 14ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் பெண்கள் பிரிவுக் கான கோல் ஊன்றித் பாய்தலில் ரஷ்யாவின் எலினா இஷின் பயேவா தங்கம் வென்றுள் ளார். இறுதிச்சுற்றில் அவர் 4.89 மீற்றர் உயரம் தாண்டி தங்கம் வென்றார். அதன் மூலம் உலக தடகளப் போட்டி யில் 3ஆவது முறையாக உலக சம்பியனாகத் தெரிவானார் ஆனார்.

இரண்டாம் இடத்தை அமெரிக்கா வின் ஜெனிபர் சுர்ரும், மூன் றாம் இடத்தை கியூபாவின் யாரிஸ்லே சில்வாவும் பெற்றுக் கொண்டனர். (ற)

## லீமன் எச்சரிக்கை

சிறப்பாக விளையாடவில்லை என்றால், அணியிலிருந்து நீக் கப்படுவீர்கள் என்று ஆஸ்தி ரேலிய அணியின் பயிற்சியா ளர் டேரன் லீமேன் கடுமை யாக எச்சரித்துள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 4 ஆவது ஆட்டத்தில், இங்கி லாந்து அணியிடம் ஆஸ்திரே லிய அணி தோல்வியடைந் ததை அடுத்தே இந்த எச் சரிக்கையை விடுத்துள்ளார் லீமன்.

"துடுப்பாட்ட வீரர்கள் தங்களது தவறுகளை அறிந்து கொண்டு திருத்திக் கொள்ள வேண்டும். சிறப்பாக விளையாடவில்லை என்றால் அணியிலிருந்து நீக்கப் படுவார்கள். அவர்களுக்கு பதி லாக திறமையான வீரர்களை தெரிவு செய்ய தயங்கமாட் டோம்" என்று தெரிவித்துள் ளார் லீமன். (ற)

## பயிற்சிகளின் பின்னர் நாடு திரும்பினர் யுவராஜ், சகீர்

இந்திய அணி வீரர்களான யுவராஜ் சிங் மற்றும் சகீர்கான் ஆகியோர் ஆறுவார பயிற்சி முடிந்து இந்தியா திரும்பினர்.

புற்றுநோய்த் தாக்கத்திலிருந்து மீண்ட யுவராஜ், '20/20' உலக கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் இடம் பெற்றார். பின்னர் அணியில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்த தவறியமை காரணமாக அணி யில் இருந்து நீக்கப்பட்டார்.

அவரைப் போல வேகப்பந்து வீச்சாளர் சகீர்கானும் தற் போதைய அணியில் இல்லை. இவர்கள் இருவரும் 2015 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலக கிண்ண அணியில் இடம் பெற வேண்டும் என்று கடுமையாக முயற்சி செய்கின்றனர்.


இதற்காக, பிரான்ஸ் சென்று புகழ் பெற்ற டிம் எக்செட்டரிடம் பயிற்சிகளை மேற்கொண்ட னர். ஆறு வாரம் நடந்த இந்த கடின பயிற்சிக்குப் பின், இரு வரும் தற்போது இந்தியா திரும் பியுள்ளனர்.

இதுகுறித்து யுவராஜ் சிங் வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தி யில்,

"ஆறு வார கால பயிற்சி, ஒரு வழியாக நல்லவிதமாக முடிந் தது. இனி எல்லாம் நல்ல நேர மாக அமையும் என்று நம்புகி றேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)



# ஹீதர் நைற், மார்ஷ் அபாரம் பலமடைந்தது இங்கிலாந்து




இங்கிலாந்தில் நடைபெற்று வரும் மகளிர் ஆஷஸ் டெஸ்ட் போட்டி சமநிலை நோக்கி நகர்கிறது.

போட்டியின் மூன்றாம் நாளில் ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனை ஹீதர் நைற்றின் பொறுப்பான சதத்தின் உதவியுடன் இங்கிலாந்து அணியும் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்று ஆஸ்திரேலிய அணியின் வெற்றிக் கனவுக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது.

6 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்தது இங்கிலாந்து அணி. ஹீதர் நைற்றும். லாரா மார்ஷும் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப் படுத்தினர். இவர்கள் இருவரும் இலக்குகளை பாதுகாத்துக் கொண்டதோடு மெல்ல மெல்ல அணியின் ஓட்ட எண்ணிக்கையையும் உயர்த்தினர். இதனால் மிகக் குறைவான ஓட்ட எண்ணிக்கைக்குள் சுருண்டு விடும் என எதிர்பார்க்கப்பட்ட இங்கிலாந்து மகளிர் அணி தனது முதல் இன்னிங்ஸுக் காக சகல இலக்குகளையும் இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இங்கிலாந்து சார்பில்மூன்று வீராங்கனைகள் மாத்திரமே இரட்டை இலக்கை, ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.



துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஹீதர் நைற் 157 ஓட்டங்களையும், மிக நிதானமாக ஆடிய லாரா மார்ஷ் 304 பந்துகளில் 55 ஓட்டங்களையும், சாரா ரெய்லர் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக எரின் ஒஸ் போர்ண் 4 இலக்குகளையும், ஹொலி பேர்லிங் 2 இலக்குகளையும், எலைஸ் பெரி, மேகன் ஸ்கட், சாரா கோய்ற் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 3ஆவது நாள் முடிவில் ஒரு இலக்கை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.


இதன் மூலம் அந்த அணி 81 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மெக் லனிங் ஆட்டமிழக்காமல் 29 ஓட் டங்களையும், றாசெல் ஹெய்ன்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றனர் பந்துவீச்சில் ஜெனி ஹன் ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

4 நாள்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த ஆஸ்திரேலிய அணி 6 இலக்குகளை இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றுதங்களது இன்னிங்ஸை இடைநிறுத்தியிருந்தது. இன்னும் ஒரு நாளே எஞ்சியிருப்பதால் இந்தப் போட்டி சமநிலையில் முடிவடைவது உறுதியாகி உள்ளது. (ங)

# தவறவிட்ட முச்சதம்

தென்னாபிரிக்க "ஏ" அணிக்கெதிரான ஆட்டத்தில் முச்சதமொன்றைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் இருந்தபோதும் அதனை தான் தவற விட்டுள்ளேன் என்று இந்திய 'ஏ' அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான் தெரிவித்துள்ளார்.




தென்னாபிரிக்க "ஏ" அணிக்கெதிரான போட்டியில் 150 பந்து களில் ஷிகர் தவான் 248 ஓட்டங்களைக் குவித்திருந்தார். எனினும் அவர் 45 ஆவது பந்துப் பரிமாற்றத்தின் போது ஆட்டமிழந்திருந்தார். இதன் பின்னர் நிருபர்களுக்கு பேட்டியளித்த போது ஷிகர் தவான் தெரிவித்ததாவது:

"50 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டிகளில் இதுவரை எந்தவொரு வீரரும் முச்சதம் பெற்றிருக்கவில்லை. இந்த நிலையில் முச்சதமடித்து, அந்தச் சாதனையை என்னால் படைக்க முடியும் என்பது குறித்து அறிந்திருந்தேன், எனினும் 45 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் நான் ஆட்ட மிழந்த போது இன்னமும் நிலைத்து நின்று துடுப்பெடுத் தாடியிருந்தால் முச்சதத்தைப் பெற்றிருக்கலாம் என்ற உணர்வு ஏற்பட்டது.

இந்தியாவின் நட்சத்திரங்களான சச்சின் டெண்டுல்கர், வீரேந்தர் செவாக் ஆகியோர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இரட்டைச் சதங்களைப் பெற்றுள்ளனர். எனினும் அவர்களின் இரட்டைச்சதங்கள் சர்வதேசப் போட்டிகளில் பெறப்பட்டதால், அவை உயர்ந்த இரட்டைச்சதங்கள் எனக் கருதுகிறேன். அவர்களுடன் எனது இரட்டைச் சதத்தை ஒப்பிட முடியாது" என்றுள்ளார். (ங)

# இக்கட்டில் கலிஸ்

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் தனது எதிர்காலம் என்ன? என்பது குறித்துத் தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் கலிஸ் முடிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவின் புதிய பயிற்றுவிப்பாளர் றசல் டொமிங்கோவின் வேண்டுகோள் காரணமாகவே இந்த நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார்.



தென்னாபிரிக்காவின் டெஸ்ட் அணியில் தொடர்ந்தும் முக்கியமான வீரர் ஜக் கலிஸ். அவர் இறுதியாக 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கவில்லை. எனினும் 2015 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளில் தென்னாபிரிக்க அணி சார்பில் பங்குபெறும் தனது ஆவலை கலிஸ் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

இதற்கு முன்னர் தென்னாபிரிக்க அணியின் பயிற்றுவிப்பாளராக கரி கேர்ஸ்ரன் பணியாற்றிய போது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஜக் கலிஸ் விரும்பும் போது பங்குபற்றலாம் என்று சலுகை வழங்கப்பட்டிருந்தது.

தென்னாபிரிக்க அணிக்கு ஜக் கலிஸ் வழங்கிய மகத்தான பங்களிப்பை கௌரவிப்பதற்காகவே இந்தச் சலுகை அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

தற்போது தென்னாபிரிக்க அணியின் புதியபயிற்றுவிப்பாளராக றசல் டொமிங்கோ பொறுப்பேற்றுள்ளார். இவர் கரி கேர்ஸ் ரன் வழங்கியதைப் போன்று கலிஸுக்கு சலுகைகளை வழங்கமாட்டார் என்பதை வெளிப் படுத்தியுள்ளார்.

"தென்னாபிரிக்காவின் டெஸ்ட் அணியில் தொடர்ந்தும் முக்கியமான வீரர் ஜக் கலிஸ். அவர் இறுதியாக 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க வில்லை. எனினும் 2015 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக்கிண்ண போட்டிகளில் தென்னாபிரிக்க அணி சார்பில் பங்குபெறும் தனது ஆவலை கலிஸ் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-

" 2015ஆம் ஆண்டில் இடம் பெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளில் ஜக் கலிஸ் பங்குபெற விரும்பினால், அவர் தென்னாபிரிக்கா சார்பாக ஒரு நாள் சர்வதேசப் போட்டி களில் தொடர்ச்சியாகப் பங்குப்பற்றி தனது திறமையை வெளிப் படுத்த வேண்டும். இல்லா விட்டால் அணியில் அவரது இடம் திறமையான இன்னொரு வீரர் மூலம் நிரப்பப்படும். "என்றுள்ளார்.

புதிய பயிற்றுவிப்பாளரின் இறுக்கமான நடைமுறை காரணமாக அவ்வப்போது ஒரு நாள் போட்டிகளில் தனதுமுடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு ஜக் கலிஸ் தள்ளப்பட்டுள்ளார். (ங)

# றுகுணுவை வீழ்த்தியது பஸ்னாகிர


கோசல குலசேகர

இலங்கையின் உள்ளூர் '20/20' தொடரின் நேற்றைய முதலாவது ஆட்டத்தில் பஸ்னாகிர அணி வெற்றிபெற்றது. றுகுண அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் பஸ்னாகிர அணி 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற றுகுண அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

சீரற்ற காலநிலை காரணமாக இந்த ஆட்டம் 17 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டமாக மாற்றப்பட்டது.

அதன்படி துடுப்பெடுத்தாடிய பஸ்னாகிர அணி 17 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத்திலிருந்தே சீரான இடைவெளியில் அவ்வணி இலக்குகளை இழந்த போதும் இறுதி நேரத்தில் ஓட்டங்கள் குவிக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் பஸ்னாகிர அணி சார்பாக ஜிஹான் ரூபசிங்க 25 பந்துகளில் 32 ஓட்டங்களையும், ஜனக குணரத்ன 31 பந்துகளில் 28 ஓட்டங்களையும், திலகரட்ண சம்பத் 9 பந்துகளில் 15 ஓட்டங்களையும், இசுரு உதான 5 பந்துகளில் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் றுகுண அணி சார்பாக திலகரட்ண டில்ஷான், லசித் மலிங்க இருவரும் தலா 2 இலக்குகளையும், பர்வீஸ் மஹரூப், கௌஷல்ய வீரரத்ன, சீக்குகே பிரசன்ன, இஷான் ஜெயரத்ன ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

121 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய றுகுண அணி 17 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களைமாத்திரம் பெற்று 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் டில்ருவான் பெரேரா 34 பந்துகளில் 24 ஓட்டங்களையும், கௌஷல்ய வீரரத்ன 20 பந்துகளில் 21 ஓட்டங்களையும், சீக்குகே பிரசன்ன 9 பந்துகளில் 20 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 12 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பஸ்னாகிர அணி சார்பாக கோசல குலசேகர 4 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அஞ்சலோ மத்தியூஸ், சச்சித்திர சேனநாயக்க இருவரும் தலா 2 இலக்குகளையும், சுரங்க லக்மால், இசுரு உதான ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ற)

**Online Shopping**

எமது காலாண்டில் உலகளாவிய
125,000 - பார்வையாளர்கள் 13,000 - விரும்புனர்கள்
143 - வாடிக்கையாளர்கள்
இவர்களுக்கு எமது நன்றிகள். இவர்களுடன் நீங்களும் விஜயம் செய்யுங்கள்.
www.tharsfashion.com
ஆவணி 2013 வெற்றியாளர்கள் யோ.முகுந்தன் - 0777 425 888
(ஆசிரியர்-மகேஸ்வரி மகாவித்தியாலயம், நாயன்மார்கட்டு)
தொடர்பு: ப.தாறுரபன் - 077 151 6013 (31371) (10,16)

**உடன் விற்பனைக்கு**

1. உழவு இயந்திரம் site link (புதியவை)
2. கலப்பை Toplink (புதியவை)
3. உழவு இயந்திர ரயர்கள் (பாவித்தவை)
4. பாரவூர்தி (Tippers) ரயர்கள் (பாவித்தவை)

அனைத்தும் 16.08.2013 அன்று பி.ப 3 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 415 0799
முகவரி : இல.274, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(31366) (10,16)


**ரிக்கற் இலவசம், சாப்பாடு இருப்பிடம் இலவசம் 2 இலட்சம் சம்பளம்**

**டென்மார்க்கில் படிக்க உழைக்க இன்னும் சில தினங்கள் மாத்திரம் இந்த வாய்ப்பு**
(30318) (10)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

# பிரெஸ்னின் உற்சாகமே ஆட்டத்தை மாற்றியது

## இங்கிலாந்து அணி வீரர் புரோட்



பிரெஸ்னன் தந்த உற்சாகம் ஆட்டத்தின் போக்கையே மாற்றியது என்று தெரிவித்துள்ளார் இங்கிலாந்து அணி வீரர் புரோட்.

இங்கிலாந்து- ஆஸ்தி ரேலியா அணிகளுக்கு இடையேயான ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் நான்காவது ஆட்டத்தில் இங்கிலாந்து 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

இது ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து பெறும் மூன்றாவது தொடர் வெற்றியாகும்.

ஆஸ்திரேலியா வெற்றி பெற 299 ஓட்டங்களை இங்கிலாந்து நிர்ணயித்திருந்தது. இரண்டு இலக்கு இழப்பிற்கு 168 ஓட்டங்களை எடுத்திருந்த ஆஸ்திரேலியா வெற்றி பெறும் என்றே எதிர்பார்க் கப்பட்டது. ஆனால் புரோட்டின் அபார பந்து வீச்சால் ஆஸ்திரேலியா நிலை குலைந்து இலக்குகளை இழந்தது.

ஆட்ட நாயகன் விருது பெற்ற புரோட் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,


"தேனீர் இடைவேளையின் போது ஆஸ்தி ரேலியாவின் வெற்றியை தடுப்பது குறித்து நானும், பிரெஸ்னனும் ஆலோசனை நடத்தினோம். அப்போது, ஆஸ்திரேலிய வீரர்களுக்கு நம்மால் நெருக்கடி கொடுக்க முடியும். இலக்குகளைப் பற்றி நினைக்கக்கூடாது. ஓட்டம் எடுப்பதை கட்டுப்படுத்தி அந்த வழியில் அவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டும் என்று பேசிக்கொண்டோம். இந்தப் பேச்சு தந்த உற்சாகம் ஆட்டத்தின் போக்கை மாற்றியது." என்று தெரிவித்துள்ளார். (ற)

**இந்தியா செல்லும் பயணிகளுக்கு**

யாழ் மக்களுக்காக
24 மணித்தியாலய சேவையை
விஸ்தரித்துள்ளோம்
கொழும்பு - சென்னை
Colombo-Chennai RTN 1600/=
HNB
Nation Popular Travels & Tours
#128,Brown Road, Jaffna
0214 920 920

## மரண அறிவித்தல்

### கனகசபை மகாலிங்கம் (லிங்கப்பா)



சிறுப்பிட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகசபை மகாலிங்கம் 13.08.2013 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், மயிலிட்டி வடக்கு காலஞ்சென்ற சின்னையா-நாகமுத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ருக்குமணி தேவியின் அன்புக் கணவரும், சாம்பவி, மதிதரன், தசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்சிற்றம்பலம் (France), காலஞ்சென்றவர்களான சிவதேவி, சிவேந்திரன் ஆகியோரின் சகோதரனும், மழவராயர் (இளைப்பாறிய ஆசிரியர்), மாணிக்கவாசகர் ஆகியோரின் பெறா மகனும், சதானந்தன், சிவராசா, சீவரத்தினம், நகுலேஸ்வரி, சிவநேஸ்வரி அம்பிகாதேவி, கமலாதேவி, இந்திராணி, சரஸ்வதி (France) ஆகியோரின் மைத்துனரும், இரத்தின வடிவேலு, காலஞ் சென்றவர்களான சிதம்பர நடராசா, சிவராசா மற்றும் குமாரகுலசூரியர், சபாநாதன், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2013) வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.
(சி/11171) (10,6,3)

தகவல்:
ருக்குமணிதேவி (மனைவி)
077 164 1050

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.